Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

பக்கம் 24 மே 07-13, 2016 செய்தி - 32

# பிரபாகரனின் உடல் எரிக்கப்பட்டது சாம்பல் கடலில் வீசப்பட்டது

## இதைக் கூறியது சரத் பொன்சேகாதான்





தினச்செய்தியில் பிரபாகரனின் உடல் எரிக்கப்பட்டது: சாம்பல் கடலில் வீசப்பட்டது என்று ஜென்ரல் தயாரத்நாயக்கா கூறியிருந்தார்.

அது தவறு பிரபாகரனின் உடல் புதைக்கப்பட்டது என்று தினச்செய்தியின் செய்திக்கு சென்ற 3 ஆம் திகதி பீல்ட்மார்ஷலும் அமைச்சருமான சரத் பொன்சேகா கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே லீடருக்கு கூறியதாக செய்தி பிரசுரமாகி இருந்தது.

அந்த செய்தி வெளிவந்ததையடுத்து முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை தொடர்பு கொள்ள முயற்சித்தோம். அவருடன் தொடர்பு கொள்ள முடியாமல் போனதையடுத்து அவருடைய கட்சியான ஜனநாயக தேசியக் கூட்டணியுடன் தொடர்பு கொண்டு தொலை நகல் மூலம் எமது அக்கறையையும் கேள்வியையும் அனுப்பி வைத்தோம்.

பலமுறை அவருடன் தொடர்பு கொண்டும் அவர் பதில் தரவில்லை. ஆனால் இரண்டாவது முறை நாம் அனுப்பி வைத்த தொலைநகலில் "நீங்கள் எமக்கு சரியான விளக்கம் தரவில்லை என்றால் 8 ஆம் திகதி ஏப்ரல் மாதம் அனுப்பி வைத்த தொலைநகலை பிரசுரிப்போம்"என்று குறிப்பிட்டிருந்தோம். இதுவரை அவரது பதில் கிடைக்காததையடுத்து இங்கே அந்த தொலைநகலை வாசகரின் கவனத்திற்காக பிரசுரிக்கின்றோம்.

02 இல்



உறவுக்குப் பாலம் அமைக்கும் கப்பல் பயணம்

11 இல்

வைகைப்புயல் வடிவேலு

06 இல்

உண்மைகளை உரத்துக் கூறும் உரிமைக் குரல்

தினச்செய்தி வாரமலர்
என்றும் உங்களுடன்

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெருப்பொறுக்கிகளாக இருக்கக்கூடாது

சென்ற செவ்வாய்க்கிழமை (03-05-2015) இலங்கை நாடாளுமன்றத்தில் மிகவும் வெட்கப்பட வேண்டிய சம்பவம் ஒன்று நடைபெற்று அரங்கேறியுள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையின் நடுவில் நின்று கொண்டு 'ரவுடிகள்' போல ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள்.

அதில் ஐக்கிய தேசிய கட்சியின் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான சண்டீத் சமரசிங்க தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் நடந்துகொண்டிருக்கும் போது நாடாளுமன்ற பார்வையாளர் பகுதியில் நிறைய மாணவர்கள் வீற்றிருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம், ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்ட விடயம் மாணவர்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்த வழிவகுத்து விட்டது.

அன்று நாடாளுமன்றத்தில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா, மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பாக கருத்துக்களைத் தெரிவிக்கும் சமயம், கூட்டு எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தும், கோஷம் எழுப்பியும், சபை மத்தியில் வந்து கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதைத் தொடர்ந்தே இக் கைகலப்பு நடைபெற்றது. சபாநாயகர் கரு ஜெசூரிய இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை அறிக்கை ஒன்று சமர்பிக்குமாறு உப சபாநயகர் திலங்க சுமதிபால மற்றும் குழுக்களின் உப தலைவரான செல்வம் அடைக்கலநாதனனையும் நியமித்தார். சென்ற புதன்கிழமை இந்தக் குழு அறிக்கையை சமர்ப்பித்தது.

அதையடுத்து, சென்ற 5 ஆம் திகதி அறிக்கை சம்பந்தமாக சபையில் பேசிய சபாநாயகர் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்ததாகவும் கூறினார்.

சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல இக் கலவரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என இனங்காணப்பட்ட இரு உறுப்பினர்களையும் சபையிலிருந்து இடைநிறுத்தி வைப்பது என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து உள்நாட்டு, கலாசாரம், வயம்பாய் அபிவிருத்தி அமைச்சின் உதவி அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினருமான பாலித தேவபெருமாவையும், கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினருமான பிரசன்ன ரணவீராவையும் இந்த 6 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு இடைநிறுத்துவதாக அறிவிக்கப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உதாரண புருஷர்களாக வாழ வேண்டும். அதனை விடுத்து காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வது வேதனைக்குரியதாகும்.

எனக்குத் தெரிந்த மட்டில், 1992 ஆம் ஆண்டு காமினி லொக்குகே அன்றைய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர், சபாநாயகர் இருக்கையடியில் வைத்து வாசுதேவ நாணயக்கார என்ற உறுப்பினரை அடித்து இழுத்துச் சென் றது வேதனைக்குரியதாகும்.

அதேபோல ஜூன் 2004 இல் வணக்கத்துக்குரிய அக்பீமண தயாரட்ண தேரர் மற்றும் கொலனவே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆகியோரை நாடாளுமன்றத்தில் வைத்து அடித்துக் காயப்படுத்தினர். இத் தாக்குதலில் அன்றைய உறுப்பினரான மேர்வின் சில்வாவின் பெயர் பலமாக அடிபட்டது.

2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அன்றைய ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழருமான தியாகராஜா மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் குழப்பங்கள் ஏற்படுத்த பலமுறை காரணமாக இருந்துள்ளார்.

ஒரு முறை சபாநாயகர் முன் வைக்கப்பட்டிருந்த செங்கோலை கொண்டு ஓடி ஒழிந்தார். அது எல்லாம் வரவேற்கத் தக்கது அல்ல.

இன்று அவர் எம் மத்தியில் இல்லை. இருந்தும் அவரைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெருப் பொறுக்கிகளாக இல்லாமல் மக்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும்.



(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# பிரபாகரனின் உடல்...

மேலும் சண்டே ஒப்சேவரில் செப்ரம்பர் 6 ஆம் திகதி சரத் பொன்சேகா வழங்கிய செய்தியில் பிரபாகரனின் உடல் எரிக்கப்பட்டதாக கூறியிருந்தார்.

மேலும் 23 மே 2009 ஆம் ஆண்டு சரத் பொன்சேகா கொடுத்த வேறொரு பேட்டியில் பிரபாகரன் கொல்லப்பட்டார். அவரது உடலை யாரும் தருமாறு கூறவில்லை. எனவே அவரது உடல் எரிக்கப்பட்டு சாம்பல் கடலில் வீசப்பட்டதாக கூறியிருந்தார்.

உடல் எரிக்கப்பட்டு சாம்பல் வீசப்பட்டது என்று கூறிய இதே விஷயத்தை ஜெனரல் தயாரா? என்று கூறுவது எந்த விதத்தில் நியாயமாகும் இதற்கு பீல்மார்ஷலே பதிலளிக்க வேண்டும்.

பீல்ட் மார்ஷல் மற்றும் கௌரவ அமைச்சர் சரத் பொன்சேகா,
பிராந்திய அபிவிருத்தி அமைச்சு
கொழும்பு,
08 ஏப்ரல்.

வணக்கம்.

தமிழ் மொழியில் வாரமுடிவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பபடும் பத்திரிகைதான் தினச்செய்தி.இதன் இணையப் பதிப்பிலும் செய்திகள் தினமும் பதிப்பிக்கப்பட்டு வெளிவருகின்றன.

ஜெனரல் தயா ரத்நாயக்க (முன்னாள் இராணுவ தளபதி) யுடன் கண்ட நேர் காணலின்போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் யுத்தகளத்தில் கொல்லப்பட்டு அதன் பின்னர் உடல் எரிக்க்கப்பட்டு சாம்பல் கடலில் வீசப்பட்டதாகக் கூறியிருந்தார்.

அதேபோல தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவின் மாஜிப் பொறுப்பாளரான பொட்டம்மான் என்று அழைக்கப்படும் சண்முகலிங்கம் சிவசங்கர் யுத்த முனையில் கொல்லப்பட்டதாகவும், பொதுமக்களால் உடல் இனங் காணப்பட்டதாகவும், இவருடைய உடலும் எரிக்கப் பட்டு சாம்பல் கடலில் வீசப்பட்டதாகவும் இவர் பேட்டியில் கூறியிருந்தார். இதை எமது தினச்செய்தி இதழில் பிரசுரித்திருந்தோம்.

சமீபத்தில் எமக்களித்த தகவலுக்கு முரண்பாடான செய்திகளை நீங்கள் கூறியதாக கவனித்தோம். இந்த வருடம் ஏப்ரல் 03 பிரசுரமாகிய "சண்டே லீடர்" இல் பிரபாகரனின் உடல் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. மாஜி இராணுவத் தளபதி சரத் பொன்செகா இது பற்றிக் குறிப்பிடுகையில் இராணுவத்திற்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையிலான இறுதிப்போரின் பின் னர் நந்திக்கடலில் கண்டெடுக்கப்பட்ட உடல் புதைக்கப்பட்டது என்று கூறியுள்ளார்.

இதைத் தவிர கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஞாயிறு பிரசுரமாகிய "சண்டே ஒப்சேவர்" இதழில் இப்படியொரு நேர்காணல் பிரசுரமாகியிருந்தது. அந்தப் பத்திரிகையைச் சேர்ந்த மஞ்சுளா பெர்னாண்டோ என்பவர் கேள்விகளை தொடுக்க, சரத் பொன்சேகா பதிலளித்துள்ளார்.

கேள்வி : பிரபாகரன் எப்படி இறந்தார்?

**சரத் பொன்சேகா : அவர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்.**

கேள்வி : பிரபாகரனின் உடலுக்கு என்ன நடந்தது?

**சரத் பொன்சேகா : பொலீஸார் சகல விபரங்களையும் பதிந்து விட்டு, DNA பரிசோதனை மேற்கொண்டார்கள். இறந்த உடல்களில் இவரது மூத்த மகனின் உடலும் அடையாளம் காணப்பட்டது. உடல்களை இனங்காண, கருணா அந்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டார். கருணா உடனடியாக உடலை இனங்கண்டு கொண்டார். அதன் பின்னர் உடலை நாம் அங்கிருந்து அகற்ற வேண்டியிருந்தது. எவருமே இறந்த உடலைக் கேட்டு அங்கு வரவில்லை.**

கேள்வி : உடல் அடக்கஞ் செய்யப்பட்டதா அல்லது எரிக்கப்பட்டதா?

**சரத்பொன்சேகா : அது எரிக்கப்பட்டது.**


இன்னொரு செய்தியில் சரத் பொன்சேகா வருமாறு கூறியதாக பிரசுரமாகி உள்ளது.

Economics Times Agencies
23, மே 2009.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இந்த ஞாயிறு "ரிவிர" பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலும், பிரபாகரனின் உடல் எரிக்கப்பட்டதாகவே கூறியிருக்கின்றார்.

"ரிவிர" என்ற இந்தப் பத்திரிகையில், முதல் நாளிரவு முல்லைத்தீவின் வடகிழக்குப் பிராந்தியத்தில் நடைபெற்ற கடும் யுத்தத்தின் பின்னர், செவ்வாயன்று பிரபாகரனின் கொல்லப்பட்ட உடல் சரியாக அடையாளங் காணப்பட்டது என்றும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

நாம் உடலை எரித்து விட்டு சாம்பலை இந்து சமுத்திரத்தில் வீசியிருந்தோம் என்றும் கூறிய இவர், பிரபாகரன் கொல்லப்பட முன்னர் யுத்தத்தின் வெற்றி எமக்குத்தான் என்று எனக்குத் தெரியும். எனினும் பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தி உறுதிப்படுத்தப்பட்ட போது, நான் அளவு கடந்த குதூகலம் அடைந்தேன் என்றும் பேட்டியளித்துள்ளார்.



பிரபாகரன் கொல்லப்பட்டார். உடல் எரிக்கப்பட்டது. சாம்பல் இந்துமகாசமுத்திரத்தில் வீசப்பட்டது என்று ஆரம்பத்தில் கூறியிருந்தீர்கள். ஆனால் இப்பொழுதோ அவர் உடல் புதைக்கப்பட்டது எரிக்கப்படவில்லை என்கிறீர்கள். தயவு செய்து உண்மை நிலையை எமக்குத் தெளிவுபடுத்துங்கள்.

பிரபாகரனது உடல் எரிக்கப்பட்டு சாம்பல் சமுத்திரத்தில் வீசப்பட்டதா அல்லது இவரது உடல் புதைக்கப்பட்டதா?

சமீப காலங்களில் பிரபாகரனது உடல் புதைக்கப்பட்டது என்று சொல்லுமளவிற்கு புதிய தகவல்கள் ஏதாவது உங்களுக்கு கசிந்தனவா என்று சொல்லுங்கள்.

உடல் புதைக்கப்பட்டதாயின் தகவல் பதிவிற்காக, எமக்கு அறியத் தாருங்கள்.

உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கும்,
**கே.ரி. இராஜசிங்கம்,**
**பிரதம ஆசிரியர்**
**தினச்செய்தி.**

# வி.ரி.வி வாழ்க்கை வரலாறு சிங்களத்தில்



(கொழும்பு)

பிரபல தமிழ் வர்த்தக அதிபரான வி.ரி.வி. தேவநாயகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு சிங்கள மொழியில் வெளிவந்துள்ளது.

இந்த வர்த்தக அதிபரின் வாழ்க்கை வரலாறு தமிழில் "இதோ ஒரு வெளிச்சம்" என்ற தலைப்பில் ரி.கே. சந்திரசேகரனால் எழுதி வெளியிடப்பட்டது.

சந்திரசேகரன் எழுதிய தமிழ் நூலை "லொவக் எலியா கல மஹா பகன்க 'தம்ப" என்ற சிங்களப் பெயரில் இந்த நூல் எழுதி வெளி வந்துள்ளது. தேவநாயகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு எவ்வாறு வர்த்தக உலகில் நல்ல உறவைப் பேண வேண்டும். என்பதை வாடிக்கையாளருடன் எவ்வாறான உறவைப் பேண வேண்டும் என்பதையும் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவநாயகம் பிள்ளை, வீரவாகுப்பிள்ளை–முத்துவடிவு ஆகியோருக்கு 7ஒக்ரோபர் 1911ம் ஆண்டு பன்னாம்பறை என்ற தமிழ் நாட்டிலுள்ள குக் கிராமத்தில் பிறந்தார். வீரவாகுப் பிள்ளை இலங்கையில் வர்த்தக முயற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்தார். அவரது வர்த்தகம் நொடித்ததையடுத்து அவர் திரும்ப இந்தியாவிற்குச் சென்று விட்டார்.

தேவநாயகம் பிள்ளை அவரது 6வது வயதில் தாயாரை இழந்தார். 10வது வயதில் தகப்பனாரையும் இழந்தார். அதையடுத்து 12ம் வயதில் இலங்கை வந்து வாழ்க்கையை ஆரம்பித்தார்.

பல சிரமங்களின் மத்தியில் தனது வாழ்க்கையின் பயணத்தை ஆரம்பித்தார். 1943ம் ஆண்டில் தன்னுடைய தேவநாயகம் பிள்ளை என்ற கடையை ஆரம்பித்தார். அதையடுத்து அவரது பிள்ளைகள் ஈஸ்வரன் பிறதர்ஸ் என்ற தேயிலை ஏற்றுமதி, இறக்குமதி கம்பனியை ஆரம்பித்து நடத்தி வருகின்றார்கள்.

சிங்களத்தில் தேவநாயகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டதன் மூலம் ஒரு தமிழன் இந்த நாட்டில் அடிமட்டத்திலிருந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு எவ்வாறு வெற்றி பெற்றான் என்பதைக் காட்டுகின்றது.

அவரை பற்றிய தமிழ்ப் புத்தகத்தை வர்த்தகத்தில் ஈடுபடும் ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டியது அவசியமாகும்.

## கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த தங்கச்சட்டை மனிதர்

(மகாராஷ்டிரா)

தங்கச் சட்டை மனிதர் என்று அழைக்கப்படும் மகாராஷ்டிராவின் புகழ்பெற்ற தொழில் அதிபரும் அரசியல்வாதியுமான பங்கஜ் பராக் (Pankaj Parakh ) கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

சுமார் 98,35,099 ரூபா செலவில் உலகின் மிக விலையுயர்ந்த தங்கச் சட்டை அணிந்தவர் என்று அவருக்கு கின்னஸ் உலக சாதனை புத்தகம் (Guinness World Records (GWR)) சார்பில் கடந்த செவ்வாய்க்கிழமை சான்றிதழ் வழங்கி கௌரவித்துள்ளது.

தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 47 வயதாக பங்கஜ் நாசிக் மாவட்டம் இயோலா நகர துணை மேயராக பதவி வகித்து வருகிறார். 2 ஆண்டுகளுக்கு முன் அதாவது 2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி தனது 45 ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு இந்த தங்கச்சட்டையினை அவர் தைத்தார்.

சுமார் 4.10 கிலோகிராமுடைய இந்த தங்க சேர்ட் தற்போது சுமார் 13 மில்லியன் பெறுமதியாகும். அத்துடன் இவ் ஆடையுடன் இணைந்ததாக தங்க கடிகாரம், சில தங்க சங்கிலிகள், மோதிரங்கள், தொலைபேசிக்கான கவர், மூக்கு கண்ணாடிக்கான சட்டம் என அனைத்தினையும் உள்ளடக்கி சுமார் 10 கிலோக்கிராமாக கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தி.மு.க - காங்கிரஸ் கூட்டணியை வெற்றி பெறச் செய்யுங்கள் -சோனியா காந்தி



(சென்னை)

தமிழகத்தில் செயல்படுகிற ஒரு அரசாங்கத்தை திமுக காங்கிரஸ் கூட்டணி அளிக்கும் என்று சென்னை தீவுத்திடலில் நடந்த பிரச்சார பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறினார்.

இந்தக் கூட்டத்தில் சோனியா காந்தி பேசியதாவது:

இந்தியாவின் மூத்த அரசியல்வாதியான கருணாநிதியுடன் மேடையை பகிர்ந்து கொள்வது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. இந்த வெயில் காலத்திலும் லட்சக்கணக்கில் திரண்டிருக்கும் மக்களை பார்க்கும்போது எனது மகிழ்ச்சி அதிகரிக்கிறது. தமிழகத்தில் சில மாதங்களுக்கு முன்பு வெள்ளம் ஏற்பட்டதால் பேரழிவு ஏற்பட்டது. ஏராளமான பொதுமக்கள் தங்களின் வீடு வாசல்களையும், வாழ் நாள் முழுக்க சம்பாதித்த பொருட்களையும் இழந்தனர். நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்தனர். அப்போது, அதிமுக அரசு எங்கே சென்றது என்று தெரியவில்லை. அதிமுக அரசு மக்களுக்கு உதவவில்லை. மக்கள்தான் மக்களுக்கு உதவினர். அத்தகைய கொடுமையான நேரத்தில் அரசாங்கம் எங்கே போனதென்று தெரியவில்லை. மக்களின் கண்ணீரைத் துடைக்கத் தவறிய அதிமுக அரசு, அத்தியாவசிய பொருட்கள் எதையும் வழங்க வில்லை. வெள்ளத்துக்கான இழப்பீடுகளை நான்கு வாரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று மத்திய நிதியமைச்சர் கூறினார். ஆனால், 4 மாதங்கள் ஆகிவிட்ட பிறகும் இழப்பீட்டுத் தொகை முழுமையாக கிடைக்கவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்தில் தற்போது குடிநீர் பற்றாக்குறை உள்ளது. விவசாயிகளின் நிலம் காய்ந்து கிடக்கிறது. வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் கடலுக்கு சென்றால் அவர்கள் கடத்தப்படுகின்றனர். தமிழக மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. அவர்களை பாதுகாக்காத மத்திய அரசு, வெளிநாட்டு மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. தமிழகத்தில் சமூக நீதி திட்டங்களுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளதால், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள், சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளவர்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகியுள்ளது.தமிழக பிரச்சினைகள் குறித்து மத்திய பாஜக அரசிடம் எதுவும் கேட்டுப் பெறாத அதிமுக, நாடாளுமன்றத்தில் பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுகிறது. அதிமுக பாஜக இடையே ரகசிய கூட்டணி உள்ளதுதான் இதற்கு காரணம். திமுக காங்கிரஸ் கூட்டணி தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என்று சொன்னதால் ஏராளமான பெண்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இவ்வாறு சோனியா காந்தி பேசினார்.

## முதற்தடவையாக கிழக்கு மாகாண சபை அமர்வில் ஆளுநர் விசேட உரை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ கடந்த புதன்கிழமை முதற்தடவையாக கிழக்கு மாகாண சபை அமர்வில் பங்குபற்றி விசேட உரையொன்றினைநிகழ்த்தினார்.

கிழக்கு மாகாண சபை அமர்வுக்கு வருகை தந்த கிழக்கு மாகாண ஆளுநரை கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சந்திரதாச கலப்பதி மற்றும் கிழக்குமாகாண பேரவை செயலாளர் எம். சி.எம்.செரீப் ஆகியோர் வரவேற்றதுடன் பொலிஸாரினால் மரியாதை அனிவகுப்பும் ஆளுநருக்கு வழங்கப்பட்டது. கிழக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் ஆளுநர் நீண்ட உரையொன்றினை நிகழ்த்தியதுடன் பல உயிரோட்டமானகருத்துக்களையும் தெரிவித்தார். மக்களின் தேவைகளை அறிந்து அரசியல் தலைமை உட்பட அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும் விசேடமாககல்வித்துறையில் திருகோணமலை மாவட்டம் பல பின்னடைவுகளை சந்தித்து வருவதாகவும் திருகோணமலை மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறைநிலவுவதாகவும் இருப்பினும் அதிகமான இடமாற்றங்கள் கோரப்பட்டு வருவதாகவும் ஒருபோதும் இடமாற்றம் தற்போதைய நிலையில்வழங்கப்படமாட்டாது என்றும் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதிக்கும் எந்தவொறு செயற்பாட்டிற்கும் தான் அனுமதி வழங்கமாட்டேன் என்றும் இதனைசகலரும் புரிந்து செயற்பட வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

தாம் பதவியேற்ற குறுகிய காலத்தில் கிழக்கு மாகாணம் பல வெற்றிகளை சந்தித்தாகவும் அவற்றுள் இன நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டமை, சம்பூர்மீள்குடியேற்றம் என்பன விசேட வெற்றியாக அமைவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். இந் நிகழ்வில் உரையாற்றிக் கொண்டிருக்கும் ஒரு கட்டத்தில் ஆளுநர்கண்ணீர் வடித்ததுடன் அதற்கு காரணமாக தாம் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே.துரைராஜசிங்கத்துடன் சம்பூர் மீள்குடியேற்ற வைபவம் நடைபெற்றதினம் அங்குள்ள ஒரு கோவிலுக்கு சென்று வழிபட்டு மக்களை சந்தித்த போது குறித்த அமைச்சர் நீங்கள் உண்மையான ஒரு மக்கள் சேவை செய்யும் ஆளுநர்என்று கூறியதை நினைவுபடுத்தினார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர், கிழக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி: மேதினம் என்ன சொன்னது?**

**சி.ரமணன், சில்லாலை.**

பதில் :– அரசியல் தலைவர்கள் இருக்கிறார்கள் எனச்சொன்னது.

**கேள்வி:- தமிழ்க் கட்சிகள் மே தினக் கூட்டங்களில் ஆர்வம் காட்ட வில்லையே,ஏன்?**

**அ. அருமைநாயகம், யாழ்ப்பாணம்.**

பதில்:– தமிழ்த் தேசியத்துக்கும் தொழிலாளர் முன்னேற்றத்துக்கும் முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் உள்ள தொடர்பு.

**கேள்வி: அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தமிழக நடிகர்களான கமலையும் ரஜினியையும் சந்தித்த நோக்கம் என்ன?**

**ஜோ.ரொபேட், மன்னார்.**

பதில்:– அவர் நடிகர் சகோதரத்துவத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**கேள்வி:- ஜனாதிபதி மைத்திரியின் உத்தரவை மீறி முன்னாள் ஜனாதிபதியின் தலைமையிலான மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?**

**நா. அரவிந்தன், வவுனியா**

பதில்:– மொத்தமாக 46 பேர் கிருலப்பனை மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இவர்கள் மீது என்ன மாதிரியான நடவடிக்கை எடுப்பது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மயிரைப் பிய்த்துக்கொண்டு விழி பிதுங்கி நிற்கிறது. இவ்வாறு கட்டுப்பாட்டை மீறி மேதினத்தில் பங்கு பற்றியவர்கள் மீது ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன என நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி:- பிறேஸிலில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு பதக்கம் கிடைக்கும் சாத்தியம் உள்ளதா?**

**உ. ராஜேஸ்வரி, முல்லைத்தீவு.**

பதில்:– முயற்சி திருவினையாக்கும்.

**கே: முன்னாள் விடுதலைப்புலிகள் கைது செய்யப்படுவதன் பின்னனி என்ன?**

**வி.ஆனந்தன், தாண்டிக்குளம்.**

பதில்:– அவர்கள் முன்னுக்கு வருகிறார்கள். முன்னேறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இதன் பின்னனியில் உள்ளது.

**கே:- தமிழக சட்ட சபைத் தேர்தலில் சீமானின் கட்சி வெற்றி பெறுமா?**

**ஜே.ஜோன்சன், கிளிநொச்சி**

பதில்:– சீமான் வெற்றி பெற்றாலே பெரிய காரியம்.

**கேள்வி:- விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்றிணைகிறார்கள் என சில அரசியல் தலைவர்கள் கூறுகிறார்கள். அது சாத்தியமா?**

**சி.ஜேக்கப், பேசாலை.**

பதில்:– விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்கிறார்கள். மீண்டும் ஒன்றிணைகிறார்கள் என்கிறார்கள். எதை நம்புவது.எதை நம்பாமலிருப்பது என முடிவு செய்ய முடியவில்லை.

**கேள்வி:- முன்னாள் ஜனாதிபதியின் இராணுவப் பாதுகாப்பு அகற்றப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறதே?**

**சி. ஆனந்தன், கைதடி.**

பதில்:– அவருக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் இருக்கிறது எதிர்பார்க்கப்படுகையில் அதனை பொலிஸார் சமாளிப்பார்கள் என அரசு நினைக்கிறது. இராணுவம் போன்றே பொலிஸாரும் பாதுகாப்பு பயிற்சியை பெற்றுள்ளனர்.

**கேள்வி: வடபகுதியில் விகாரைகள் முளைப்பதன் காரனம் என்ன?**

**கே. அபிநயா, பருத்தித்துறை.**

பதில்:– வடபகுதியில் நிறைய இராணுவமிருக்கிறது.அவர்கள் பாதுகாப்பு கடமைகளுக்கு மத்தியில் மதத்தைப் வேலையிலும் ஈடுபடுகின்றனர். அரசியல் சட்டத்திலும் பௌத்தத்துக்கு முதல் இடம் எனக் குறிப்பிடபட்டுள்ளது. தென் பகுதியில் நாம் கோவில்களைக் கட்ட முடியுமானால் வட பகுதியில் விகாரைகள் அமைப்பதைத் தடுக்க முடியாது.

**உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும் .**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

# ஜல்லிக்கட்டு தடைக்கு யார் காரணம்? அதிமுக - திமுக மீண்டும் 'மல்லுக்கட்டு'



**(சென்னை)** : ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டதற்கு திமுக தான் காரணம் என அதிமுக.,வும், அதிமுக.,தான் காரணம் என திமுக.,வும் மாறி மாறி குற்றம்சாட்டி வருகின்றன. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக பொங்கல் சமயத்தில் போர்கொடி உயர்த்திய அரசியல்கட்சிகள், பின்னர் அது பற்றி பேச்சே எடுக்கவில்லை. தற்போது தேர்தல் பிரசாரத்தின் போது மீண்டும் கையில் எடுத்துள்ளனர்.

ஏப்ரல் 27 ம் திகதி மதுரையில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய ஜெயலலிதா, ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டதற்கு திமுக தான் காரணம் எனவும், தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி பெற்றுத் தரப்படும் என்றார். ஜெயலலிதாவின் இந்த குற்றச்சாட்டுக்கு திமுக தலைவர் கருணாநிதி அறிக்கை மூலம் பதிலளித்துள்ளார். அதில் அவர்,மதுரையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர்

ஜெயலலிதா ஜல்லிக்கட்டு பற்றிப் பேசி, அது நடைபெறாமல் போனதற்கு தி.மு. கழகம் தான் காரணம் என்பதைப் போல தேர்தல் பிரச்சாரப் பொய்களில் ஒன்றாக பேசியிருக்கிறார். எனவே அதற்கான விளக்கத்தைத் தர வேண்டியது எனது கடமை என்று கருதுகிறேன். தி.மு.கழகம் ஆட்சியில் இருந்த போதுதான் 2007ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு போட்டிகள் அரசு நிர்வாகத்தின் கண்காணிப்பில் நடத்தப்பட்டன. அதைப்போலவே 2008ஆம் ஆண்டும் திமுக அரசால் முழுவீச்சில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உச்ச நீதிமன்றம் விதித்திருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டு ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. 2009ஆம் ஆண்டு கழக ஆட்சியில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நெறிப்படுத்துவதற்கெனச் சட்டம் ஒன்றே நிறைவேற்றப்பட்டது.

உச்ச நீதி மன்றம் தமிழக அரசின் சட்டத்தை ரத்து செய்த அடுத்த கணமே விழித்தெழுந்து உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய அ.தி.மு.க. அரசு, ஜல்லிக்கட்டு நடத்துவதைப் பற்றியே கவலைப்படாமல், தூங்கிக் கொண்டிருந்து விட்டு, ஏழு மாதங்கள் கழித்து, 14-1-2015 அன்று அதாவது பொங்கல் திருநாளுக்கு ஒரே ஒரு நாள் முன்பு கடைசித் தருணத்தில் பிரதமர் மோடிக்கு ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரி கடிதம் எழுதியது. அ.தி.மு.க. அரசின் இத்தகைய அலட்சியம் காரணமாகத் தான் 2015ஆம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய ஜல்லிக்கட்டு நடைபெறவில்லை.

உண்மையிலேயே ஜல்லிக்கட்டு நடத்துவதில், அதிமுக அரசுக்கு அதாவது ஜெயலலிதாவுக்கு அக்கறை இருந்திருக்குமேயானால், 14-1-.2015 அன்று அ.தி.மு.க. அரசு பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், காளையை அந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கு தனது எதிர்ப்பை நேரடியாகத் தெரிவிக்காமல், அந்தப் பட்டியலை ஏற்றுக் கொள்வதைப் போல குறிப்பிட்டிருந்தது. (To remove Bulls from the list of Performing Animals). ஜல்லிக்கட்டு மீண்டும் தமிழகத்தில் நடத்தப்பட வேண்டுமென்றால் மத்திய அரசு காளையை காட்சிப்படுத்தவும் பயிற்சிக்கும் உகந்தது (Performing Animal) என்று தான் குறிப்பிட்டிருக்க வேண்டும். இதற்கு நேரெதிரான நிலைப்பாட்டை எடுத்த அ.தி.மு.க. அரசு தான் ஜல்லிக்கட்டு நடக்க முடியாமல் போனதற்கும் தென்மாவட்ட மக்களின் ஏமாற்றத்திற்கும் காரணம் என்பது இதன் மூலம் விளங்குகிறது அல்லவா? இப்படி பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தவறான கருத்தினை எடுத்து வைத்தது மட்டுமல்லாமல் 6-8-2015 அன்று பிரதமர் மோடியால் சென்னையில் ஜெயலலிதாவை போயஸ் கார்டன் இல்லத்தில் சந்தித்த நேரத்தில் தமிழக அரசின் சார்பில் கொடுக்கப்பட்ட மனுவிலும் கூட காளையை காட்சிப்படுத்தவும் பயிற்சிக்கும் உகந்தது என அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவில்லை.

ஜல்லிக்கட்டு நடைபெறாமல் போனதற்கு அ.தி.மு.க. அரசு தொடர்ந்து செய்த துரோகம் தான் காரணம். எனவே தி.மு. கழக அரசு அமைந்தால் மத்திய அரசை அணுகி, சட்ட ரீதியான நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொண்டு, அதன் விளைவாக அடுத்த ஆண்டு முதல் தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நடைபெறும் என்ற உறுதியான நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கருணாநிதி கூறி உள்ளார்.

# அப்பாவுக்கு வாக்களியுங்கள்- செல்வி




**(திருவாரூர்)** : அப்பாவுக்கு வாக்களியுங்கள்.. என்று கைக்கூப்பி மக்களிடம் ஆதரவு திரட்டி வருகிறார் திமுக தலைவர் கருணாநிதியின் மகள் செல்வி.திருவாரூரில் வீடு வீடாகச் சென்று திமுக தலைவர் கருணாநிதிக்காக தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ள செல்வி, தனது அப்பாவுக்கு 92 வயதாகிறது. ஆனாலும், தமிழக மக்களின் நலனுக்காக உழைத்துக் கொண்டிருப்பவர் என்று அவர் மக்களிடம் பிரசாரம் செய்கிறார். செவ்வாய்க்கிழமை முதல், தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ள செல்வி, திமுகவின் சாதனைகளை எடுத்துரைக்கும் பிரசுரங்களை வாக்காளர்களிடம் கொடுத்தும், திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம், மருத்துவக் கல்லூரி ஆகியவை அமைத்தது குறித்து எடுத்துக் கூறியும் வாக்கு சேகரித்து வருகிறார்.திருவாரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட புலிவலம் அருகே உள்ள திருவிக நகர் முதல் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு விஷயத்தையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி பிரசாரம் செய்து வருவது, திமுகவின் பலத்தை அதிகரித்துள்ளது என்றே சொல்லலாம். மக்கள் அதிகம் கூடும் இடங்களான கல்லூரி, காகித ஆலை, சர்க்கரை ஆலை, உர ஆலை போன்ற பகுதிகளிலும் தீவிர பிரசாரம் மேற்கொண்டார் செல்வி.

# சொன்னார்கள் சொன்னார்கள்



சுண்ணாகம் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவுகள் கலந்துள்ளது. எனவே அந்த நீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல. எனினும் வடக்கு மாகாண சபையின் குழுவின் ஆய்வின்படி அவ்வாறு எண்ணெய் கசிவுகள் நீரில் கலக்கவில்லை என்று கூறப்படுகிறது. எமது குழுவின் ஆய்வறிக்கையில் கசிவுகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு குழப்பகரமான நிலைமையா-கும். இது தொடர்பில் மேலதிகமாக குழுக்களை அமைத்து ஆராயவேண்டும் - என்றார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்



அமைச்சுக்களின் செயலாளர்கள் அரசாங்கத்தின் கொள்கை, நிலைப்பாடுகளுக்கு அமைவாகவே செயற்பட வேண்டுமென வலியுறுத்தியிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசு தொடர்பிலோ, அமைச்சுக்கள் தொடர்பிலோ அறிக்கைகளை வெளியிடும் போது தனிப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்த முனையக்கூடாது எனவும் அறிவுறுத்தி உள்ளார்.



வடக்கிலிருந்து சமஷ்டி என்ற குரல் ஏன் வந்தது என்பது தொடர்பில் ஆராய்ந்து சிந்தித்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டுமென்று காலியில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போது ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்



தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள பங்காளி கட்சிகள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனவலியுறுத்தியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலை-லவருமான இரா.சம்பந்தன், நல்லாட்சி அரசு தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைவழங்காவிட்டால் மீண்டும் சர்வதேசத்தின் அழுத்தத்திற்குள்ளாகும் எனவும் தெரிவித்துள்ளார்.



தமிழ் பேசும் மக்களுக்கான நிரந்தர தீர்வு வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் எனவட மா-காண சபை தீர்மானம் நிறைவேற்றியது போன்று, கிழக்கு மாகாண சபையிலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என,தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெறலாம் என, உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாணசபைகள்அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக் கடமைகளில் இருந்த இராணுவத்தினர் நீக்கப்பட்டு, பொலிஸார்அதற்காக நியமிக்கப்பட்டுள்ள போதும், அவர்கள் முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும்விஷேட பயிற்சிகளைப் பெறாதவர்கள் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. - மஹிந்த ராஜபக்ஷ வின் ஊடகச் செயலாளர் ரொஷான்வெலிவிடவின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## பிரிய விரும்பாத ஒட்டிப் பிறந்த இரட்டைச் சகோதரிகள்



தாய்லாந்தில் இடுப்புப் பகுதி இணைந்த நிலையில் ஒட்டிப் பிறந்த அபூர்வ 7 வயது இரட்டைச்சகோதரிகள், தாமாக கைகளையும் கால்களையும் பயன்படுத்தி நடமாடவும் ஆடை அணியவும் மாடிப் படிகளில் வேகமாக ஏறி இறங்கவும்முச்சக்கரவண்டியை செலுத்தவும் கற்றுக் கொண்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி வருகின்றனர்.

பாங்கொக்கின் வடக்கே சுமார் 250 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகொன் ஸவான் என்ற பிராந்தியத்தில் வாழும் பின் மற்றும் பான் ஆகிய இந்தசிறுமிகள் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் செய்தகளை வெளியிட்டுள்ளன.

அந்த சிறுமிகளை பிரிக்க முடியும் என மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ள நிலையில், அவர்களோ தொடர்ந்து பிரியாது ஒன்றிணைந்துஇருக்கவே விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகமான வேலைகள்

காலையில் 8 மணிக்கு வேலைக்குப் போனால், எப்போ 5 மணியாகும் எப்போ வீட்டுக்குப் போ-கலாம் என சிலர் நினைப்பார்கள், ஒருசிலருகு நேரம் போவதே தெரியாது. அட அஞ்சு மணியாச்சா எனக் கேட்டு வீட்டுக்குக் கிளம்பத் தயாராவார்கள். இப்படி ஒரு வேலை கிடைத்தால் எப்படி இருக்கும்.

**சொகுசு மெத்தைப் பரிசோதனையாளர்:**

பெரும்பாலான நாடுகளில் பகுதி நேரமாகக் கிடைக்கும் வேலை. மாசத்துக்கு ஒருநாள் வேலை பார்த்தால் போதும். சம்பளம் 75,000 ரூபா எனச் சொன்னால், மயக்கம் போட்டு கீழே விழுவீங்க. சொகுசு மெத்தைகளைப் பரிசோதனை செய்யும்வேலை இப்படித்தான். மாதத்தில் ஒருநாள், காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை மெத்தை நிறுவனங்கள் தயாரித்திருக்கும் புதிய வகை சொகுசு மெத்தையைப் பயன்படுத்திப் பார்த்து, நிறை குறைகளைச் சொல்ல வேண்டியது முக்கியமான வேலை (?!). எக்ஸ்ட்ரா வேலையாக 'இந்த மெத்தையில் தூங்கும்போது தூக்கம் எப்படி இருக்கிறது?' போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு, சம்பளத்தை வாங்கிக்கொண்டு கிளம்பலாம்!

**வைன் டெஸ்டர்**


: காலையில் எழுந்ததும் , சில பேர் விதம்விதமான வைன் போத்தல்களுடன் வந்து, 'சார்.. இது எப்படி இருக்குனு குடிச்சுட்டுச் சொல்லுங்களேன்'னு எழுப்பினால் எப்படி இருக்கும்? அதுதான், அதேத-ான் வைன் டெஸ்டரோட வேலை. தங்குவதற்கு இடம், இலவச வை∴பை வசதியும் உண்டு. ஏனெ-னில், வைனைக் குடித்துப் பார்த்த அனுபவத்தை சமூக வலைதளங்களில் பகிந்துகொள்ள வேண்டும். சம்பளம் 7 லட்சங்களாம்!

**கேண்டி டெஸ்டர்:**

மேலே சொன்னது சரக்கு, இது சொக்லேட். அவ்வளவுதான் வித்தியாசம். ஆனால், சிறுவர்களுக்குத்தான் இந்த வேலையில் முன்னுரிமை. பகுதி நேர வேலைக்கே பல்க்கான சம்பளம் கைக்கு வரும். சொக்லேட் நிறுவனங்கள் மட்டுமல்ல, நொறுக்குத் தீனிகளை உற்பத்தி செய்யும் பல்வேறு நிறுவனங்களும் இந்த வேலைக்கு ஆட்களைத் தேர்வுசெய்வார்கள். புதிதாகத் தயாரித்த தீனியை அல்லது கொஞ்சம் மாற்றியமைத்த சொக்லேட், கேக், ஸ்நாக்ஸ் வகைகளைத் தின்று வாசனை, சுவை எப்படி இருக்கிறது எனக் கமென்ட் கொடுக்க வேண்டியதுதான் வேலை. நினைத்தாலே இனிக்குதுல்ல?

# அங்கும் இங்கும்

## மிதக்கும் வீடு



காலையில் எழுந்ததும் கடலைப் பார்க்கிற மாதிரி வீடு இருக்க வேண்டும் என்பது பலரின் கனவு எதுக்குச் சிரமம்? கல்லைக்கட்டி கடலில் இறக்குவது போல உங்களுடைய வீட்டையே கடலில் இறக்கிவிட்டு மிதக்கலாம். இதோ, வந்துவிட்டது 'யுஎ∴ப்ஓ வீடுகள்!'.

இத்தாலியைச் சேர்ந்த 'ஜெட் கேப்ஸ்யூல்' நிறுவ-னம் உருவாக்கியிருக்கும் இந்த வீடுகள், பறக்கும் தட்டுகளைப் போன்ற வடிவத்தில் இருப்பதால் இந்தப் பெயர். ஆனால், வானத்தில் வட்டமிட முடியாது. கடல் அழகை ரசித்துக்கொண்டே மெள்ள மெள்ள மிதந்து வரலாம். ஏனெனில் இது மணிக்கு 6.5 கிலோ மீற்றர் வேகத்தில் நகரும் வசதியைக் கொண்டது. கடலில் வாழ்ந்துகொண்டே, உல-கைச் சுற்றி வருவதுதான் யுஎ∴ப்ஓ வீடுகளை உருவாக்கியதன் நோக்கம்! கிட்டத்தட்ட 400 சதுர அடி அகலத்தில் வியாழன் கிரக வடிவத்தில் இருக்கும் இந்த வீடுக-ளில் வேலைகளைக் கவனிக்க ஒரு இடம், குளிக்க, சமைக்க ஒரு இடம். கடலை ரசிக்கவும் ஒரு இடம் என எல்லாம் இருக்கு. நல்லாவும் இருக்கு!

அதிகபட்சம் மூன்று பேர் வசிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த வீடுகளுக்குத் தேவையான மின்சாரத்தை சோலார் பேனல் மூலமாக, சூரியனிடம் இருந்தும் பெறலாம். காற்றாலைகள் மூலம் காற்று, கடல் தண்ணீரில் இருந்தும் பெறலாம். தவிர கடல்நீரை, மழைநீரைக் குடிநீராக மாற்றும் வசதி, காய்கறிகளைப் பயிரிடத் தேவையான தோட்டம்... என நடுக்கடலில் உயிர்வாழத் தேவையான அத்தனை வசதிகளும் இருக்கின்றன. காலை-லயில் எழுந்திரிச்சதும் 'சைக்கிளிங்' போகணும்னு ஆசைப்பட்டாலும், அதுக்கு இருக்கு தனி ரோடு! குறைவான இடம், நிறைவான வசதிகள் என்ற ஐடியாவோடு உருவாக்கப்பட்டுள்ள இந்த வீட்டின் தோராயமான மதிப்பு 2 லட்சம் அமெரிக்க டொலர்




## சோலார் உள்ளாடை சார்ஜர்

இந்த சார்ஜருக்கு டெமோ காட்டுவது பச்சை டிரெஸ் போட்ட அழகான பொண்ணு. வயிற்றில் சோலார் பேனலைக் கட்டிக்கொண்டு அதுக்கு மேலே மொபைலை வைத்தால் போதுமாம். கிறுகிறுன்னு சார்ஜ் ஏறுமாம். போற இடத்துக்கெல்லாம் இதைத் தூக்கிக்கொண்டு போகலாம் என்பது கூடுதல் சிறப்பு.

# வைகைப்புயல் வடிவேலு

பிறந்தநாள் – 10 Oct 1960 (வயது 55) வடிவேலு தமிழ்த் திரைப்பட நடிகரும் பின்னணிப் பாடகரும் ஆவார். இவர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.1991இல் கஸ்தூரி ராசா இயக்கிய என்ராசாவின் மனசிலே என்ற திரைப்படத்தின் மூலமாகத் தமிழ்த் திரையுலகத்திற்கு அறிமுகமானார்.வடிவேலு தனது அசாத்தியமான நகைச்சுவை கலந்த நடிப்புத் திறமையால் வைகைப்புயல் என்னும் பட்டப்பெயருடன் பரவலாக அறியப்படுகிறார்.இவர் தனது சிறப்பான நகைச்சுவை நடிப்பிற்காக சிறந்த நகைச்சுவை நடிகருக்கான தமிழக அரசின் விருதினை ஐந்து முறை காலம் மாறிப் போச்சு (1996),வெற்றிக் கொடி கட்டு (2000), தவசி (2001), இம்சை அரசன் 23ம் புலிகேசி (2006), காத்தவராயன் (2008) திரைப்படங்களுக்காகவும், சிறந்த நகைச்சுவை நடிகருக்கானபிலிம்பேர் விருதை 2005–ம் ஆண்டில் வெளியான சந்திரமுகி திரைப்படத்திற்காகவும் வென்றுள்ளார். மருதமலை, ஆதவன் போன்ற திரைப்படத்திற்காக சிறந்த நகைச்சுவை நடிகருக்கான விஜய் விருது வென்றுள்ளார்.

இவரது பெற்றோர் சரோஜினி அம்மாள் மற்றும் நடராச பிள்ளை ஆவார்கள். இவருக்கு கன்னிகா பரமேஸ்வரி, கார்த்திகா,கலைவாணி ஆகியமகள்களும்,சுப்பிரமணி என்ற மகனும் உள்ளனர். திரைப்படங்களில் நடித்த பின்னர் பணம், புகழுடன் வசதியாக வாழ்ந்தாலும், தனது கடந்த காலத்தில் ஏழ்மையோடுபோராடியதை மறக்காத வடிவேலு தனது மகன் சுப்பிரமணிக்கு சிவகங்கை, திருப்புவனத்தில் ஒரு கூரை வீட்டில் வசிக்கும் ஏழ்மையான பெண்ணை திருமணம்செய்து வைத்துள்ளார்.

பள்ளியில் படித்த அனுபவம் என்பது இவருக்கு கிடையாது. நண்பர்களுடன் இணைந்து சிறு நாடகங்களை மேடையில் அரங்கேற்றியுள்ளார். அந்த நாடகங்களில்நகைச்சுவை கதாநாயகனாக நடித்தார். இவருடைய தந்தை இறந்து விடவே குடும்பம் மிகவும் வறுமைக்குள்ளானது. மதுரையில் உள்ள புகைப்படங்களுக்குகண்ணாடி பிரேம்கள் செய்யும் ஒரு சிறிய கடையில் வேலை செய்து வந்தார். அந்தத் தருணத்தில் நடிகர் ராஜ்கிரண் ஒருமுறை அவருடைய ஊருக்குச் சென்றபொழுது எதிர்பாராத விதமாக அவருடைய அறிமுகம் கிடைக்கப்பெற்றது.

அதன் அடிப்படையில் சென்னைக்கு வந்து சேர்ந்த வடிவேலு, ராஜ் கிரணின்அலுவலகம் மற்றும் வீடு என அவருக்குத் தேவையான எல்லா வேலைகளையும் பார்த்து வந்தார். ராஜ்கிரண், தான் நடித்த என் ராசாவின் மனசிலேதிரைப்படத்தில் வடிவேலுவை முதன்முதலாக திரையில் அறிமுகப்படுத்தினார்.1991 ஆம் ஆண்டு கஸ்தூரிராஜாவின் இயக்கத்தில், ராஜ்கிரண் தயாரித்து, கதாநாயகனாகவும் நடித்த "என் ராசாவின் மனசிலே" என்ற திரைப்படத்தில் முதன்முதலாக ஒரு நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு பெற்ற இவர், ஒரு பாடலையும் பாடியிருப்பார். "போடா போடா புண்ணாக்கு" என்ற பாடல் மூலம்திரையில் தோன்றிய இவர், தன்னுடைய முதல் திரைப்படத்திலேயே ஒரு நடிகனாகவும், பாடகனாகவும் தன்னுடைய பெயரைத் தமிழ் சினிமாவில் பதிவுசெய்தார்.

அதன் பிறகு, மற்றுமொரு தயாரிப்பாளர் நடராஜன் மூலம், 1992 ஆம் ஆண்டு ஆர்.வி. உதயகுமார் இயக்கத்தில் "சின்னகவுண்டர் என்ற படத்தில்கதாநாயகன் விஜயகாந்த் அவர்களுக்குக் குடை பிடிக்கிற பண்ணையாள் கதாபாத்திரத்தில் நடித்தார். இத்திரைப்படத்திற்கு பிறகு, ஆர். வி. உதயகுமார்அவர்களால் பிரபு, கார்த்திக், கமல் என அந்த காலகட்டத்தில் தமிழ் சினிமாவை ஆட்சி செய்துகொண்டிருந்த கதாநாயகர்களின் அறிமுகம் கிடைக்கப் பெற்றது.வடிவேலுவின் முதல் படமான என் ராசாவின் மனசிலே(1991) திரைப்படத்தில், இருந்து இயக்குநர் சங்கரின் இயக்கத்தில் வெளியான காதலன் திரைப்படத்திற்குமுன்னர் வரை, தமிழ்த் திரைப்படத் துறையில் புகழ்பெற்ற நகைச்சுவை இரட்டையர்களான கவுண்டமணி–செந்தில் நடித்த நகைச்சுவை காட்சிகளில் சிறுசிறுகதாபாத்திரங்களில் வந்து சென்றார்.

"சின்னகவுண்டர" திரைப்படத்தினை தொடர்ந்து "வரவு எட்டணா செலவு பத்தணா", இளவரசன், சிங்காரவேலன், தேவர் மகன் காத்திருக்க நேரமில்லை, கிழக்கு சீமையிலே, நிலக்குயில், மகாராசன் என ஒரே வருடத்தில் பல படங்களில் நடிக்கத் தொடங்கிய இவர், குறுகிய காலத்திற்குள் அந்த காலகட்டத்தில்அசைக்க முடியாத நகைச்சுவை அரசர்களாக விளங்கிக்கொண்டிருந்த கவுண்டமணி மற்றும் செந்தில் இணையுடன், மூன்றாவது நகைச்சுவை நடிகராகவலம்வந்தார். தொடக்கத்தில் இவர் நடித்த, அரண்மனை கிளி, கோகுலம், காதலன், ராசகுமாரன், வாட்ச்மேன் பொங்கலோ பொங்கல், காலம்மாறிப்போச்சு, ராசையா, முத்து, நந்தவனத் தேரு, ஆணழகன, காதல் தேசம், சுந்தரப் புருஷன், மிஸ்டர் ரோமியோ, லவ் பேர்ட்ஸ், கங்கா கௌரி, பாரதிகண்ணம்மா, திருப்பதி ஏழுமலை வெங்கடேசா, விரலுக்கேத்த வீக்கம், முதல்வன், வண்ணத்தமிழ் பாட்டு, கந்தா கடம்பா கதிர்வேலா, கூடி வாழ்ந்தால்கோடி நன்மை, பாட்டாளி, போன்ற திரைப்படங்கள் இவர் ஏற்று நடித்த நகைச்சுவை கதாபாத்திரங்கள் தமிழ் சினிமா ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பைபெற்றுத்தந்தது.

ஒரு காலகட்டத்திற்குப் பிறகு, பல வெற்றி படங்களில் முக்கிய அங்கமாக விளங்கிய இவர், 2000 ஆம் ஆண்டு சேரனின் இயக்கத்தில் வெளிவந்த வெற்றிக்கொடிக்கட்டு திரைப்படத்தில் பார்த்திபனுடன் இணைந்து நடித்த நகைச்சுவை காட்சிகள், தமிழ் ரசிகர்களிடையே மாபெரும் கைத்தட்டலைப் பெற்றுத் தந்தது.அதனைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு வெளிவந்த ப்ரண்ட்ஸ் திரைப்படம் அவருக்கு மேலும் புகழைத் தேடித்தந்தது. தொடர்து தமிழ் சினிமாவில் அனைத்துமுன்னணி கதாநாயகர்களுடன் சேர்ந்து, பல திரைப்படங்களில் நடித்த அவரின் திரைப்பட வாழ்வில் 2003 ஆம் ஆண்டு வெளிவந்த வின்னர் திரைப்படம் அவருடைய சினிமா வாழ்க்கையில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. அத்திரைப்படத்தில் இடம் பெற்ற அனைத்து நகைச்சுவை காட்சிகளும், சிறியவர்முதல் பெரியவர் வரை என அனைவரையும் ரசிக்கவைத்தது.

வருத்தப்படாத வாலிபர் சங்கம் என்ற ஒன்றை அமைத்து கைப்புள்ள என்ற கதாபாத்திரத்தில்அவர் செய்த நகைச்சுவைகள் உண்மையிலேயே நகைச்சுவையின் உச்சத்திற்கு கொண்டு சென்றது எனலாம்.



நினைத்துப்பார்த்தாலே சிரிப்பு வரும் அளவிற்குஉடல் அசைவு, உடை, முக பாவனை, வசனங்கள் என அனைத்திலும் முத்திரைப் பதித்திருப்பார்.கதாநாயகர்களை விட ஒரு நகைச்சுவை நடிகருக்கு முகபாவனையும், உடல் மொழியும் மிக முக்கியமாகும்.

இவையிரண்டையும் தமது நகைச்சுவையில் வெகு இயல்பாக வெளிபடுத்தி ரசிகர்களை சிரிப்பு என்னும் மழையில் நனையவைத்தார். கலைகளில் சிறப்பு மிக்கவையாக கருதப்படுவது நகைச்சுவை! ஒருவனை எளிதில் அழவோ, கோபப்படவோ வைத்துவிடலாம். ஆனால் சிரிக்க வைப்பது அத்தனை எளிதான காரியம் அல்ல.

அத்தகைய கடினமான பணியை தன்னுடைய நகைச்சுவை பேச்சிலும், உடல் அசைவிலும், முக பாவனையிலும் வெகு இயல்பாக தனது நகைச்சுவையில் அற்புதமாக வெளிப்படுத்தி, ரசிகர்களை சிரிப்புஎன்னும் மாபெரும் கடலில் மெய்மறக்கச் செய்தவர். மேலும், சிறியவர் முதல் பெரியவர்கள் வரை தன்னுடைய நகைச்சுவை நடிப்பால் கட்டிப்போட்டவர்.இவரின் வசனங்களை மக்கள் நிஜ வாழ்வில் பயன்படுத்தி மிக மோசமான தருணங்களைக் கூட நகைச்சுவையாகி கொள்ளும் அளவிற்கு மா பெரும்தாக்கத்தினை மக்களிடையே ஏற்படுத்தியது.


குறிப்பாக கதாநாயகர்கள் பஞ்ச் டையலாக் பேசுவார்கள், ஆனால் வடிவேலுவின் நகைச்வையில் உதிர்ந்த அத்தனை வா ர்த்தைகளும் பஞ்ச டையலாக்கைத் தாண்டி வரவேற்பை பெற்றது எனலாம். மேலும், சொல்லாப்போனால் ஒவ்வொரு குழந்தைக்கும் இவர் பேசியநகைச்சுவை வசனங்கள் அத்துப்படி. இதை விட ஒரு நடிகனுக்கு வேறு என்ன விருது பெருமை சேர்க்க முடியும். காதலன்(1994) திரைப்படம் வெளியான பிறகு தமிழ்த் திரைப்படத் துறையில் இவரும் ஒரு முக்கியமான நபராக வளர்ந்தார். இவர் நடித்த திரைப்படங்களில்பாரதி கண்ணம்மா, வெற்றிக் கொடி கட்டு, வின்னர், மருதமலை, மற்றும் சந்திரமுகி போன்றவை குறிப்பிடத்தக்க திரைப்படங்களாகும்.

இவர் இரட்டைவேடத்தில் கதா நாயகனாக நடித்த இம்சை அரசன் 23ம் புலிகேசி திரைப்படம் மிகப்பெரிய திரைப்படமாக அமைந்தாலும் அதன் பின்னர் வெளியானஇந்திரலோகத்தில் நா. அழகப்பன் (2008) திரைப்படம் எதிர்பார்த்த அளவில் வெற்றி பெறவில்லை. வடிவேலு இதுவரை பல்வேறு விதமான கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். நகைச்சுவையில் பல வித்தியாசமான கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார்.நகைச்சுவையில் தனக்கென தனி பாணியை ஏற்படுத்திக் கொண்டு சினிமா ரசிகர்களை சிரிக்க வைத்துள்ளவர். இவரது நகைச்சுவை காட்சிகளில் பெரும்பாலும்வீண்வம்பு இழுத்து அடிவாங்குபவராகவும், யாரேனும் தவறு செய்பவர்களை தட்டிக்கேட்டு அதன்மூலமாக அடிவாங்குபவராகவும், கைதேர்ந்த திருடனாகவும்,மக்களின் அறியாமை மற்றும் மூட நம்பிக்கையைப் பயன்படுத்தி அவர்களை ஏமாற்றுபவராகவும் தோன்றுவார்.

இவரது நகைச்சுவை வசனங்களான ஆகா ஒரு குரூப்பாத்தான் அலையிராங்கய்யா, வந்ததுட்டான்யா வந்ததுட்டான்யா மற்றும் சந்திரமுகி திரைப்படத்தில்இடம்பெற்ற மாப்பு வச்சுட்டான்யா ஆப்பு போன்றவை மிகவும் பிரபலமானவை. இத்தகைய வசனங்கள் அனைத்து தரப்பு ரசிகர்களிடையை மாபெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், இவ்வசனங்கள் அன்றாட வாழ்க்கையில் பலராலும் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 23இல்)

# 1984 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய காலகட்டம்



1984 ஆம் ஆண்டு பிரபாகரனின் வாழ்க்கையில் மிகவும் ஒரு திருப்பு முனையான காலகட்டமாக அமைந்தது.

ஏற்கனவே, இந்த தொடரில் பிரபாகரன் – மதிவதனி காதல் மற்றும், கல்யாணம் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இது பிரபாகரனின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு மாற்றமாகும்.

அதேநேரத்தில், 1984 ஆம் ஆண்டு முதன் முதலாக "போர்க் குரல்" என்ற சஞ்சிகையை பிரபாகரன் வெளியிட்டார். இந்த சஞ்சிகை மறைமுகமான இராணுவ போர் முறைகள் சம்மந்தமாக தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு விளக்குவதாக அமைந்தது.

அதுமாத்திரமல்லாது, இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை திட்டவட்டமாக அமைப்பதற்கு பிரபாகரன் பல முயற்சிகள் மேற்கொண்டார். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தை ஆறு தனி பிராந்தியங்களாக உருவாக்கினார். இவ்வாறு உருவாக்கப்பட்ட ஒவ்வொரு பிராந்தியங்களையும் அவரது நம்பிக்கைக்கு பாத்திரமான தளபதிகளின் கீழ் தனித் தனி பிராந்தியங்களாக அமைத்தார்.

இந்த பிராந்தியங்களில் முக்கியமானதாக யாழ்ப்பாணம் இருந்தது. இதை அவரது சிறுபிராயம் தொடக்கம் நண்பனாக இருந்த கிட்டுவின் (கிருஸ்ணகுமார்) தலைமையில் அமைத்தார். அதேபோல் இந்தியாவிலிருந்த அனைத்து பயிற்சி முகாம்களும் பொன்னம்மான் தலைமையில் விடப்பட்டது. பேபி சுப்ரமணியத்திற்கு தமிழ் நாட்டில் தொடர்புகள் ஏற்படுத்துவதற்கு பொறுப்பாக விடப்பட்டது. அதேநேரத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்த அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரசாரத்திற்குப் பொறுப்பாக அமர்த்தப்பட்டார்.

அந்தக் காலகட்டத்தில் இந்திராகாந்தி உட்பட ஏனைய இந்தியத் தலைவர்கள் இலங்கையை இரண்டாக துண்டாட விரும்பவில்லை என எடுத்துக் கூறினார்கள். எனவே இந்தியாவின் போக்கு பிரபாகரனுக்கு தெளிவாக விளங்கியிருந்தது.

போராளிக் குழுக்களுக்கு இந்தியா பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியிருந்தாலும், தமிழீழத்திற்கு எதிரானவர்கள் என்று தெளிவாக புலனாயிற்று. எனவே பிரபாகரனுக்கு தெளிவான முடிவு எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிற்று. அதனையடுத்து பிரபாகரன் இந்திய அரசாங்கத்திற்கு தெரியாமல் ஆயுதங்கள், வெடிகுண்டுகள் பெற்றுக் கொள்வதற்கு தனி அமைப்பை உருவாக்கினார். இந்திய அரசு வழங்கும் ஆயுதங்களின் தொகை, தன்மை என்பன பற்றி பிரபாகரன் தனியான விமர்சனம் ஒன்றை வைத்திருந்தார். அதனையடுத்து, தான் ஆயுதங்கள் பெறுவதற்கும் கொள்வனவு செய்வதற்கும் தனக்கு நம்பிக்கைக்குரிய கே. பத்மநாபன் (கே.பி) யின் பொறுப்பில் அமைப்பை உருவாக்கினார். இந்த கே.பி. யின் அமைப்பு நீண்டகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் உபகரணங்களையும் மற்ற நாடுகளிலிருந்து பெற்று அனுப்பிக்கொண்டே இருந்தது.

அதுமாத்திரமல்லாது பின்னர் தனியான கப்பல் போக்குவரத்து-- அமைப்பையும் அமைக்க திட்டமிட்டார். இவ் அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பின் தொடர்பு, வெளியே தெரியாமல் இருக்கும்படி செய்தார். இவ்வாறு உருவான அமைப்பு யுத்தத்திற்கு தேவையான உபகரணங்களை கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டது. அதுமாத்திரமல்லாமல்,



இக் கப்பல் அமைப்பை பொருளாதார ரீதியாக அமைப்பதற்கு உலகத்தில் பல இடங்களுக்கும் பொருட்கள் ஏற்றிச் செல்லும் அமைப்பாக இருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாக்கும் கப்பல் கம்பனியில் இலங்கையர்கள் மாத்திரமே வேலை செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இவ்வாறன இலங்கை கப்பல் சேவை ஊழியர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்களாக இருந்தாலும் பரவாயில்லை எக்காரணம் கொண்டும் அவர்கள் இக் கப்பல் கம்பனி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சொந்தமானது என்று வெளியே கூறக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டது.

தென்கிழக்கு ஆசியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. முதன் முறையாக சீனாவிலிருந்து பழைய கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்து பனாமா நாட்டில் பதிவு செய்தனர். அதற்கு "எம். வி. சோழன்" என்று முன்னாள் தமிழ் நாட்டு சக்கரவர்த்தியின் பெயர் சூட்டப்பட்டது.

பிரபாகரனின் யுத்தத் தளபாடக் கொள்வனவாளரான கே.பி. எப்போதும் 2 இந்திய கடவுச் சீட்டுக்கள் மற்றும் 1 இலங்கை கடவுச் சீட்டும் வைத்திருப்பார். உலகத்தின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தார்.

லெபனான், தாய்லாந்து கம்போடியா எல்லை, பாரிஸ், லண்டன், சுவீடன், கிறீஸ், சைப்ரஸ், ஹொங்கொங், டோக்கியோ, மியன்மார், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளுக்கும் கே.பி. பயணம் செய்திருந்தார். அதனையடுத்து உலகத்திலுள்ள உளவுத்துறை அமைப்புக்களுக்கு இவரது பெயர் "கே.பி." என்றே பதிவு செய்து கொண்டனர்.

இவர் தனது கப்பலில் இருந்த சக்திவாய்ந்த வானொலி தொடர்பு சாதனம் மூலமே பிரபாகரனை தொடர்பு கொள்ளுவார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களை கொள்வனவு செய்து வழங்கி வரும் அதே, நேரம் இந்தியாவிற்குள் தங்கக் கட்டிகளையும் கடத்தி வந்தனர் கே.பி. யின் கோஷ்டியை சேர்ந்தவர்கள் மிகவும் அந்தரங்கமாகவே தமது நடவடிக்கைகளை நடத்தி வந்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஸ்ட தலைவர்களுக்குக் கூட, இந்த நடவடிக்கை தெரியாமல் இருந்தது.

1984 ஆம் ஆண்டின் பின், கற்களுக்கு வெடிவைக்கப் பயன்படுத்தும் ஜெலரினை விடுதலைப்புலிகள் கொள்வனவு செய்யத் தொடங்கினர். அவ்வாறு கொள்வனவு செய்யும் ஜெலற்றினை பிளாஸ்ரிக் கான்களில் அடைத்து வள்ளம் வள்ளமாக இலங்கையின் யுத்த பிரதேசங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தியாவிற்கு வெளியே ஆயுதங்கள் கொள்வனவு செய்ய எடுத்த தீர்மானத்திற்குப் பின் தமிழீழ விடுதலைப்புலிகள் புலனாய்வு உதமாயிற்று. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட புலானாய்வுப் பிரிவு இந்தியா, இலங்கை இராணுவ அமைப்பிற்கு ஆச்சரியத்திற்கும் பொறாமைக்குரியதாகவும் அமைந்தது.

1984 ஆம் ஆண்டு தான் முதன் முதல் சைனைட் பழக்கம் அறிமுகப் படுத்தப்பட்டது ஒவ்வொரு தமிழீழ விடுதலைப்புலிகளும் சைனைட்டை ஒரு சின்னக் குப்பியில் அடைத்து கறுப்பு நூலில் கட்டி, கழுத்தில் தொங்க விடவேண்டும் என பிரபாகரன் உத்தரவிட்டார்.



இச் சைனைட் குப்பியானது புதிதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்பவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், பிரபாகரனுக்கும் விசுவாசமாக இருப்போம் என சத்திய பிரமாணம் எடுத்தபின் வழங்கப்படும்.

எந்த ஒரு போராளியும், எந்த சந்தர்ப்பத்திலும் எதிரிகளிடம் சிக்கினால் அவர்கள் உடனடியாக சைனைட் குப்பியைக் கடித்து உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் தனது போராளிகள் எதிரிகளின் கையில் பிடிபடக் கூடாது என்பதற்காகவே முதன் முதலில் சைனற் குப்பியை கறுத்த நூலில் கட்டி பிரபாகரன் தன்னுடைய கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டார். எப்போதும் அதனை தனது சேட் பொக்கற்றுக்குள் போட்டு ஒரு அடையாள அட்டையைப் போன்று காட்சிதரும் வண்ணம் நடந்து கொண்டார்.

அது மாத்திரமல்லாமல் அடிக்கடி இந்தியாவின் உளவுப் படையினர் விடுதலைப் புலிகளின் காரியாலயத்திற்கு வந்து போவதால் அங்கே வேவுபாக்கும் கருவிகளை அவர்கள் யாருக்கும் தெரியாமல் வைத்துச் செல்ல சந்தர்ப்பம் இருந்தது. இதனைக் கண்டு பிடிக்க பிரபாகரன் எதிர் வேவு கருவிகளையும் இறக்குமதி செய்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் 1983 யூலை கலவரத்தின் பின், யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலை இராணுவத்தின் தலைவரான ஒப்ரோய் தேவன் முதன் முதல் கொல்லப்பட்டார். 1983 ஓகஸ்ட் 14 ஆம் திகதி இரண்டு தமிழீழ விடுதலைப்புலி ஆயுததாரிகள் அவரை சுட்டுக் கொன்றார்கள். ஏற்கனவே 1983 செப்ரம்பர் 23 ஆம் திகதி மட்டக்களப்பு சிறைச்சாலை உடைத்து 200 சிறைக் கைதிகள் தப்பியது பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இந்த சிறை உடைப்பு புளொட் அமைப்பினரால் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாறு மட்டக்களப்பு சிறையை உடைத்து தப்பிச் சென்ற தமிழ்க் கைதிகளை மீண்டும் கைது செய்வதற்கு இலங்கை பாதுகாப்புப் படையினர் பகீரத முயற்சி மேற்கொண்டார்கள். ஆனால் அனேகம் பேர் மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பி தமிழ் நாட்டிற்குச் சென்று விட்டார்கள். 1983 நவம்பர் மாதம் ஏழு ஆயுததாரிகள் யாழ்ப்பாணத்திலிருந்த மக்கள் வங்கியைக் கொள்ளையடித்தார்கள் அவர்கள் ரூபா 2 லட்சம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றனர்

அதனையடுத்து ஒரு கிழமையின் பின் 12 ஆயுததாரிகள் மானிப்பாயிலிருந்த இலங்கை வங்கியை கொள்ளையடித்தனர்.

(தொடர்ச்சி 17 இல்)

# உண்மை வெளிவருகிறது

**பகுதி -11**

இலங்கை – இந்தியா ஒப்பந்தம் ஒன்றை செய்வதற்கு 27 ஆம் திகதி ஜுலை மாதம் 1987 ஆம் ஆண்டு, ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியாவுடன் உடன்படிக்கை ஒன்றில் தான் கைசசாத்திட முடிவு செய்திருப்பதாக தனது அமைச்சரவையில் தெரிவித்தார். ஆயினும் அந்த யோசனைக்கு பெரும்பாலான அமைச்சர்கள் ஆதரவு அளிப்பது என முடிவு செய்தார்கள். இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு ஜெயவர்த்தனாவுக்கு அதிகாரம் அளிப்பது என அமைச்சரவை இணக்கத்துக்கு வந்தது.

இந்த உடன்படிக்கை 1984 யூலை 24ம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டது. இலங்கையின் வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்குள் இந்திய அமைதி காக்கும் படை (IPKF) கொண்டுவரப்பட்டது.

இந்த உடன்படிக்கை இந்தியாவின் சின்னஞ்சிறிய அண்டை நாடான ஸ்ரீலங்காவின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியாவின் பெரும் எடுப்பிலான வகிபாகத்திற்கு அதிகாரம் அளித்தது. உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதற்குப்பின்னர் இந்தியா பிரச்சினைக்குட்பட்டிருந்த யாழ்ப்பாண குடாநாட்டில் கிட்டத்தட்ட 5,000 துருப்பினர்களை இந்திய அமைதிகாக்கும் படையாக (IPKF) ஈடுபடுத்தியது. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையில் ஒரு போர் ஓய்வு, வேறு வார்த்தைகளில் கூறப் போனால் மோதல் நிறுத்தம், ஜுலை மாதம் 31 ஆம் திகதி ஆரம்பிக்க இருந்தது. இலங்கை இராணுவம் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தனது முகாம்களுக்குத் திரும்பிச்செல்வதாக இருந்தது. இலங்கை இராணுவம் தான் கைப்பற்றியிருந்த சகல நிலைகளையும் கைவிட்டுச்செல்ல வேண்டியதாகவும் இருந்தது. ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தமிழ் ஆயுதக் குழுக்கள் தமது ஆயுதங்களை கையளிக்க வேண்டி இருந்தது. அரசாங்கம் தமிழ்ப் போராளிகளுக்கும் அரசியல் கைதிகளுக்கும் ஒரு பொது மன்னிப்பை வழங்க வேண்டி இருந்தது.

தமிழ்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு தனி அலகு மாகாண சபையை அனுமதிப்பதன் மூலம் எவ்வாறாயினும் நடப்பின் உரிமைப்படி தமிழ்த் தாயகம் ஒன்று உருவாக்கப்படும்.

இந்திய அமைதி காக்கும் படையின் பிரசன்னத்தின் முன்னிலையில், இலங்கை இராணுவத்திடம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை சம்பிரதாயபூர்வமாக கையளிக்கும் வைபவத்தைத் தொடர்ந்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பூராகவும் ஆயுதக் கையளிப்பு வைபவங்கள் இடம் பெற்றன.

இலங்கையுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட இருந்த வேளை, 29 ஆம் திகதி ஜுலை மாதம் 1987 ஆம் ஆண்டு, இந்தியா உத்தரப்பிரதேச மாநிலத்தின் தூர நிலப்பரப்பில் வைத்து ஆயுதப்பயிற்சி அளிப்பதற்காக எல்.ரி.ரி.ஈ. போராளிகள் நீங்கலாக, தமிழ் நாட்டில் அஞ்ஞாதவாசமிருந்த ஆயுதக் குழுக்களின் கிட்டத்தட்ட 500 போராளிகளை தெரிவு செய்தது. அத்துடன் உடன்படிக்கைக்கு ஏற்ப, ஆயுதங்களைக் கையளிப் பதற்காகவும் எதிர்பார்க்கும் ஜனநாயக அரசியல் முறைமையில் பங்கு பற்றுவதற்காகவும் தமிழ் நாட்டில் அஞ்ஞாதவாசமிருந்த எஞ்சியிருந்த ஆயுதப் போராளிகளையும் இந்தியா தன்னுடன் கொண்டுவந்தது.

ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி (ஈ.பீ.ஆர்.எல்.எப்.), தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் (புளொட்), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) மற்றும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டீ.எல்.எப்.) ஆகியன இதில் அடங்கும்.

பாரம்பரிய தமிழ்த் தாயகத்தில் வசிக்கும் மூன்று இனச்சமூகங்களையும் குறிக்கும் வகையில் “திறீ ஸ்டார்” என்றும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டீ.எல்.எப்.) பரவலாக தெரியப்படுத்தப்பட்டது. இது புளொட்டில் இருந்து பிரிந்து சென்ற குழு மூன்று பிரிவுகளின் தலைமைத்துவத்தை பரந்தன் ராஜன் என்ற ஞானசேகரன், ஈஸ்வரன் மற்றும் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். இல் இருந்த டக்ளஸ் தேவானந்தா ஆகிய முத்தலைவர்களை கொண்டிருந்தது.

பின்னர் ஈஸ்வரன் அகற்றப்பட்டார். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவையடுத்து, இலங்கையின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது ஜனாதிபதியாகிய ரணசிங்க பிரேமதாஸாவின் ஆசியுடன் டக்ளஸ் தேவானந்தா ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை (ஈ.பீ.டீ.பீ.) ஆரம்பிப்பதற்காக அதில் இருந்து பிரிந்து சென்றார்.

அதேவேளை, செப்டெம்பர் மாதம் அளவில், இந்திய அமைதி காக்கும் படை அதன் துருப்புகளின் எண்ணிக்கையை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 40,000 க்கும் மேலாக அதிகரித்துவிட்டது. திருகோணமலை மாவட்டம், பிரிகேடியர் குல்வந்த் சிங்கின் நேரடி வழகாட்டலின் கீழ் இருந்தது. அவர் 54 ஆவது தரைப்படைப் பிரிவின் கட்டளையிடும் பிரதி ஜெனரல் அதிகாரியாக இருந்தார்.

76 ஆவது தரைப்படை பிரிகேட்டின் தளபதியான பிரிகேடியர் ஐ.எம்.தார் என்பவரின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பும் அம்பாறையும் இருந்தன.




இலங்கைக் கடற்படை 2 ஆம் திகதி அக்டோபர் மாதம் படகு ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த 17 எல்.ரி.ரி.ஈ. போராளிகளை பருத்தித்துறைக் கடற்கரைக்கு அப்பால் வைத்து கைது செய்தது. கடற்படை அவர்களை நிராயுத பாணியாக்கியது. அவர்களின் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்த சயனைட் குப்பிகளை அகற்றியது. இலங்கை இராணுவமும் இந்திய அமைதி காக்கும் படையும் தளங்களைக் கொண்டிருந்த பலாலிக்கு அவர்களைக் கொண்டு சென்றது.

பிடிபட்டவர்களில் இருவர் மிக முக்கியமான போராளிக் குழுத் தலைவர்கள் என்பது தெரியவந்தது. புலேந்திரன் – இவர் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் திருகோணமலைக்கான பிராந்தியத் தளபதி, குமரப்பா – இவர் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் யாழ்ப்பாணத்திற்கான பிராந்தியத் தளபதி. இந்த இரண்டு ஆயுதக்குழுத் தலைவர்களுக்காகவும் இலங்கை அரசு தலா ரூபா 10 லட்சம் சன்மானமாக வழங்க முன்னர் அறிவித்திருந்தது.

பிடிபட்ட 17 ஆயுதப்போராளிகளும் தமிழ் நாட்டிலிருந்து ஆயுதங்களை கொண்டுவந்ததன் மூலம் உடன்படிக்கையை மீறிச் செயல்பட்டிருக்கிறார்கள் என்றும் இலங்கையின் குடிவரவு நடைமுறைகளையும் மீறியுள்ளார்கள் என்றும் இலங்கை அரசு குற்றம் சுமத்தியது. விசாரணைக்காக போராளிகளை கொழும்புக்கு கொண்டுவரவேண்டும் என அரசு வலியுறுத்தியது.

காட்டுத்தீ போல செய்தி பரவியது. ஒரு முறை தவறிய நடவடிக்கை என்று எல்.ரி.ரி.ஈ. கருதியது. கைதான சகல போராளிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கிய உடன்படிக்கையை மீறிய செயலாகும் என்று அது தெரிவித்தது.

பொது மன்னிப்பானது உடன்படிக்கைக்கு முந்திய காலப்பகுதியோடு மட்டுமே சம்பந்தப்பட்டது என்றும் 17 ஆயுதபாணிகளும் உடன்படிக்கையை மீற கடற்பயணத்தை மேற்கொண்டிருந்தார்கள் என்றும் அரசு அதன் பதிலில் தெரிவித்தது. இந்தியாவுடன் தாம் 28 ஆம் திகதி செப்டெம்பர் மாதம் செய்து கொண்ட உடன்படிக்கை புலிகள் ஆயுதங்களை வைத்திருப்பதை அனுமதிக்கிறது என்பதை எல்.ரி.ரி.ஈ.: சுட்டிக்காட்டியது.

இலங்கை அரசு தடுப்பில் வைக்கப்பட்டிருப்பவர்களை விமானத்தில் கொழும்புக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று கோரியதுளு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போராளிகளுக்கு எதுவும் சம்பவித்தால் இன அமைதி குலையும் என்ற பலமான எச்சரிக்கையையும் இந்திய அமைதி காக்கும் படையின் ஆலோசனையையும் வேண்டுகோள்களையும் இலங்கை அலட்சியப்படுத்தியது.

எதிர்காலத்தில், மிக விரைவில் பல மிக்க எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துடனான ஒரு மோதலில் இந்திய அமைதி காக்கும் படையை சம்பந்தப்பட வைக்கும் தனது சொந்தத் திட்டம் ஒன்றை அரசு கொண்டிருந்தது. பிடிபட்ட ஆயுதபாணிகளை கொழும்புக்கு கொண்டு வர வேணடும் என்பதில் பிடிவாதமாக இருந்தது.

இலங்கை இராணுவத்தினர் ஆயுதக் குழுவை கொழும்புக்கு கொண்டுசெல்ல வந்தபோது, இந்திய அமைதி காக்கும் படையினர் பேசாமடந்தையபாகவும், பார்வையாளர்களாகவும் நின்றனர்.

ஆயினும், அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி அந்திநேரம் 17 எல்.ரி.ரி.ஈ. போராளிகளும் சயனைட் குப்பிகளை கடித்தார்கள். அவர்களில் புலேந்திரன் மற்றும் குமரப்பா ஆகியோர் அடங்கலாக 12 பேர் உடனடியாகயே மரணமானார்கள். பின்னர் மூவர் பலாலியிலிருந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் மருத்துவமனையில் மரணமானார்கள்.

அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி 1987 ஆம் ஆண்டு, இந்திய இராணுவப்பிரதானி ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி விமானத்தில் பலாலிக்கு வந்தார். அவருக்கு நிலைமைபற்றி எடுத்துரைக்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்கு எதிராக பலத்தைப் பிரயோகிப்பது என்ற அரசியல் முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது என்பது கண்கூடு.

[தொடரும்]



# உனக்கான தேசத்திலிருந்து நான் பாடுகிறேன்!

சிவராஜா. நிமலன்

..... எமது புலத்தில்
நடந்து திரிகிறேன்
புலம் பெயர்ந்த
நண்பனின் கனவுகளை
சுமந்தபடி!
அடி மனது மெல்ல
மெல்லக்கரைகிறது
ஆனாலும் இதயம் கனக்கிறது.
நினைவு வெளிதனில்
நிறைய வலிகளோடு
உலா வருகிறேன்.
உன் கால் தடங்களைக்கூட
அழிய விடாமல்
காற்று அணைபோட்டு
வைத்திருக்கிறது.
இயற்கையின் வனப்புக்கள்
உன் முகத்தை
பிரதிபலிக்கின்றன.
ஐயங்கள் உனைச்சூழ
ஐரோப்பாவிற்குள்
நீ புகுந்து கொண்ட போதும்
உன்னை இந்த மண்
இறுகப் பற்றிக்கொண்டது
ஆணிவேராய்!
என்றோ ஒரு நாள்
மீ(ண்டு)ள வருவாய்
என்ற நம்பிக்கையுடன்
காத்திருக்கிறேன்
ஒரு காணாமல் போன
மகனின்
தாயுள்ளத்தோடு!



# எஞ்சியதும் என்ன....?

எத்தனையோ நம்பி
எதற்காகவோ
கொடுத்ததெல்லாம்
காணிக்கைகள் மட்டுமே

பிறப்பின் இலக்கணம்
வியாக்கினியாக்கப்படும் பொழுதே
இறப்பின் இலக்குகளும்
இனங்காணப்பட்டு விட்டன

வேதங்கள்
விளக்கப்பட முன்னரே
வேதனைகள்
வரையப்பட்டு விட்டன

மாலையிட்ட
மக்களுக்கு
மிஞ்சியதெல்லாம்
மலர் வளையங்களே
சாபக்கேடுகளாய்
சந்ததிகள் சேர்ந்ததெல்லாம்
சல்லடைகளும்
சில்லறைகளுமே

கனவு கண்டு
கருதியதெல்லாம்
கல்லறைகளானதையே
கல்லறை கற்பிக்கிறது வரலாறு

கடந்த காலம்
கசப்பாக கழிந்தாலும்
எதிர் காலமாவது
இனிப்பாக அமையட்டும்

இனிப்படி - அதன்
விதிப்படி

வே. முல்லைத்தீபன்



# குறுக்கெழுத்துப் போட்டி - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 |
| | | 5 | 6 | | |
| | | 7 | | | |
| 8 | | | | 9 | |
| | | | 10 | | 11 |
| 12 | | | | | |

**இடமிருந்து வலம்**

1. கலண்டரில் பார்ப்பது.
3. இந்த மாத காற்றுக்கு அம்மியும் அசையும்.
5. இது இல்லாத உணவை யாரும் விரும்ப மாட்டார்கள்.
7. இங்கிருந்துதான் அருவி உருவாகின்றது.
8. இதற்கு முந்து.
10. பொம்மை.
12. இலங்கையின் ஜனாதிபதி.

**மேலிருந்து கீழ்**

1. காட்டில் இது தெரியாது.
2. திருமணமான பெண்.
4. இந்தியத் தலைநகரம்.
6. கல்லிலே செய்வது.
8. அதிக மரங்கள் உள்ள இடத்தை இப்படிக் கூறுவர்.
9. முயலின் இது நீளமானது.
10. குதிரை.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் மே 18 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 21.05.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 1**
**தினச்செய்தி வாரமலர்,**
தில்லைக்கட்டி வீதி,


# வைகோ வெளிநடப்பு

## கூட்டணித் தலைவர்கள் அதிர்ச்சி


கருணாநிதியையும் ஜெயலலிதாவையும் வீட்டுக்கு அனுப்புவதற்காக மூன்றாவது அணியை வெற்றிகரமாக உருவாக்கிய வைகோ, தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார். வைகோவின், இந்த முடிவு மக்கள் நலக் கூட்டணித் தலைவர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இதனால் மகிழ்ச்சியடைந்துள்ளன. தமிழக அரசியல் திராவிடக் கழகங்களைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளது. புதிய கட்சி ஆரம்பிப்பவர்களும் திராவிடம் என்ற பெயர் வருவதை விரும்புகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் மாற்றீடாக மூன்றாவது அணியை உருவாக்குவதில் வெற்றி பெற்ற வைகோவால் கருணாநிதிக்கும், ஜெயலலிதாவுக்கும் சவால்விடும் தலைவராக உருவாக முடியவில்லை. புதிய கூட்டணியை உருவாக்கிய அவரால் சக்தி மிக்க தலைவரை உருவாக்க முடியவில்லை. தேர்தலுக்கு முன்னரே வைகோ தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார்.

தேர்தலில் வெற்றி பெறுவோம். ஆட்சியை அமைப்போம். நான்தான் அடுத்த முதலமைச்சர் என்று பிரசாரம் செய்யும் தலைவர்கள் தமது கட்சி வெற்றி பெறும் தொகுதியை தேர்ந்தெடுத்துள்ளனர். தமது கூட்டணி வெற்றி பெறும் என்று மேடையில் உறுதியாக அடித்துக்கூறும் தலைவர்கள் கூட்டணிக் கட்சியின் செல்வாக்கு மிக்க தொகுதியின் மீது கண்வைத்துள்ளனர். மக்கள் நலக் கூட்டணியின், இணைப்பாளரான வைகோ, கோவில்பட்டி தொகுதியில் போட்டியிடப் போவதாக அறிவித்தார். கோவில்பட்டி கொம்யூனிஸ்ட் கட்சியின் கோட்டை. அங்கு தொடர்ச்சியாக ஏழு முறை கொம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளனர். கோவில்பட்டியை விட்டுக்கொடுக்க இடதுசாரிகள் விரும்பவில்லை. கூட்டணித் தலைவரின் வெற்றி முக்கியம் என்பதனால் வைகோவுக்காக கோவில்பட்டியை விட்டுக் கொடுத்தனர். வைகோ போட்டியில் இருந்து விலகியதால் அவருடைய கட்சியைச் சேர்ந்த இன்னொருவரின் வெற்றிக்காக கொம்யூனிஸ்ட்கள் களத்தில் இறங்குவார்களா என்பது சந்தேகம். தமிழகத்தின் எந்தத் தொகுதியிலும் போட்டியிடும் துணிவு கட்சித் தலைவருக்கு இருக்க வேண்டும். எல்லாத் தலைவர்களும் தமது கட்சிக்குச் சாதகமான தொகுதியையே தேர்ந்தெடுத்துள்ளனர். தனது கூட்டணி தான் வெற்றி பெறும் என்று மேடைதோறும் முழங்கும் வைகோ, இடதுசாரிகளின் கோட்டையில் பாதுகாப்பாக போட்டியிட திட்டமிட்டார். தனது கட்சியின் மூலம் தான் வெற்றி பெறும் ஒரு தொகுதியை அவரால் அடையாளம் காண முடியவில்லை.

என்னை முன்னிலைப் படுத்தி சாதிச் சண்டையை உருவாக்க திராவிட முன்னேற்றக்கழகம் முயற்சி செய்கிறது. அதனால்தான், தேர்தலில் போட்டியிடவில்லை என்று வைகோ கூறியுள்ளார். வைகோவின் இந்தக் காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தோல்வி நிச்சயம் எனத் தெரிந்ததனால் வைகோ போட்டியிடவில்லை என்றுதான் கருத வேண்டியுள்ளது. கோவில்பட்டி தொகுதியில் தேவர் சமுதாய மக்கள் அதிகமாக உள்ளனர். தேவர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளராக நிறுத்தியுள்ளது. வைகோவின் சமுதாயத்தைச் சேர்ந்தவரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளராக நிறுத்தியுள்ளது. தேவர் சமுதாய வாக்குகள் அதிகளவில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்குப் போகும். வைகோவின் சமுதாய வாக்குகள் பிரிபடும் நிலை உள்ளது. வைகோவை வீழ்த்துவதற்காக அவருடைய சமுதாயத்தவர்கள் வேட்பாளர்களாக களமிறக்கப்படுவர்கள். அதனால் வாக்குகள் மேலும் சிதறும்நிலை உள்ளது. இவற்றை எல்லாம் துல்லியமாக கணக்குப்பார்த்து தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கியுள்ளார் வைகோ. வைகோவின் முடிவு மக்கள் நலக் கூட்டணிக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கட்சித்தலைவர் தேர்தலில் போட்டியிடாமல் பின்னடித்தால் தொண்டர்களின் மனநிலை பாதிப்படையும். வைகோவின் துணிச்சலில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அதீத நம்பிக்கை வைத்திருந்தனர். சோர்ந்திருந்த தலைவர்களை சுறுசுறுப்பாக்கியவைகோவின் முடிவு அடி மட்டத் தொண்டர்களை துவள வைத்துள்ளது. கோவில்பட்டியில் வைகோ வேட்பு மனு தாக்கல் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்தால் கறுப்பு கொடி காட்டப்போவதாக அகில இந்திய தேவர கூட்டமைப்பினர் அறிவித்திருந்தனர். இதனால் பஸ் நிலையம் அருகே தேவர் சிலை பகுதியில் திரண்ட அந்த அமைப்பை சேர்ந்தவர்களை பொலிஸார் கைது செய்தனர். வேட்புமனு தாக்கல் செய்வதற்காக தொண்டர்களுடன் வைகோ ஊர்வலமாக அப்பகுதியை கடந்து சென்றார். அப்போது வைகோவை எதிர்த்து அவர்கள் கோஷம் எழுப்பினர். அப்போது வைகோவுடன் வந்த தொண்டர்கள் அவர்கள் மீது கற்களை வீசினர். பொலிஸார் இருதரப்பினரையும் ஒழுங்குபடுத்தினர்.



- வர்மா -



மதியம் 12.30 மணிக்கு ஆர்டி.ஓ. அலுவலகம் சென்ற வைகோ வாசல் அருகில் பிரசாரம் செய்தார். பின் வைகோ மாவட்ட செயலர் ஆர்.எஸ். ரமேஷ் சட்டத்துறை செயலர் தேவதாஸ் மாவட்ட இளைஞரணி செயலர் விநாயகா ரமேஷ் இந்திய கம்யூ. நிர்வாகி அழகு முத்துப்பாண்டியன் ஆகியோர் மட்டும் அலுவலகத்திற்குள் சென்றனர். அங்கு வைகோ "மாற்று வேட்பாளர் விநாயகா ரமேஷ் வேட்பு மனு செய்வார். நான் ஏப். 27 இல் மனு தாக்கல் செய்வேன்" என்றார். வேட்புமனு தாக்கல் செய்ய ரமேஷிடம் பணம் இருக்கவில்லை. இதனால் வைகோ பணம் செலுத்தினார். பி.ஆர்டி.ஓ. கண்ணபிரானிடம் விநாயகா ரமேஷ் மனுத் தாக்கல் செய்தார். வைகோவுடன் சென்றவர்கள் திகைத்தனர். என்ன செய்வதெனத் தெரியாமல் தடுமாறினர். அலுவலகத்தை விட்டு வெளியே வந்த வைகோ, திராவிட முன்னேற்றக்கழகத்தை கடுமையாகத் தாக்கிப் பேசிவிட்டு சாதிக் கலவரத்தை திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டுவதால் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்தார். தோல்விப்பயத்திலேதான் வைகோ தேர்தலில் போட்டியிடவில்லை என்று எதிரணிகள் குதூகலம் கொள்கின்றன. யாரும் எதிர்பார்க்காத, வைகோவின் முடிவு அவருக்கு விசுவாசம் உள்ள தொண்டர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

பேராளி, புரட்சிக்காரர் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் வைகோ ஸ்டெர்லைட், கொக்க கோலா போன்ற பிரம்மாண்ட பன்னாட்டு நிறுவனங்களை எதிர்க்க தயங்காத வைகோ, ஏழு பேர் அடங்கிய ஒரு கும்பல் எழுப்பிய கூச்சலுக்கு அஞ்சி, தேர்தல் போட்டியில் இருந்தே விலகி விட்டார் என்பதை, தமிழகத்தில் யாராலும் நம்ப முடியவில்லை. தேவர் சிலைக்கு மாலை அணிவிக்கச்சென்றபோது நடந்தது ஒரு சின்ன உரசல் தான். அதையும், தேவர் சமூகத்தை சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் தனது சமூகத்தின். எண்ணிக்கையை பற்றி பேசியதையும், இணைத்து வைகோ, விஷயத்தை பெரிதாக்கிவிட்டார். திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் பேசியதை அந்த கட்சியின் தலைமை கண்டிக்கவில்லை. அதனால், திராவிட முன்னேற்றக் கழகம் சாதிக் கலவரத்தை தூண்ட முனைகிறது என்று வைகோ கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதுவரை, கோவில்பட்டி பகுதியில், தேவர்களுக்கும், நாயுடுகளுக்கும் எந்த கலவரமும் ஏற்பட்டதில்லை. அப்படி இருக்க, ஒரு சிலை சம்பவத்தை வைத்து கலவரத்தை ஏற்படுத்தி விட முடியுமா? ஒவ்வொரு ஊரிலும், பொருளாதார ரீதியாக ஒவ்வொரு சாதியும், ஒன்றை ஒன்று சார்ந்து தான் வாழ்கின்றன வைகோவிற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள், நடிகர் கருணாசின் புலிப்படை அமைப்பு மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் என, பொலிஸ் வட்டாரங்கள் பேசிக் கொள்கின்றன. கருணாஸ், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின். 'சார்பில் திருவாடானை தொகுதியில் போட்டியிடுகிறார். வைகோவுக்கு எதிராக கலவரம் செய்தவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர்கள். ஆனால், வைகோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி போடுகிறார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கழகத்தின் இன்னொரு வடிவம் தான் மக்கள் நலக் கூட்டணி என்ற கருத்து பரவலாக உள்ளது. வைகோவின் நடவடிக்கை அதனை உறுதிப்படுத்துவது போல இருக்கிறது. அனல் கக்கும் வைகோவின் தேர்தல் பிரசாரம் ஸ்டாலினைக் குறிவைத்து நடத்தப்படுகிறது. ஸ்டாலினையும் கருணாநிதியையும் மிக மோசமாகத் தாக்கி பேசும் வைகோ ஜெயலலிதாவுக்கு எதிராக எதனையும் பேசவில்லை. வைகோவின் கட்சியைச்சேர்ந்தவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றாலும் அதனை வைகோவின் வெற்றியாகக் கருத முடியாது. தேர்தலுக்கு முன்னரே வைகோ தோல்வியடைந்துவிட்டார்.

# உறவுக்குப் பாலம் அமைக்கும் கப்பல் பயணம்...

-ராஜேஸ் மணாளன்-




ஆண்டாண்டு காலமாக பல அரசுகள் கீரியும் பாம்பும் போல ஆளை ஆள் பார்த்து சீறிய வண்ணமாகவே இருக்கின்றன. இடைமிடையே தாக்குதல்களையும் தொடுக்கின்றன. இந்த ஜன்மப் பகை எப்பொழுது ஒழியும் என்று மக்கள் ஏங்குமளவிற்கு, நாடுகள் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதிக் கொள்வது கவலைக்குரியதே.

வட கொரியாவையும் தென் கொரியாவையும் பாருங்கள். இன்னமும் அடிபட்ட வண்ணமாகவே இருக்கின்றன. தென் கொரியாவோடு இணைந்தால் எப்படி எப்படியெல்லாம் தன்னை வளர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிப் பார்க்க வடகொரியாவுக்கு நேரமில்லை. சீனா – திபெத், பாகிஸ்தான்–இந்தியா என்று ஆசியநாடுகள் பல அவசியமற்ற முறையில் ஒன்றுடன் ஒன்று உரசிக் கொண்டு முறுகல் நிலையில் இருப்பது எந்தவகையிலும் அந்தந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கப் போவதில்லை.

மாறாக போர் ஆயுதங்களை வாங்கிக் குவிக்க பெரும் பணத்தை வரிமிறைப்பதிலேயே காலம் கழியும். பணமும் கரையும்.

பார்தன்னில் போர் என்பது அவசியந்தானா? இல்லவே இல்லை.

காலங்காலமாகவே அமெரிக்காவும் கியூபாவும் முறுகல் நிலையில் நின்ற நிற்கும் நாடுகள்.. 1960 இல் அமெரிக்க ஜனாதிபதியாக ஐஸன்ஹோவர் இருந்த போது கியூபாவிற்கான அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு தடை போட ஆரம்பித்த காலந்தொட்டே, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் விரிசலைக் காண ஆரம்பித்தன.

1959 இல் கியூபாவின் கொடுங்கோல் அரசைத் தூக்கியெறிந்து ஆட்சியைக் கைப்பற்றிய பிடல் காஸ்ரோதான், இந்தக் காலகட்டத்தில் அப்போதைய பிரதமர்.

இப்படி ஆரம்பித்து பல அரசியல் தாக்குதல்களை எதிர்கொண்ட கியூபா–அமெரிக்க உறவு இப்பொழுது ஒரு புதுத் திருப்பத்தைச் சந்தித்திருப்பது ஒரு தனிச் சிறப்பு என்றே சொல்ல வேண்டும்.

**என்னதான் நடந்தது?**

ஏறத்தாழ 50 வருட காலக் காத்திருப்பின் பின்னர், கியூபாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆடம்பரக் கப்பல் பயணம் சாத்தியமாகி இருக்கின்றது.

704 பயணிகளுடன் கூடிய அடோனியா என்ற இராட்சத உல்லாசப் பயணிகளுக்கான கப்பல் தனது ஏழு நாள் பயணத்தை (01.05.16) அன்று அமெரிக்காவின் மியாமி நகரிலிருந்து கியூபா நோக்கி ஆரம்பித்துள்ளது.

கியூபாவில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள், கடல் மார்க்கமாக கப்பலில் பயணஞ் செய்ய இதுவரையில் கியூபா அரசு அனுமதிக்கவில்லை.

அது இப்பொழுது, 50 வருட இடைவெளியில் சாத்தியமாகி இருக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி, கியூபா, தனது இறுக்கமான கொள்கைகளை விட்டுக் கொடுத்து, தளர்வு ஏற்படுத்தியதன் காரணமாகவே, இந்தக் கப்பல் பயணம் நடைமுறைக்கு வந்துள்ளது. கியூபன் அமெரிக்க பிரஜைகளும், இந்த விடயமாகக் கருணை காட்டும்படி, கியூப அரசு மீது வழக்குத் தொடுத்திருந்தார்கள்.

இனிவருங் காலங்களில் இரு வாரங்களுக்கு ஒரு தடவை மியாமி–கியூபாவிற்கான கப்பல் பயணங்கள் இடம்பெறும் என்று கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. தலைக்கு 1800 டாலர்கள் ஒரு பயணியிடமிருந்து அறவிடப்படும் என்றும் இவர்கள் அறிவித்துள்ளார்கள்.

கப்பலில் பயணித்த பயணிகளில் ஒருவரான 73 வயதுடைய நிக் ஸ்னைடர் என்பவர், இந்தப் பயணத்தை அளவு கடந்த குதூகலத்தோடு வரவேற்றுள்ளார்.

60 வருடக் காத்திருப்பின் பின்னர், கியூபா நாட்டுத் தேசியக் கொடியைக் கையில் பிடித்தபடி, இவர் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

1957 இல் படகு மூலம் தனக்கு கியூபாப் பயணம் சாத்தியப்பட்டு இருந்தாலும், இப்படி ஒரு தருணத்திற்காகவே காத்திருந்ததாக, மனப்பூரிப்புடன் இவர் பத்திரிகையாளருக்குத் தெரிவித்து இருக்கின்றார்.

அமெரிக்க–கியூபா நாடுகளுக்கு இடையிலான நீண்ட கால பனிக்கால யுத்தம், 2014 இன் பிற்பகுதியில் பற்பல மாற்றங்களைக் காண ஆரம்பித்தது. இது கடந்த மார்ச் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, கியூபாவின் ஜனாதிபதி ராவுல் காஸ்ரோவைச் சந்தித்த சரித்திர சம்பவத்தோடு பெரும் அரசியல் திருப்பங்களைக் கண்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி, கடந்த மார்ச் மாதம், இரண்டு நாள் விஜயத்தை கியூபாவிற்கு மேற்கொண்டிருந்தார்.

**எங்கேயும் எதிர்ப்புகள் இல்லாதிருக்குமா?**

இந்தக் கப்பல் பயணத்தை எதிர்த்து, புளோரிடாவில் ஒரு படகில் பயணித்து வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள்.

1961 இல் அமெரிக்க ஜனாதிபதியாக கென்னடி இருந்தபோது கியூபாவுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும், அமெரிக்கா துண்டித்துக் கொண்டது. அமெரிக்காவில் நிலை கொண்டிருந்த கியூப பிரஜைகளை உளவாளிகளாகப் பயிற்றுவித்து Bay of Pig என்ற வளைகுடாவைக் கைப்பற்ற அமெரிக்காவால் எடுத்த முயற்சியில் வெற்றி காண முடியவில்லை.

தன் நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்திக் கொள்ள, தன் நாட்டை ஒரு கம்யூனிஸ நாடாக காஸ்ரோ அறிவிக்க, இந்தத் தாக்குதலே ஓர் உந்துதல் ஆயிற்று.


Operation Mongoose என்ற பெயரில், காஸ்ரோவைத் தீர்த்துக் கட்டி ஆட்சியைக் கவிழ்க்க, கென்னடி அரசு எடுத்த முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராயிற்று.

இந்த உறவைச் சுமுக நிலைக்குக் கொண்டுவர, 1977 இல் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் எடுத்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை.

1980 இல் தன் எல்லைகளைத் திறந்து, எவரும் நாட்டை விட்டு வெளியேறலாம் என்று நாட்டை திறந்த வீடாக்கியபோது, நாட்டை விட்டு ஓடித் தப்பியவர்கள் ஏறத்தாழ 125 000 என்கிறார்கள். இதில் பெரும்பான்மையானவர்கள் ஏதோ ஒரு குற்றத்திற்காக கைதாகியவர்கள்.

பல மோதல்களை இரு நாடுகளும் சந்தித்த பின்னர் 2000 மாவது ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனும் பிடல் காஸ்ரோவும் ஐ.நா.சபையில் கை குலுக்கிக் கொண்டது இந்த இரு நாடுகளினது உறவில் ஒரு பெரிய திருப்பு முனையாக அமைந்தது என்றே சொல்ல வேண்டும். இதையடுத்து 2001இல் மிச்சேல் என்று பெயரிடப்பட்ட சூறாவளி கியூபாவைத் தாக்க, அமெரிக்கா 40 வருடங்களுக்குப் பிறகு கியூபாவிற்கு உணவு ஏற்றுமதி செய்தமை சரித்திரத்தில் பொறித்த நிகழ்வாயிற்று.

அதாவது இயற்கையின் நாசம் சமாதான உறவுக்கு பாலம் போட்டது.



அதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி புஷ் கியூபாவுடன் முட்டி மோத, 2008 இல் பிடல் காஸ்ரோவின் சகோதரர் ராவுல் காஸ்ரோ கியூபாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஒபாமா தெரிவாகியபோது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சுமுகமான நிலைக்கு மெல்ல மெல்ல மாற ஆரம்பித்தன.

2009இல் பயணக் கட்டுப்பாடுகளை ஒபாமா, அமெரிக்காவில் வதியும் கியூபா நாட்டவர்களுக்கு தளர்த்தியதோடு, உறவினர்களுக்கு பணம் அனுப்பும் தொகையின் கட்டுப்பாட்டையும் நீக்கியது, இரு நாடு களுக்கும் இடையிலான நல்லுறவை வளர்க்க வித்தை போட்டது என்றே சொல்ல வேண்டும்.

எது எப்படியோ கீரியும் பாம்புமாக அடிபட்ட நாடுகள் இரண்டு, கைகுலுக்க ஆரம்பித்திருப்பது, சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு மாத்திரமல்ல, முழு உலகுக்குமே நன்மை பயக்கும் என்பதே யதார்த்தம்.



## ரகுமான் இசையில் நித்யா மேனன்

தமிழில் 24 படத்தில் சூர்யாவுடனும், விக்ரமுடன் இருமுகன் படத்திலும் இரண்டு நாயகிகளில் ஒருவராகவும், சுதீப்புடன் முடிஞ்சா இவனப் புடி படத்தில் தனி கதாநாயகியாகவும் நடித்து வருகிறார் நித்யா மேனன். இவர் ஒரு சிறந்த நடிகை மட்டுமல்ல, சிறந்த பாடகியும் கூட. மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டவராக இருந்தாலும் கன்னடம், தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் பத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். நித்யா மேனன் ஒரு பாடகி என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. நித்யா மேனன் பாடும் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்ட இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் 24 படத்திற்காக தெலுங்கில் ஒரு பாடலைப் பாட வைத்துள்ளார். லாலிஜோ என்ற பாடலை அற்புதமாகப் பாடியிருக்கிறார் நித்யா மேனன். ஆனால், இந்தப் பாடலைத் தமிழில் சக்தி ஸ்ரீ கோபாலனைப் பாட வைத்துவிட்டார் ரகுமான். தமிழிலும் நித்யா மேனனே பாடியிருந்தால் இங்கும் அவருக்கு நல்ல பெயர் கிடைத்திருக்கும். இருந்தாலும் தெலுங்கில் நித்யா மேனன் பாடிய பாடலுக்கு அங்கு பெரிய வரவேற்பு கிடைத்துள்ளதாம். ரகுமான் இசையில் பாடியதன் மூலம் தன்னுடைய கனவு நனவானதாக நித்யா மேனன் மிகவும் மகிழ்ச்சியில் உள்ளாராம். மலையாள நடிகைகள் மற்ற மொழிகளில் பாடி பெயர் வாங்குவது நித்யா மேனன் மூலமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த விதத்தில் இப்போதைய நடிகைகளில் நித்யா மேனன்தான் சீனியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜூலியும் நாலு பேரும்




தமிழ் சினிமாவில் பேய் சீஸன் தொடங்கி சிறப்பாக போய் கொண்டிருக்கிறது. இந்நிலையில், நாய் சீஸன் தொடங்கி இருக்கிறது. நாயை மையமாக வைத்து 'ஜூலியும் நாலும் பேரும்' என்ற பெயரில் புது படம் உருவாகியுள்ளது. ரீச் மீடியா சொல்யூஷன் என்னும் புதிய பட நிறுவனம், சஹானா ஸ்டுடியோவுடன் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தை சதீஸ்.ஆர்.வி. என்ற இளம் இயக்குனர் இயக்கியுள்ளார். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் சமீபத்தில் வெளியானது. இது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றது. இப்படம் குறித்து இயக்குனர் சதீஸ் கூறும்போது, "இப்படம் சர்வதேச அளவில் நடக்கும் நாய் கடத்தலை பற்றிய படம். அது மட்டுமின்றி முழுக்க முழுக்க குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட காமெடி படம். பிரபல தொலைக்காட்சி புகழ் அமுதவாணன் மற்றும் ஜார்ஜ் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள். ஜம்முவை சேர்ந்த ரீனா என்ற பெண் கதாநாயகியாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகமாகிறார். "அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து "ஜூலி" என்ற கதாபாத்திரத்தில் நடிக்க வைக்கப்பட்ட, பீகிள் வகையைச் சேர்ந்த லக்கி என்ற நாய் இப்படத்தின் ஹீரோவாக நடித்திருக்கிறது' என்றார்

## ஹன்சிகாவின் கடைசி ஆசை



திரிஷா, நயன்தாராவுக்கு திடீர் மவுசு ஏற்பட்டதால் ஹன்சிகா, காஜல் அகர்வால் போன்ற நடிகைகளின் பட வாய்ப்புகள் குறைந்தது. ஹன்சிகாவை பொறுத்தவரை தமிழில் அவர் நடித்த 'உயிரே உயிரே' படம் சமீபத்தில் வெளியானது. இதையடுத்து 'மனிதன்', 'போகன்' என 2 படங்களில் நடித்து வருகிறார். டோலிவுட் படங்கள் எதுவும் கைவசம் இல்லை. புதிய படங்களை ஏற்பதற்காக ஸ்கிரிப்ட் கேட்டு வருகிறார். நடிகை ஆகாமலிருந்தால் டாக்டராக ஆகி இருப்பேன் என்று அவர் கூறுவதுண்டு. அவரது தாயார் டாக்டர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அடிக்கடி நியூயார்க் டூர் கிளம்பி விடுவதும் அங்கேயே சுமார் 1 மாதம் தங்குவதும் ஹன்சிகாவுக்கு பிடிக்கும். நியூயார்க் மீது அவர் கொண்டிருக்கும் காதல்தான் அவரது இந்த பயணத்துக்கு காரணமாம். சமீபத்தில் தனது விருப்பம்பற்றி பேட்டி அளித்த ஹன்சிகா, ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, '100 வயது வரை வாழ்வேன் என்பதில் நம்பிக்கை உண்டு. உறங்கும்போதே நிம்மதியாக இறக்க வேண்டும் என்பதுதான் ஆசை' என குறிப்பிட்டார்.


## 'சபாஷ் நாயுடு'



டி.கே. ராஜீவ் குமார் இயக்கத்தில் கமலும் ஸ்ருதி ஹாசனும் நடிக்கும் படத்துக்கு சபாஷ் நாயுடு என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் பூஜை விழா சென்னையில் நடைபெற்றது. கமல், ஸ்ருதியுடன் பிரம்மானந்தம், ரம்யா கிருஷ்ணன் ஆகியோரும் நடிக்க உள்ளார்கள். கமலின் மனைவியாக ரம்யா கிருஷ்ணனும் மகளாக ஸ்ருதி ஹாசனும் நடிக்கிறார்கள். இந்தப் படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார். 1989இல் டி.கே. ராஜீவ் குமார் இயக்கத்தில் சாணக்கியன் என்கிற படத்தில் நடித்தார் கமல். இப்போது 26 வருடங்கள் கழித்து மீண்டும் ராஜீவ் குமாருடன் இணைகிறார் கமல். சபாஷ் நாயுடு - தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் உருவாகிறது. தமிழ் படத்துக்கான இந்த டைட்டிலை இளையராஜா வழங்கியதாக கமல் ஹாசன் கூறியுள்ளார்.

தசாவதாரம் படத்தில் இடம்பெற்ற பல்ராம் நாயுடு கதாபாத்திரத்தில் படம் முழுக்க வருகிறார்

## நடிக்க மறுக்கும் மாதவன்



மலையாள படமான 'சார்லி'யின் தமிழ் ரீமேக்கில் நடிக்க மாதவன் தயக்கம் காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2015ம் ஆண்டின் கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கணக்கில் கொண்டு கேரளாவில் வெளியான மலையாளப் படம் 'சார்லி'. துல்கர் சல்மான், பார்வதி மேனன், அபர்ணா கோபிநாத், நெடுமுடி வேணு உள்ளிட்ட பலர் நடித்த இப்படத்தை மார்டின் ப்ராகாட் இயக்கினார். ஃபைண்டிங் சினிமா என்ற தயாரிப்பு நிறுவனம் தயாரித்தது. மலையாளத்தில் இப்படத்துக்கு இளைஞர்கள் மத்தியிலும், விமர்சகர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பு கிடைத்தது. வசூலையும் வாரிக் குவித்தது. இப்படத்தின் ரீமேக் உரி

மையைக் கைப்பற்ற தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையே கடும் போட்டி நிலவியது. இந்தி திரையுலகில் பிரபல நிறுவனமான பிரமோத் பிலிம்ஸ் 'சார்லி' ரீமேக் உரிமையைக் கைப்பற்றியுள்ளது. துல்கர் சல்மான் வேடத்தில் நடிக்க தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்கள். மலையாளத்தில் நாயகியாக நடித்த பார்வதியே தமிழிலும் நாயகியாக நடிப்பார் என கூறப்படுகிறது.

தமிழில் துல்கர் சல்மான் வேடத்தில் நடிக்க மாதவனிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். ஆனால் மாதவன் துல்கரின் வேடத்தில் நடிக்க இன்னும் சம்மதம்

# இதயத்தை தொட்ட நடிகை



விஜய்யுடன் நான் நடித்த 'தெறி' படத்தின் வெற்றி எனக்கு டானிக். தமிழில் ராசி இல்லை என்று என்னை குறை சொன்னவர்கள் இனி வாய்திறக்க முடியாது. ஐதராபாத்தில் நான் தெறி படம் பார்த்தபோது நான் சாகிற சீனை பார்த்து பலர் அழுதாங்க. அதுவே எனக்கு பெரிய வெற்றி.

'24' படத்தில் சூர்யா 3 வேடங்களில் நடிக்கிறார். அதில் ஒரு வேடத்தில் வரும் சூர்யாவுக்கு நான் ஜோடியாகநடித்திருக்கிறேன். அடுத்து 'வடசென்னை' படத்தில் தனுசுடன் நடிக்க இருக்கிறேன். இதில் குப்பத்து பெண்ணாக வருகிறேன் தெலுங்கில் மகேஷ்பாபு, ஜுனியர் என்.டி.ஆர், நிதின் ஆகியோர் ஜோடியாக 3 படங்களில் நடிக்கிறேன்.

நான் சாதாரண குடும்பத்தில் இருந்து சினிமாவுக்கு வந்தேன். மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் எனக்கு அதிகம் உண்டு. சினிமாவில் நடிக்கத் தொடங்கி 6 வருடங்கள் ஆகிறது. எனவே என்னிடம் இருக்கும் பணத்தை கொண்டு முடிந்த அளவு உதவுகிறேன். இது வரை 70 பேருக்கு இலவச இதய அறுவை சிகிச்சைக்கான முழு உதவியையும் செய்து இருக்கிறேன். இதற்காக 'பிரத்யூக்ஷா பவுண்டேஷன்' என்ற அறக்கட்டளை அமைத்து இருக்கிறேன். இன்னும் பலருக்கு உதவ வேண்டும் என்பது எனது விருப்பம். எனவே என்னால் முடிந்ததை செய்து கொண்டு இருக்கிறேன்" என்றார்

## வீரர் பிராவோவின் விருப்பம்

ஐபிஎல் போட்டிக்காக இந்தியா வந்துள்ள மேற்கு இந்தியத் தீவுகள் அணி வீரர், டிவைன் பிராவோ பாலிவுட்டில் நடிக்க ஆர்வமாக உள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது: பாலிவுட்டுக்குள் நுழைவது என் கனவுகளில் ஒன்று. ஒருகட்டத்தில் நிச்சயம் அதைச் செய்துகாட்டுவேன். ஏற்கெனவே சில வாய்ப்புகள் கிடைத்துள்ளன. அதேசமயம் கிரிக்கெட்டுக்குதான் முக்கியத்துவம் அளிப்பேன். பாலிவுட்டில் சல்மான் கான் ஷாருக் கான், தீபிகா படுகோன் ஆகியோருக்கு நான் ரசி கன். ஹிந்திப் படங்கள் நான் பார்த்துள்ளேன். என்னால் சில ஹிந்தி வார்த்தைகளைப் பேசமுடியும் என்றார்.

# தமன்னாவுக்கு திருமணம்

அது என்ன மாயமோ தெரியவில்லை.வெற்றி கிடைக்கும்போதுதான் அதை அழிக்கும் விதமாக சர்ச்சைகளும் வந்து அமர்கின்றன.தமன்னா விஷயத்திலும் அதுதான் நடந்திருக்கிறது. ஊசலாடிக் கொண்டிருந்த அவரை 'பாகுபலி'யும், 'உப்பிரி'யும் (தமிழில் 'தோழா') ஒரு தூக்கு தூக்கி இருக்கிறது.இரு படங்களின் வரலாறு காணாத வசூலால் சந்தோசமாக.இந்த நேரம் பார்த்துத்தான் எந்த புண்ணியவானோ கொளுத்திப் போட்டிருக்கிறார்.'கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஒருவரை விரைவில் தமன்னா திருமணம் செய்து கொள்ளப் போகிறார்... இனி படங்களில் நடிக்க மாட்டார்...'அவ்வளவுதான் பதறிவிட்டார். 'இப்போதைக்கு திருமணம் செய்து கொள்ளும் எண்ணமில்லை. நான் சிங்கிள்தான். தொடர்ந்து படங்களில் நடிப்பேன்...' என போவோர் வருவோரை எல்லாம் சொல்லி வருகிறார்.



# விளையாட்டு

## மிஸ், இங்கிலாந்து பட்டத்துக்கு குறிவைக்கும் கேம்பிரிட்ஜ் மாணவி

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவியான யுவதியொருவர் இவ்வருட மிஸ் ,இங்கிலாந்து அழகுராணி பட்டத்துக்குப் போட்டியிடுகிறார். ஆனால், அழகுராணி போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு உடற்தோற்றத்தைவிட அறிவே முக்கியமானது என்கிறார் அவர்.21 வயதான பேத் புரூக்பீல்ட் எனும் யுவதி, பிரிட்டனிலுள்ள உலகப் புகழ் பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உளவியல் துறையில் கல்வி கற்கும் மாணவியாவார். எதிர்காலத்தில் கணக்கியலாளராக வேண்டும் என்பது அவரின் அவா.

அதேவேளை, அழகுராணி போட்டிகளிலும் பேத் புரூக்பீல்ட் ஆர்வம் காட்டுகிறார். கடந்த ஞாயிறன்று கேம்பிரிட்ஜ்ஷயர் பிராந்திய அழகுராணியாகவும் முடிசூட்டப்பட்டார்.தன் மூலம் மிஸ் ,இங்கிலாந்து அழகுராணி போட்டியில் பங்கு பற்றுவதற்கும் அவர் தகுதி பெற்றுள்ளார். எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள மிஸ் இ,ங்கிலாந்து அழகுராணி போட்டியில் தன்னால் வெற்றி பெற முடியும் என அவர் நம்புகிறார்எனினும், அழகு ராணி போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு உடல் அழகை விட போட்டியாளர்களின் அறிவே வெற்றியின் இரகசியமாகும் என்கிறார் பேத் புரூக்பீல்ட்.பேர்மிங்ஹாம் நகரில் ஆடைக் கண்காட்சியொன்றில் பங்குபற்றிய அவர், 2013 ஆம் ஆண்டிலும் கேம்பிரிட்ஜ்ஷயர் அழகுராணி போட்டியில் பங்கு பற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால், அப்போது அந்த அழைப்பை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், இம் முறை இப் போட்டியில் பங்குபற்றியதுடன் அதில் முதலிடத்தையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். அத்துடன் இப் போட்டியில் மிஸ் பிறெய்னி பியூட்டி, மிஸ் சோஷல் மீடியா, மிஸ் சரிட்டி ஆகிய பட்டங் களையும் அவர் வென்றார்.





## நீச்சல் போட்டியில் பதக்கங்களை வென்ற ஈழச்சிறுமி




மதுரையில் நடைபெற்ற 10 வது தமிழ்நாடு மாநில குறுந்தொடர் நீச்சல் போட்டித்தொடர் (10 th Tamilnadu State Short Course Swimming Championship) இல் கலந்துகொண்ட ஈழச்சிறுமி தனுஜா ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் வெண்கலம் என மூன்று பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கில் கடந்த 23,24 ஆம் திகதிகளில் நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் பங்கேற்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தனுஜா ஜெயக்குமார் பத்து வயது பிரிவில் நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டார்.

25 மிற்றுர் Butterfly பிரிவு நீச்சல் போட்டியில் குறித்த தூரத்தை 17:32 வினாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்து தங்கப்பதக்கத்தையும், 25 மீட்டர் Back Stroke பிரிவு நீச்சல் போட்டியில் குறித்த தூரத்தை 19:57 வினாடிகளில் கடந்து இரண்டாவதிடத்தை பிடித்து வெள்ளிப்பதக்கத்தையும், 50 மிற்றர் Free Style பிரிவு நீச்சல் போட்டியில் குறித்த தூரத்தை 34:62 வினாடிகளில் கடந்து வெண்கலப்பதக்கத்தையும் தனதாக்கியுள்ளார். இதேவேளை 25 மிீற்றர் Free Style பிரிவு நீச்சல் போட்டியில் குறித்த தூரத்தை 15:12 வினாடிகளில் கடந்து இரண்டாவதாக வந்த போதிலும் ஆரம்ப ஒலி எழுப்புவதற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டார் என்ற காரணத்தை குறிப்பிட்டு தகுதிநீக்கம் செய்யப்பட்டமையால் இன்னொரு பதக்க வாய்ப்பு இல்லது போய்விட்டது குறிப்பிடத்தக்கது.

## மட்ரிட் ஓபனில் இருந்து செரீனா விலகல்

உலகின் நம்பர் 1 டென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், காய்ச்சல் காரணமாக மாட்ரிட் ஓபனில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக மட்ரிட் ஓபன் தொடரின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: துரதிருஷ்ர்டவசமாக காய்ச்சல் காரணமாக மட்ரிட் ஓபனில் இருந்து விலகுகிறேன். நான் 100 சதவீதம் உடல் தகுதியுடன் இல்லை. ஆனால் விரைவில் களம் காண்பதை எதிர்நோக்கி செயல்பட்டு வருகிறேன் என கூறியுள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து 4 தொடர்களில் மட்டுமே விளையாடியுள்ள செரீனா வில்லியம்ஸ், அதில் ஒன்றில் கூட சாம்பியன் பட்டத்தை வெல்லவில்லை. செப்டம்பரில் யுஎஸ் ஓபன் அரையிறுதியில் தோல்வியடைந்த செரீனா, அவுஸ்திரேலிய ஓபன் மற்றும் இந்தியன்வெல்ஸ் தொடர்களின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார்.

## ஐ.பி.எல். தொடரை வெளிநாட்டிற்கு மாற்றக்கூடாது அனில் கும்ப்ளே



மகாராஷ்டிரா மாநிலத்தில் கடும் வறட்சி நிலவி வருவதால், அம்மாநிலத்தின் மும்பை, புனே, நாக்பூர் உள்ளிட்ட மைதானங்களில், ஏப்ரல் 30ம் திகதிக்கு பிறகு நடைபெற உள்ள ஐபிஎல் போட்டிகளை வேறு இடத்துக்கு மாற்ற மும்பை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மே 1ம் தேதி புனேவில் நடைபெற உள்ள ஒரே ஒரு போட்டிக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக மும்பை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு தடை விதிக்க கோரி, மும்பை மற்றும் மகாராஷ்ரா கிரிக்கெட் சங்கங்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் உச்சநீதிமன்ற நீதிபதிகள் இந்த மனுக்களை தள்ளுபடி செய்தனர்.

இந்த பிரச்னைகள் காரணமாக, அடுத்த ஆண்டு ஐபிஎல் தொடரை இந்தியாவுக்கு வெளியே வேறு நாட்டில் நடத்த வாய்ப்பு இருப்பதாக பிசிசிஐ செயலர் அனுராக் தாக்கூர் கூறியிருந்தார். கடந்த வாரம் அளித்த பேட்டியின் போது அனுராக் தாக்கூர் இதை தெரிவித்திருந்தார். ஐபிஎல் தொடர் இதுவரை இரண்டு முறை வெளிநாடுகளில் நடந்துள்ளது. பாராளுமன்ற தேர்தல் காரணமாக 2009ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவிலும், 2014ம் ஆண்டின் முதல் 15 நாட்கள் யுனைடெட் அரபு எமிரேட்சிலும் நடந்துள்ளது. ஆனால் பிசிசிஐயின் இந்த முடிவுக்கு இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், ஐபிஎல் மூலம் நாட்டிற்கு நிறைய வருவாய் கிடைக்கிறது. இதை வெளிநாட்டில் நடத்த கூடாது என்றார். –





# நல்ல கொழுப்பை உணவில் சேர்ப்பது அவசியம்

தினமும் ஓரளவு நல்ல கொழுப்பை உணவில் சேர்ப்பது அவசியம். அவை உடல் நலத்திற்கு நல்லது செய்யும்.

அத்தகைய கொழுப்பு மீனிலுள்ள கொழுப்பு, கொட்டைகள், விதைகள். அவகாடோ பழம், ஒலிவ் ஓயில், சூரியகாந்தி எண்ணெய், கோர்ன் எண்ணெய் போன்ற பலவற்றிலும் உண்டு.

**அத்தகைய கொழுப்புகள் ஏன் அவசியம்?**

- அவற்றில் விற்றமின் E, செலினியம் உட்பட பல அன்ரி ஒட்சிடனட்ஸ் (antioxidants) உண்டு.
- எமது உணவில் உள்ள கொழுப்பில் கரையக் கூடிய விற்றமின்களை உணவுக் குழாய் உறிஞ்சுவதற்கு அவை உதவும்.
- இதய நோய், நீரிழிவு, புற்றுநோய், அழற்சி நோய்கள், புற்று நோய்கள், தசைப்பிடிப்பு நோய்கள் போன்ற பல்வேறு நாட்பட்ட நோய்கள் ஏற்படாமல் தடுக்க அவை உதவும்.
- உயர் இரத்த அழுத்தம், குருதியில் அதிகரித்த, கொலஸ்ரோல், மற்றும் அழற்சி நோய்களைக் கட்டுப்படுத்தவும் அவை உதவும்.
- மூளை வளர்ச்சி அதன் சிறப்பான செயற்பாடு போன்றவற்றிற்கு ஒமேகா 3 கொழும்பு அமிலம் (omega-3 fatty acids) போன்றவை உதவுகின்றன.




உடலுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் நல்ல கொழுப்பு அதிகரித்தால் உடல் நலம் கெடும் வாய்ப்புள்ளது.

- எனவே தினமும் ஓரளவு கொழுப்பு உணவில் சேரவேண்டும். அது நல்லவகை கொழுப்பாக இருப்பது விரும்பத்தக்கது.

எவருக்குமே தினசரி ஓரளவு கொழுப்பு உணவில் சேர்வது அவசியமாகும். ஒருவருக்கு நாளாந்தம் 2000 கலோரி சக்தி தேவை எனில் அவர் தினசரி 65 கிராம் அளவு கொழுப்பை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம். நல்ல கொழுப்பால்

டாக்டர் எம். கே. முருகானந்தன்

## நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு கேட்கும் திறன் பாதிக்குமா?

நீரிழிவுநோய் வந்தால், அது கேட்கும் திறனை பாதிக்கலாம் என்று ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது. குறிப்பாக 'டைப் 2' ரக நீரிழிவு உள்ள நோயாளிகளுக்கு வழக்கமான சோதனைகளுடன், காது கேட்கும் திறன் சோதனையையும் மருத்துவர்கள் பரிந்துரைக்க வேண்டும் என்கிறது, 'கரன்ட் டய பட்டீஸ் ரிபோர்ட்ஸ்' இதழில் வெளிவந்துள்ள அந்த ஆய்வு. "நீரிழிவு மற்றும் காது கேட்கும் திறன் குறைபாடு ஆகியவற்றுக்குள் உள்ள தொடர்பை ஆராயும் பல ஆய்வுகளை ஒப்பு நோக்கியதில், எல்லா ஆய்வுகளும் இந்த முடிவுக்கு வரவில்லை என்றாலும், பெரும் பாலானவை இரண்டுக்கும் தொடர்பு இருப்பதாகவே முடிவுக்கு வந்துள்ளன," என்கிறார் இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதியவர்களுள் ஒருவரான எலிசபெத் ஹெல்ஸ்னர். வயதான நீரிழிவு நோயாளிகளில், சிலர் மூப்பின் காரணமாகக்கூட கேட்கும் திறன் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இளம் நீரிழிவு நோயாளிகளை ஆராய்ந்தபோது அந்த நோய்க்கும், கேட்கும் திறன் பாதிப்புக்கும் தொடர்பு இருப்பதை உறுதி செய்ய முடிகிறது. இளவயதில் காது கேட்கும் திறன் குறைய ஆரம்பித்தால், அது அந்த நோயாளிகளின் சமூக வாழ்க்கையையும், வேலையையும் பாதிக்கும் வாய்ப்புகள் அதிகம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

# சிறுநீரக கற்கள், பித்தப்பைக் கற்களை கரைக்கும் சிறுசோளம்

இன்று நம் உடலில் சர்வசாதாரணமாக சிறுநீரகக் கற்களும், பித்தப்பைக் கற்களும் தோன்றி பல வகைகளில் எமது உடலுக்கு உபாதைகளை ஏற்படுத்தி வருகின்றன.

ஊடலின் எந்தப்பாகங்களில் கற்கள் ஏற்படுகின்றதோ அந்தப் பாகத்தின் பெயரால் பித்தநீர்ப்பை (Gall bladder) கற்கள், சிறுநீரகக்கற்கள், சிறுநீர்ப் பாதைக் கற்கள் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கற்கள் உடலிலுள்ள இடுப்பெலும்புகளுக்கு சிறுநீர்ப்பை, சிறுநீரகம், சிறுநீர்ப்பாதை போன்ற இடங்களில் அதிகம் சேர்கின்றது.

ஒரு சிறு அளவில் முதலில் உருவாகும். இந்தக் கற்கள் மேலும், மேலும் பெரிதாகி ஒரு கோலி குண்டு அளவிற்கு வரலாம். அரிதாக அதை விடவும் பெரிதாகலாம். சராசரியாக முப்பது பெண்களில் ஒருவருக்கு இந்தக் கற்கள் உருவாகிறது. கற்கள் உருவாகக் குறைந்தது பத்து வருடங்கள் ஆகும்.

80 சதவீதக் கற்கள் யூரிக் அமிலம், சிஸ்டைன் (அமினோ அமிலத்தில் உள்ள ஒரு வகை அமிலம்) போன்றவற்றால் உருவாகிறது. கல்சியம் ஆக்ஸ்லேட் என்பது பெரும்பாலான கற்களில் வேதிப் பொருள் இரண்டு சதவிகித கற்கள் கல்சியம் பாஸ்பேட்டால் ஆனவை சராசரியாக பத்து முதல் பதினைந்து சதவீதக்



ஆயுள்வேத வைத்தியர்
நாகேந்திரன் வாமதேவன்

கற்கள் மக்னீசியம் மற்றும் அமோனியா பாஸ்பேற்றால் ஆனவை.

அமிலங்களும் உப்புக்களும் அதிகரிப்பது மட்டுமல்லாது சிறுநீரகம் வெளியேறாததும் இக் கற்கள் உருவாக மிக முக்கிய காரணங்கள். இந்தக் கற்கள் வெறும் கற்களாக மட்டும் உடலில் இருந்து விட்டால் பரவாயில்லை,

இதனால் ஏற்படும் வலியை நினைத்தாலே பலருக்கு பயத்தில் உடல் ஆட்டங் கண்டு விடும்.

இந்தப் பிரச்சினைக்கு மண்பானையில் வைத்து தேவையான தண்ணீர் குடிப்பது, அனைத்து ஊட்டச் சத்துக்களையும் கொண்ட பழங்களை உண்பது மூலிகை இலைகள், சாறுகள், அத்திப்பழம் போன்றவையும் தான் முதல் கட்டத் தீர்வு. முழுமையான தீர்வு வேண்டுமென்றால் அது சிறு தானிய வகையைச் சேர்ந்த சிறு சோளம் எனப்படும் முத்துச் சோளத்தால் முடியும்.

முத்துச் சோளத்தில் செய்த உணவுகள் உடலில் உருவாகும் கற்களுக்கு மாமருந்தாகும். சோளம் என்றால் மக்காச் சோளமா? என்கிறார்கள் பலர். இது நாட்டுச் சோளம், இன்றைய நவநாகரித்தினர் சோளம் மாவு என்றவுடன் கடைகளில் கிடைக்கும் Corn flour தானே என்கின்றனர். இந்த நாட்டுச் சோளத்திற்கும் Corn flour க்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அது வேறு இது வேறு.


இந்தியாவில் பயிரிடப்படும் தானியங்களில் முக்கியத்தவம் பெற்றதும் அனைத்துத் தரப்பு மக்களாலும் பெருவாரியாகப் பயிரிடப்பட்டு உட்கொள்ளப்படும் தானியம் இந்த சிறு சோளன் தான். உமியில்லாத இந்த இளவரசி இரண்டு நிறங்களில் விளைகிறாள். வெள்ளையாக விளைவது முத்துச் சோளம் என்றும் சிவப்பாக விளைவது சிவப்புச் சோளம் என்றும் சொல்வர். நாட்டுரக சிறு சோளப் பயிர் 11 அடிவரை வளரக் கூடியது. காற்றால் சோளத் தடடைகளை வளைக்க முடியும் ஆனால் அதை ஒடிக்க முடி யாது. சோளத்தட்டையின் உள்ளே ஒரு விதமான மெல்லிய சதைப்பற்று இருக்கும். சோளத் தட்டைகளுக்கு உறுதியளிப்பதற்கு. பல வகையான சத்துக்களைக் கொண்ட இச் சோளத் தட்டையை மனிதர்களுக்கும் கால் நடைகளுக்கும் மிவும் பிடிக்கும். சோளம் முற்றாத போது பால் கொண்ட தானியமாக இருக்கும். அதைச் சாப்பிடுவது ஒரு தனி ருசி ஆனால், தொண்டையில் சிக்கிக் கொள்ளும் என்று பெரியவர்கள் இதனை சாப்பிட விடமாட்டார்கள். அதனையும் மீறி அதனை ருசித்து அவதிப்பட்டவர்கள் பலர்.

முப்பது நாற்பது வருடங்களுக்கு முன் கிராமங்களிலுள்ளவர்களின் விருப்ப உணவு சோளச் சோறு, சோளத் தோசை, சோளக் கஞ்சி மிகவும் எழிமையான சத்தான உணவு இந்த நாட்டுச் சோள உணவுகள்.

அனைத்து மண் வகைகளிலும் நீர் வகைகளிலும் எந்த இரசாயன உரங்களும் களைகொல்லிகளும் பூச்சிக்கொல்லிகளும் இன்றி நன்கு வளரக் கூடியது.

புரதம், கொழுப்பு, மாச்சத்து, இரும்புச்சத்து, கல்சியம், தயமின், நயாசின், தாதுஉப்புக்கள் என்று சத்துக்கள் கொட்டிக் கிடக்கும். இந்தச் சிறு சோளம் உடலிலுள்ள நீரினைப் பெருக்கும் சக்தியைக் கொண்டுள்ளது. இவ்வாறு நீரினைப் பெருக்கி உடலிலுள்ள கற்களைக் கரைத்து விடும்.




## வாரமொரு குறள்

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

**பொருள் :**

அனைத்து உயிர்களிடத்திலும் அன்புகொண்டு அருள் பொழியும் சான்றோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவார்.



இரவுகளில் “மினுக்” “மினுக்” கென்று வெளிச்சம் உமிழ்ந்தபடி பறக்கின்ற மின்மினிப் பூச்சிகளைப் பார்த்திருப்பீர்கள். மின்மினிப் பூச்சிகளைப் போலவே, ஒளிரும் தன்மை கொண்ட தாவர இனங்களும் உண்டு.

“ஃபாக்ஸ்ஃபையர்” (Foxfire) என்ற பூஞ்சைத் தாவர இனம் இரவு நேரத்தில் ஒளிரும் தன்மை உடையது. மட்கிக்கொண்டிருக்கும் மரங்களில் வளரும் இந்தப் பூஞ்சைகள், எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், இனப்பெருக்கத்துக்காகப் பூச்சிகளைத் தங்கள் பக்கம் கவர்ந்து இழுக்கவும் ஒளியை உமிழ்கின்றன. இந்த ஒளி நீலமும், பச்சையும் கலந்த நிறத்தில் இருக்கும். இந்தப் பூஞ்சைகளை “ஃபேரி ஃபையர்” (Fairy Fire) என்றும் அழைக்கப்படுகிறது.

பூஞ்சைகளின் உடலில் இருக்கும் வெவ்வேறு வேதியியல் மூலக்கூறுகள் ஒன்று சேர்வதே ஒளி ஏற்படக் காரணம். இவற்றிலிருந்து வரும் ஒளிக்கு வெப்பம் தேவைப்படுவதில்லை. அதேபோல் அவை வெப்பத்தை வெளிவிடுவதும் இல்லை. இதனால், இந்த ஒளியை அறிவியல் வல்லுனர்கள் குளிர்ந்த ஒளி (Cold Light-கோல்ட் லைட்) என்று அழைக்கின்றனர். இந்தப் பூஞ்சைகள் தரும் வெளிச்சத்தில் படிக்கக்கூட முடியுமாம்!

## கெட்டிக்காரன் புளுகு!





ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் ஒன்று உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்தபடியால் சேவல் கூவியது! உற்சாகம் மேலிட பலதடவை கூவியது!சேவலின் குரலைக் கேட்ட ஒரு நரி அங்கே வந்தது. நரிக்கு நல்ல பசி! கூவிக்கொண்டிருந்த சேவலைப் பிடித்துச் சாப்பிட ஆசைப்பட்டது. ஆனால் சேவல் மரத்தின் உச்சியில் இருந்ததால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக நரி ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப் பார்த்து, “சகோதரரே! வணக்கம்! ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப்பட்டாயா? பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது!...இனி ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது....அன்பாக நடந்து கொள்ள வேண்டும்...சகோதர மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன்! இந்த நல்ல செய்தியைப் பற்றிப் பேசுவோம்.” என்றது.

நரியின் தந்திரப் பேச்சை சேவல் புரிந்துகொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப்போல தலையைத் தூக்கிப் பார்த்தது.இதனைக் கண்ட நரி, “என்ன சகோதரா! ரொம்ப அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே! அங்கே என்ன இருக்கிறது?” என்று கேட்டது.அதற்கு சேவல், “சற்று தூரத்தில் வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள்தானா என்பதைக் கவனிக்கிறேன்.” என்றது!


அவ்வளவுதான்! நரிக்கு உடல் நடுங்கியது. சரி...,சரி...! நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன்” என்று கூறி கிளம்பியது.சேவல், நரியிடம், “அருமை சகோதரா! போகாதே. நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? ...இப்போதுதானே நீ சொன்னாய்! எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது....என்று!” என்றது. அதற்கு நரி “அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேகம் பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால்....?... என் கதி என்ன ஆவது?...நான் போகிறேன்” என்று சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிக் காட்டுக்குள் மறைந்து விட்டது.சேவல், “யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? உன்னுடைய கெட்டிக்காரப் பொய்கள் என்னிடம் பலிக்காது” என்று கூறிச் சிரித்தது.

## சீனாவில் தமிழ்க் கல்வெட்டு!

“சீன நாட்டு சக்கரவர்த்தியான குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது” என்பதைக் குறிக்கும் தமிழ்க் கல்வெட்டு ஒன்று சீன நாட்டில் உள்ள சிவன் கோயிலில் உள்ளது. இக்கல்வெட்டின் கடைசி வரிகள் சீன எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

“சீன நாட்டில் “காண்டன்” எனும் நகருக்கு 500 கல் தொலைவில் வடக்கே உள்ள “சூவன்லிசௌ” என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைக் காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கியிருக்கிறது. அக்காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர். தமிழ் நாட்டிலிருந்து புறப்படும் வணிகக் கப்பல்கள் தாய்லாந்து சென்று, அதன் மேற்குக் கரையோரமாக உள்ள சீன துறைமுகங்களிலும் தங்கி, பிறகு வியட்நாம் சென்று அங்கிருந்து சீன நாட்டை அடைந்துள்ளதாகத் தெரிகிறது.“சீனாவில் தமிழர்கள் காண்டன் நகரில் மட்டுமன்றி வேறு சில இடங்களிலும் வணிகக் குடியேற்றங்களை அமைத்துள்ளனர். பிற்காலச் சோழர் காலத்தில் புகழ்பெற்ற வணிகக் குழுவினர் சீன நாட்டின் பல்வேறு பகுதியிலும் வணிகம் செய்துள்ளனர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

“சூவன்லிசௌ துறைமுக நகரில் சிவாலயம் ஒன்று உள்ளது. இந்த ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள சில சிலைகள் (விக்கிரகங்கள்) குப்லாய்கான் ஆணையால் அமைக்கப்பட்டதாகும். இவருக்கு “சேகாசைகான்” என்ற பெயரும் உண்டு.



இச்சிவன் கோயில் திருக்கதாலீசுவரம் என வழங்கப்படுகிறது. இங்குள்ள இறைவன் “திருக்கதாலீசுவரன் உதயநாயனார்” என அழைக்கப்படுகிறார். “சீனச் சக்கரவர்த்தியின் இந்த ஆணையை நிறைவேற்றியவரின் பெயர் தவச்சக்கரவர்த்திகள் சம்பந்தப் பெருமாள். சுக யுகம் சித்திராப் பௌர்ணமி அன்று இக்கோயில் நிறுவப்பட்டுள்ளது. கி.பி.1260-ஆம் ஆண்டு குப்லாய்கான் முடிசூடினான். இவன் உலகையே நடுங்க வைத்த மங்கோலியச் சக்கரவர்த்தியான செங்கிஸ்கானின் பெயரனாவான். மங்கோலியச் சக்கரவர்த்தியின் ஆளுகையில் சீனாவும் இருந்துள்ளது. அப்போதிருந்த பாண்டிய அரச குலமும் குப்லாய்கானும் மிகுந்த நட்புறவுடன் இருந்துள்ளனர். அப்போதிருந்த பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் ஆவான்.

“ இக்கோயிலில் சோழர்காலச் சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுக்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட கிடைத்தற்கரிய தமிழ்க் கல்வெட்டு இது.

## சிட்டுக் குருவி



சின்னச் சிட்டுக் குருவியே!

சிங்காரக் குருவியே!

சிறகடித்துப் பறந்து வா!

சிறுவரோடு ஆட வா!

வண்ண வண்ணச் சோலையில்

வகை வகையாய் மலர்களாம்!

கொண்டு வந்து கொட்டிடு!

கொறிக்க நெல்லைத் தருகிறோம்!

குதித்துக் குதித்துப் பறக்கிறாய்!

கொத்தி நெல்லைத் தின்கிறாய்!

சுத்தமாக இருக்கிறாய்!


நித்தம் ஆட வந்து செல்!

## கடமைக்குப் பரிசு!


மேதை சர் சி.பி.இராமசாமி ஐயர் ஒருநாள் அமைச்சரவைக் கூட்டத்திற்கு தன் காரில் விரைந்து கொண்டிருந்தார். ஆங்கிலப் பொலீஸ் அதிகாரி ஒருவர் அவர் காரை மறித்து, “இங்கு இராணுவப் பயிற்சி நடைபெறுகிறது. நீங்கள் இவ்வழியாகச் செல்ல அனுமதியில்லை வேறு வழி செல்லுங்கள்” என்றார்.

‘நான் யார் தெரியுமா?’ என்றார் சர் சி.பி. ‘நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் என் மேலதிகாரி உத்தரவை நான் மீற முடியாது’ என்றார் அதிகாரி. வேறு வழியின்றி தன் காரை வேறு வழியாக ஓட்டிக்கொண்டு போகச் சொன்னார். தன் அலுவலகம் போய்ச் சேர்ந்ததும் முதல் வேலையாகத் தலைமைப் பொலீஸ் அதிகாரியை வரவழைத்தார்.

அவரிடம் தன் வழியை மறித்த அந்த காவலரின் கடமை உணர்ச்சியைத் தெரிவித்து அவருக்குப் பரிசளிக்கக் கட்டளையிட்டார்.



# காட்டிக்கொடுக்கப்பட்ட ஒஸாமா பின்லேடன்



பாகிஸ்தானில் அமெரிக்க அதிரப்படை வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட அல்–கைதா தலைவர் பின்லேடன், அந்த பாகிஸ்தானில் நாட்டு ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பின் கட்டுப்பாட்டில் ,ருந்ததாக அண்மையில் வெளியான புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலனாய்வுச் செய்தியாளரான ஸீமோர் ஹெர்ஷ் எழுதிய கில்லிங் ஆஃப் ஒசாமா பின்லேடன் என்ற புத்தகம் அண்மையில் வெளியானது. அதில், பாகிஸ்தான் ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிரிகளை மேற்கோள் காட்டி ஸீமோர் ஹெர்ஷ் எழுதியுள்ளதாவது:

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகே, அப்போட்டாபாதில் பின்லேடனைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது, அந்த நாட்டு இராணுவத்தின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ. அமைப்புதான்.

ஆப்கான் பழங்குடியினருக்கு கையூட்டு அளித்து பின்லேடனின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்ட ஐ.எஸ்.ஐ., அவரை ரகசியமாக தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்தது. பின்லேடனின் நடவடிக்கைகளை எளிதில் கண்காணிப்பதற்காகவே, இராணுவப் பயிற்சி மையம், ஐ.எஸ்.ஐ. பயிற்சி முகாம் ஆகியவற்றுக்கு மிக அருகே அமைந்த அப்போட்டாபாத் கட்டடத்தில் ஐ.எஸ்.ஐ. தங்க வைத்தது.

பின்லேடனை ஐ.எஸ்.ஐ. தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோது, அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு சிகிச்சை அளிப்பதற்காகவே, இராணுவ மருத்துவரான அமீர் அஜீஸை பின்லேடன் குடியிருப்புக்கு அருகே ஐ.எஸ்.ஐ. அமைப்பு தங்க வைத்தது. அமீர் அஜீஸ் அளித்த பின்லேடனின் மரபணு மாதிரியை வைத்துதான், அந்தக் கட்டடத்தில் பின்லேடன் தங்கியிருப்பதை அமெரிக்கா உறுதி செய்தது. பின்லேடன் குறித்த தகவல் அளிப்பவர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்த சுமார் இலங்கை பெறுமதி ரூ.450 கோடி பரிசுத்தொகையை அமீர் அஜீஸுக்குதான் அமெரிக்கா வழங்கியது.

ஆப்கானிஸ்தானில் இந்தியாவுக்கு அதிகரித்து வரும் செல்வாக்கைக் கட்டுப்படுத்த, தலிபான்களின் தயவு தேவை என்று ஐ.எஸ்.ஐ. கருதியது. மேலும், காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுக்கு எதிரான மதப் போராளிகளைத் திரட்டுவதற்கு தலிபான்கள் பக்கபலமாக இருப்பார்கள் எனவும் ஐ.எஸ்.ஐ. எண்ணியது.

இந்த எண்ணங்களை ஈடேற்ற, பின்லேடனைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த ஐ.எஸ்.ஐ. முடிவு செய்தது. இந்தியாவின் இராணுவ வலிமையை எதிர்கொள்ள அமெரிக்காவின் தயவும் தேவை என்பதை நன்குணர்ந்திருந்த ஐ.எஸ்.ஐ., பின்லேடன் தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதை அமெரிக்காவிடமிருந்து கவனமாக மறைத்தது.

இருந்தாலும், பின்லேடனின் தலைக்கு அறிவிக்கப்பட்டிருந்த 2.5 கோடி டாலர் பரிசுத்தொகைக்கு ஆசைப்பட்டு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் பின்லேடன் குறித்த ரகசியத்தை அமெரிக்காவிடம் வெளிப்படுத்தினார். அதையடுத்து அமெரிக்கா நீண்ட காலம் மேற்கொண்ட உளவுப் பணிகளின் முடிவில், அதிரடிப் படையினரால் பின்லேடன் 2011–ஆம் ஆண்டு கொல்லப்பட்டார்.

பின்லேடனைக் கொல்ல அமெரிக்கா மேற்கொண்ட முடிவு, பாகிஸ்தான் இராணுவத்துக்கும் முன்கூட்டியே தெரியும் என்று பலர் கருதுகின்றனர். அதனால்தான், பாகிஸ்தான் போர் விமா னங்களைப் பற்றி கவலைப்படாமல், அதிரடிப் படை வீரர்கள் ஹெலிகாப்டர்களுக்கு தாக்குதல் விமானங்களின் பாதுகாப்பு இல்லாமல், பாகிஸ்தான் வான் எல்லைக்குள் எளிதில் நுழைந்து பின்லேடன் தங்கியிருந்த இல்லத்தில் அமெரிக்க வீரர்கள் தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டனர். அந்த வகையில், பின்லேடன் கொல்லப்பட்டதை திட்டமிடப்பட்ட படுகொலை என்றே சொல்லலாம். இவ் வாறு அந்தப் புத்தகத்தில் ஸீமோர் ஹெர்ஷ் குறிப்பிட்டுள்ளார்.

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 1984 ஆம் ஆண்டு...

ரூபா 2 லட்சத்து 38 ஆயிரம் களவாடப்பட்டது. அதே தினம் யாழ்ப்பாண தபால்நிலையம் கொள்ளையடிக்கப்பட்டு ரூபா பதினான்கு லட்சம் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றனர். அதையடுத்து மூன்று மாதங்கள் சென்றபின் 2 கூட்டுறவு சங்கங்களை கொள்ளையடித்து இரண்டு லட்சத்து முப்பதாயிரம் களவாடப்பட்டது. 1984 ஜனவரி மாதத்தில் மட்டக்களப்பு காத்தான்குடியிலுள்ள மக்கள் வங்கியைக் கொள்ளையடித்து ரூபா 36 மில்லியன் பெறுமதியான தங்க ஆபரணங்களும் ரூபா இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் பணமும் கொள்ளையடிக்கப்பட்டது.

அந்த வங்கியை திறந்த போது ஆறு இளம் போராளிகள் உள்ளே நுழைந்தார்கள். அங்கே இருந்த முஸ்லிம் வங்கி முகாமையாளரையும் கைது செய்தனர். மற்ற ஊழியர்களையும் ஒரு அறையில் விட்டுப் பூட்டினார்கள். அதையடுத்து நகை பணம் என்பவற்றைச் சுருட்டிச் சென்றார்கள். இரத்தம் சிந்தாமல் நீர்வேலியில் ரூபா 81 லட்சமும், கிளிநொச்சியில் ரூபா 79 லட்சமும் கொள்ளையடிக்கப்பட்டது. இந்த வங்கிக் கொள்ளையர்கள். மூலம் 1984ம் ஆண்டு மொத்தமாக ரூபா 55 மில்லியன் கொள்ளை போனதாக பொலிஸார் கணக்கு அறிவித்தார்கள். அடுத்து பாதுகாப்பு படைமினர் பிரமாண்ட தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது ரின்களில் போட்டு பொலித்தீன்களில் சுற்றி நிலத்திற்குள் புதைத்து வைத்த ஒரு பகுதி தங்க ஆபரணங்களை மீண்டும் பெற்றுக் கொண்டனர்.

தமிழீழ இராணுவத்தினர் தான் இதற்கு பொறுப்பு என்று பாதுகாப்பு படைமினர் குற்றம் சுமத்தினர். அதனையடுத்து 3 நாட்களின் பின் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆறு இளைஞர்களைக் கைது செய்து கொலை செய்தனர். இவர்கள் ஒவ்வொரு வரையும் தனித் தனி லைற் கம்பங்களில் கட்டி வைத்து நெற்றியில் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தார்கள். அவர்களுக்கப் பக்கத்தில் "நீ ஒரு துரோகி இந்த தண்டனை தான் உனக்கு வழங்கப்படுகிறது," என்று எழுதி வைத்தார்கள். கிளிநொச்சியில் 3 இளைஞர்கள் துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தனர். அவர்கள் மூவரும் சமூக விரோதிகள் என்று எழுதிய பதாதைகள் காணப்பட்டன. அந்த விளம்பரத்தின் கீழ் "சங்கிலியன் பஞ்சாயத்து," என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த போராளிக் குழுக்கள் தங்களுக்குள் தாங்களே போராடி தங்களுக்குள் இருக்கும் விரோதிகளை அழிக்கிறார்களா? என காவற்துறையினர் குழம்பிப் போயிருந்தனர். ஆனால் "மிகவும் பயங்கரமான சமூக விரோதிகள், குற்றவாளிகள், அரசின் உளவாளிகள் தான் இந்த துரோகிகள். இவர்கள் எங்களுடைய மக்களின் போராட்டத்திற்கு எதிராக இருந்ததால் தான் தண்டனை வழங்கப்பட்டது," என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்தார்கள்.

பல குற்றவாளிகள் இவ்வாறு பொது இடங்களில் வைத்து கொலை செய்யப்பட்டார்கள். சிலரை தமிழீழ விடுதலைப்புலிகள் கடுமையான எச்சரிக்கையுடன் விடுவித்தார்கள்.

# அதிர்ஷ்டம்


கமலுக்கு பதற்றமாக இருந்தது. என்ன செய்வது என்றே புரியவில்லை சந்தோஷம் கூட சக்தியை மீறி அதிகமாகவே ஆட்டிப்படைத்தது. லொத்தர் டிக்கட்டில் இரண்டு கோடி விழுந்ததே இவன் இப்படியாவதற்குக் காரணம்.

மிகவும் வறிய குடும்பத்திலே பிறந்து கஷ்டங்களை அணுஅணுவாய் அனுபவித்த கமல் ஆயிரம் ரூபாய் நோட்டுகளை அடுக்காய் கையால் பிடித்துப் பார்த்தது இல்லை. மாதத்திற்கு ஒரு முறையேனும் ஒழுங்கான சாப்பாடு சாப்பிட்டதில்லை. கமலின் வீட்டில் கமலும் அவனின் கண் தெரியாத அம்மாவும் தான். சிறுவயதில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட கமலுக்கு ஒழுங்காக நடக்கவோ எந்த வேலையையும் நேர்த்தியாக செய்யவோ முடியாது. தனது பெயரை எழுதும் அளவுக்குதான் அவனுக்கு படிப்பறிவுகூட இருந்தது. தன்னால் முடிந்த கூலி வேலைகளை செய்து தன் தாய் பூரணத்தையும் பார்த்துக்கொண்டான். தான் உழைத்த கூலிப் பணத்தில் என்றும் இல்லாமல் அன்று லொத்தர் டிக்கட் ஒன்றையும் வாங்கினான். இதைக் கண்ட அவ்வூர் பெரியவர் ஒருவர்,

"என்னடா கமல் டிக்கட் எல்லாம் எடுக்குற?" என்று சிரித்தார்.

"இல்ல ஐயா சும்மாதான் எடுத்தன்" என்று தலையை சொறிந்தான் கமல்.

ஆனாலும் கமலின் மனதில் தான் பணக்காரன் ஆனதாகவே எண்ணம் சிறகடித்தது. வீட்டுக்கு வந்த கமல், தான் கூலி வேலை செய்த பெரியசாமி ஐயா வீட்டிலிருந்து கொண்டுவந்த சோற்றுப் பார்சலை அவிழ்த்து தன் தாய்க்கு உணவு பரிமாறினான். காலையில் இருந்து கஷ்டப்பட்டதால் கொஞ்சம் கண்ணயர்ந்தான்.இன்று கமல் சாதாரணமானவன் அல்ல. இரண்டு கோடிக்கு சொந்தக்காரன். இதை ஊரே சொல்கிறது. தன் காசு மூலம் கமல் அம்மாவின் கண்களையும் சுகமாக்கிவிட்டான். தனக்கிருந்த இளம்பிள்ளை வாத கோளாறுகளையும் சரி செய்துகொண்டான். தன் ஊரைவிட்டு வேறொரு ஊரில் குடிபுகுந்தான். வசதியான வீடு. கமலுக்கு இந்த வாழ்க்கை, ஏதோ சொர்க்கத்தில் இருப்பதைப்போன்றே இருந்தது. புதிய ஆடைகளும் புதிய ஆபரணங்களுமாக தன் தாய் பூரணத்தையும் அழகுபடுத்திப் பார்த்தான். பூரணத்தை சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனும் எண்ணத்தைத் தவிர, வேறு எந்த மகிழ்ச்சியும் அவனுக்கு இருக்கவில்லை. தான் ஏழையாக இருக்கும்போது எப்படியெல்லாம் ஏக்கங்கள் தனக்கு இருந்ததோ அதே நிலையில் இருக்கும் ஏழைகளுக்கெல்லாம் உதவிகளையும் செய்யத் தொடங்கினான். அத்தோடு சிறிய அளவிலான கடை ஒன்றை நகரத்தில் வாங்கி தனது அம்மாவின் பெயரில் ஹோட்டல் ஒன்றை நடத்தினான். நாட்கள் நகர பூரணத்திற்கு, தன் மகனின் கல்யாணத்தை செய்து பார்க்கவேண்டும் எனும் ஆசை ஏற்பட்டது. கமலிடம் தனது வேண்டுகோளை விடுத்தாள். கமலும் அதற்கிணங்கி அந்த ஊரில் உள்ள சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சித்ராவை திருமணம் செய்தான்.அன்று திங்கட்கிழமை. கமல் தன் ஹோட்டலுக்கு சென்றுவிட்டான். எப்போதும் சித்ராவும் கமலுக்கு ஒத்தாசைக்கு செல்வதுண்டு. ஆனால் அன்று தனக்கு தலை வலி என்பதால் வரமுடியாது என்று கூறி சித்ரா போக மறுத்துவிட்டாள்.



கமல் சென்றவுடன் அவசர அவசரமாக தனது மாமியான பூரணத்திடம் வைத்தியசாலைக்கு செல்வதற்கு தயாராகுமாறு சொன்னாள் சித்ரா.

"ஏன்டியம்மா.. நான் நல்லாதானே இருக்கன். காடு வா வாங்குது. இந்த வயசுல எதுக்குமா?" என்று அன்பு பிசைந்த மொழியிலேயே பூரணம் கேட்டாள்.

"இல்ல மாமி.. உங்க கண்ண டொக்டர் கிட்ட காமிக்கனும்" என்றாள் சித்ரா. மருமகளின் பாசத்திற்கு கட்டுப்பட்ட பூரணமும் தயாரானாள். முச்சக்கர வண்டி வந்து கமலின் வீட்டு முன்னே நின்றது. சித்ராவும் பூரணமும் அதில் ஏறினார்கள். சித்ரா ஏதோ சிங்களத்தில் சொன்னாள். கொஞ்ச நேரத்தில் அவள் சொன்ன இடத்தில் முச்சக்கரவண்டி நின்றது.

"மாமி இறங்குங்க" என்று கூறிய சித்ரா, முச்சக்கரவண்டி சாரதியை பார்த்து,

"எவ்வளவு?" என்றாள்.

"முந்நூறு ரூபா" என்றான் சாரதி.

தனக்காக தன் மருமகள் எவ்வளவு கஷ்டப்படுகின்றாள் என்றெண்ணி தன் மனதுக்குள்ளே பெருமிதம் கொண்டாள் கமலின் தாய். அந்த எண்ணம் மாறும் முன்னே என்ன அதிர்ச்சி! தன் மருமகள் தன்னை வைத்தியசாலைக்கு அழைத்து வரவில்லை. அது ஒரு வயோதிபர் இல்லம் என்பதை உணர்ந்தாள் பூரணம். தன்னால் தன் மருமகளுக்கு சிரமம் என்று தன்னை சமாதானப்படுத்திக்கொண்டாள். சித்ரா தன் மாமியிடம் எதுவுமே பேசாமல் அவ்விடத்தில் இருந்து விடைபெற்றாள். மாலை 6.00 மணியளவில் வீட்டுக்கு வந்த கமல் சித்ரா கொடுத்த தேநீரை குடித்துக்கொண்டே

"சித்ரா அம்மா எங்க?" என்றான்.

தடுமாறிய குரலில் தன்னை திடப்படுத்திய வண்ணம் அவங்கள என்று இழுத்தாள்.

***வி. சந்திராதேவி - நமுனுகுல***

அவங்கள என்று அதிர்ச்சியுடன் கமல் கேட்டான்.

சித்ரா நடந்தவற்றைச் சொன்னதும் கமல் அம்மா என்று கத்தினான்.

தட்டுத் தடுமாறிய பூரணம் என்னடா ஏன் இப்படி கத்துர? என்றாள்.

திடுக்கிட்டு விழித்த கமலுக்கு தன் தாயைக் கண்ட சந்தோஷத்தில் கண்ணீரே வந்தது. பிறகுதான் இவ்வளவு நேரம் கண்டதெல்லாம் கனவு என்பதை கமல் உணர்ந்தான். தான் படுத்திருந்த பாய்க்கு கீழே வைத்த லொத்தர் டிக்கட்டை எடுத்து உடனே கிழித்து வீசினான்.

கிறுக்கு பய! கண்ட நேரத்துல ரோட்டுல வந்ததால ஏதோ காத்து கறுப்பு புடிச்சிருச்சிப் போல என்று தனக்குள்ளே முணுமுணுத்தாள் பூரணம்!!!

# 234 தொகுதிகளில் 3,794 வேட்பாளர்கள்

# ஜெக்கு எதிராக 45 பேர் போட்டி

தமிழக சட்டசபைத் தேர்தலில் தாக்கல் செய்த வேட்பு மனுக்களை வாபஸ் பெற அவகாசம் முடிந்த நிலையில் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. 234 தொகுதிகளில் 3,794 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.அதிகபட்சமாக முதல்வர் ஜெயலலிதா போட்டியிடும் ஆர்.கே.நகரில்தான் 45 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதற்கு அடுத்தபடியாக, கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் 36 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர்.ஆர்க்காடு, வானூர், கூடலூர், வால்பாறை உள்ளிட்ட 9 தொகுதிகளில் ஒற்றை இலக்கத்தில் வேட்பாளர்கள் களம் காண உள்ளனர். திமுக தலைவர் கருணாநிதி போட்டியிடும் திருவாரூர் தொகுதியில் 15 பேர் களத்தில் உள்ளனர். திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர் தொகுதியில் 24 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். விஜயகாந்த் போட்டியிடும் உளுந்தூர்பேட்டை தொகுதியில் 25 பேர் களத்தில் உள்ளனர். சென்னையைப் பொறுத்தவரை மொத்தம் 378 பேர் இறுதியாக களத்தில் உள்ளனர்.பாஜக தலைவர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் போட்டியிடும் வேளச்சேரி, முன்னாள் டிஜிபி நடராஜ் போட்டியிடும் மயிலாப்பூரில் தலா 25 பேர் களத்தில் உள்ளனர். பெரம்பூர் தொகுதியில் 33 பேர் போட்டியில் உளளனர். வில்லிவாக்கம், ராயபுரம் தொகுதியில் தலா 17 பேர் இறுதியாக களத்தில் நிற்கின்றனர்.மே 16ம் திகதி தமிழகசட்டசபைக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் ஏப்ரல் 22ம் தேதி தொடங்கியது. 29ம் தேதி முடிவடைந்தது. இதில் 7,156 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். இவர்களில் ஆண்களே அதிகம், அதாவது 6358 பேர். பெண்கள் 794 பேர். மூன்றாம் பாலினத்தவர் 4 பேர்.

வேட்பு மனு பரிசீலனையின்போது 2956 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 4 தொகுதிகளில் பாமக வேட்பாளர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்ட சம்பவமும் நடந்தேறியது. இந்நிலையில் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியானது. தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளிலும் தேர்தல் களம் காணும் 3 ஆயிரத்து 794 வேட்பாளர்களில், 3 ஆயிரத்து 472 பேர் ஆண்கள். 320 பேர் பெண்கள். மூன்றாம் பாலினத்தவர் 2 பேர்.கடைசி நாளில் மொத்தம், 337 பேர் மனுக்களை வாபஸ் பெற்றனர்.சட்டசபைத் தேர்தலில் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 684 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், 72 ஆயிரத்து 601 கட்டுப்பாட்டு இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகிறது. இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளதைத் தொடர்ந்து சுயேச்சைகளுக்கு சின்னம் ஒதுக்கப்படும். சுயேட்சை வேட்பாளர்களுக்கு அவர்களது விருப்பம் மற்றும் கோரிக்கைக்கு ஏற்ப சின்னம் ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படும்.

ஒரே சின்னத்தை இரு சுயேட்சை வேட்பாளர்கள் கேட்டால், அந்த சின்னம் குலுக்கல் முறை மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.வேட்பாளர் பட்டியலில் அகர வரிசைப்படி வேட்பாளர்களின் பெயர் இடம் பெறும். அந்த பட்டியலில் முதலில் தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் பெயர் அகர வரிசைப்படி இடம் பெற்றிருக்கும். அவர்களைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் வேட்பாளர்கள் பெயர் இடம்பெறும். அதன்பிறகு இறுதியில் சுயேட்சை வேட்பாளர்களின் பெயர்கள் அகர வரிசைப்படி இடம்பெறும்.வேட்பாளர் பட்டியல் அவர்களுக்குரிய சின்னம் விபரத்துடன் 234 தொகுதிகளில் உள்ள தேர்தல் அதிகாரிகளின் அலு வலகங்களின் வெளியில் பொதுமக்கள் பார்வைக்காக ஒட்டப்படும்.


அந்த பட்டியலில் வேட்பாளர்களின் பெயர், சின்னத்துடன் அவர்களது புகைப்படமும் இடம்பெற்றிருக்கும்.இதைத் தொடர்ந்து ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப மின்னனு இயந்திரங்கள் பிரிக்கப்படும். அந்த இயந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம், போட்டோவுடன் கூடியவாக்குச் சீட்டு ஒட்டப்படும்.




ஜெ. யோகராஜ்

# கணினியை இயக்குவது எப்படி?

ஒரு கணினி தொகுதியின் மத்திய செயல்பாட்டு பிரிவே மிக முக்கிய பிரிவாகும். இந்த செயற்பாட்டு பிரிவில் பல பொத்தான்கள் உள்ளன. கணினியை ஆரம்பத்தில் இயக்குவதற்கு ஒரு விசேட பொத்தான் அந்த பிரிவில் உள்ளது. மின்சார வசதியை ஏற்படுத்தி, இந்த பொத்தானை அழுத்தும் பொழுது கணினியின் மத்தியசெயல்பாட்டு பிரிவு, திரை, விசைப்பலகை, சுட்டி மற்றும், தரகருவிகளும் தொழில்பட ஆரம்பிக்கின்றன. ஆரம்பத்தில் திரையில் காணும் தகவல்கள் மூலம் இந்தக் கணினி சரிவர இயங்க ஆரம்பிக்கின்றதா என்பது குறித்து அறிந்து கொள்ளலாம்.





அதனை அடுத்து கணினி சுமுகமாக இயங்குகின்ற ஒரு சூழலை நாம் பல்வேறு வழிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மத்திய செயற்பாட்டுக் கருவியின் விளக்கு சமிக்ஞைகள் பச்சை நிறத்தை கூடுதலாக காண்பிக்கும் பட்சத்தில் மத்திய செயற்பாட்டு பிரிவு எதுவித பாதிப்பும் ,ன்றி இயங்குகிறதென்று நாம் கருதிகொள்ளலாம். அதேவேளை, விசைப்பலகையின் ஒவ்வொரு பொத்தானையும் அழுத்தும் பொழுது அந்த பொத்தானுக்கான எழுத்து அல்லது குறியீடு திரையில் காண்பிக்கப்படும் பட்சத்தில் விசைப்பலகை ஒழுங்காக ,யங்குகிறதென்று நாம் கருதலாம். சுட்டியை அங்குமிங்கும் அசைக்கும் பொழுது அது அசைக்கப்படுகின்ற திசைக்கு சமாந்திரமாக திரையிலே சுட்டி அசையுமாக இருந்தால் அது ஒழுங்காக இயங்குகிறதென கருதலாம். அதேவேளை, சுட்டியின் மேல் பகுதியில் உள்ள இரண்டு பொத்தான்களின் செயற்பாடுகளை பரீட்சித்து பார்ப்பதன் மூலமும் அதன் சீரான இயக்கத்தை நாங்கள் அறிந்துகொள்ளலாம். மத்திய செயற்பாட்டு பிரிவில் உள்ள ,றுவட்டு இயக்கியை இயங்கவைத்து அது ஒழுங்காக இயங்குகிறதா என்பது குறித்து அறிந்து கொள்ளலாம். இவ்வாறு கணினி தொகுதியின் ஒவ்வொரு உபகரணத்தின் செயற்பாடுகளையும் நாங்கள் கிரமமான முறையில் அறிந்து கொள்ளலாம்.


அதன் பின்னர் இந்த கணினியின் இயங்குதளம் பற்றி நாம் சில விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாக மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் தயாரிப்புக்களையே கணினி பாவனையாளர்கள் பெரிதும் பயன்படுத்துகின்றனர். Windows XP, Windows Server, Windows 7 என்று பல இயங்கு தளங்கள் உள்ளன. ஆனால், Windows XP மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது. இந்த இயங்குதளம் பாவனையாளர்களுக்கு ஒரு நட்புறவு ரீதியான இலகு தகவல்களை கொண்ட ஒரு இயங்குதளமாக அமைந்துள்ளது. இந்த இயங்குதளம் பதிவுசெய்யப்பட்ட ஒரு கணினியின் ஆரம்பப் பகுதி இவ்வாறு அமைந்திருக்கும்.




இந்த திரையில் இடதுபக்க மூலையில் Windows XP Professional என்று எழுதப்பட்டிருப்பதை அவதானிக் கவும். இந்த அடையாளத்தின் மூலம் இந்தக் கணினி Windows XP Profes sional இயங்குதளத்தை கொண்டுள்ளது என்பதை உறுதிசெய்து கொள்ளலாம். இந்தக் கணினியின் வன்பொருள் தகவல் சேமிப்புகலமான வன்தட்டு கொள்ளவையும் அதன் ஏனைய பிரிவுகளையும் அறிந்துகொள்ள Windows explorer என்னும் திரையை இயக்க வேண்டும். அதற்கான வழிமுறை, கீழே தரப்பட்டுள்ளது.



இந்தத் திரையில் இந்தக் கணினியின் தகவல் சேமிப்புவன் தட்டுக்கள் பல இருப்பதை எம்மால் காணலாம். இவை முறையே C:\, D:\, E:\, என்று விரிந்து செல்கிறது. இந்தக் கணினியின் வேகத்தையும் ஏனைய வினைத்திறன் தொடர்பான தகவல்களையும் கீழ் தரப்பட்டுள்ள திரை மூலம் பெற்றுக்கொள்ளலாம்.






(தொடரும்...)



## கண் இமைத்தால்
## வீடியோ பதிவு செய்யலாம்

கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள் கண்ணாடி அணிவதற்கு பதிலாக கன்டாக்ட் லென்ஸ்களையே (Contact Lense) பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இக் கொன்டாக்ட் லென்ஸில் பிற்காலத்தில் தொழில்நுட்பங்களும் புகுத்தப்பட்டன.

குறிப்பாக கூகுள் மற்றும் சம்சுங் நிறுவனங்கள் கொன்டாக்ட் லென்ஸினை மிகவும் மெலிதானதாக வடிவமைத்ததுடன், சிறிய ரக கமெராவினையும் இணைத்து சாதனை படைத்திருந்தது.

ஆனால் சோனி நிறுவனம் இவற்றினை எல்லாம் தாண்டி கண் சிமிட்டுவதன் மூலம் காட்சிகளை வீடியோ பதிவு செய்து அவற்றினை சேமித்து வைக்கக்கூடிய கொன்டாக்ட் லென்ஸினை உருவாக்கியுள்ளது.

சாதாரண ஒரு மனிதரின் கண் சிமிட்டும் நேரம் 0.2 செக்கன்களிலிருந்து 0.4 செக்கன்கள் வரை எடுக்கும்.

எனினும் இக் கொன்டாக்ட் லென்ஸ் ஆனது 0.5 செக்கன்கள் வரையான நீடித்த நேர இடைவெளியிலும் செயல்படக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இத் தொழில்நுட்பமானது ஸ்மார்ட் ஐ (Smart Eye) என அழைக்கப்படுகின்றது.

சூரிய சக்தியில் இயங்கும் Solar Power Bank-ia அய்வார்ஸ் வெம்பிரிஸ் என்பவர் கண்டுபிடித்து அசத்தியுள்ளார்.

திட நிலை இயற்பியல் துறையில் 14 ஆண்டுகள் அனுபவம் கொண்ட




இவர், காப்பர் இண்டியம் கால்லியம் செலனைட் சோலார் பேனலை தன்னுடைய தயாரிப்புக்கு பயன்படுத்தியுள்ளார்.

இதன் சிறப்பம்சம் இதன் எடைதான். இதன் எடை 100 கிராம் மட்டுமே சந்தையில் 'Power Bank'கள் கிடைத்தாலும் இந்த அளவு குறைந்த எடைக்கு இல்லை.

இந்த சக்தி வங்கியை மடக்கியும் பயன்படுத்திக் கொள்ளலாம். GoSolar என பெயரிடப்பட்ட இதை சிறிய சாதனங்களான ஸ்மார்ட் போன், கமெரா, MP3 பிளேயர் ஆகியவற்றிக்கு இதை பயன்படுத்தலாம்.



## எக்கச்சக்கமா சேமிக்கலாம்

தரவுகளை நிரந்தரமாகவும், அதிகளவிலும் சேமிப்பதற்கு துணைச் சேமிப்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிற்கிடையிலான ஒப்பீட்டில் வன்றட்டுக்களிலே (Hard Disk) அதிக தரவுகள் சேமிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

ஆனாலும் வன்றட்டுக்களுக்கு பதிலாக ளுளுனு கார்ட்கள் பயன்படுத்தப்படுவது தற்போது அதிகரித்து வருகின்றது. வன்றட்டுக்களுடன் ஒப்பிடுகையில் SSD கார்ட்கள் விரைவாக தரவுகளை கடத்தக்கூடியதாக இருப்பதுடன், லப்டொப் போன்ற கணினிகளில் மின் கலங்களின் நீண்ட நேரச் செயற்பாட்டிற்கு உத்தரவாதம் உடையதாக காணப்படுகின்றது.

ஆனாலும் SSD கார்ட்கள் வன்றட்டுக்களுடன் ஒப்பிடுகையில் விலை அதிகமாகும். இதனால் குறைந்த சேமிப்பு கொள்ளவினை உடைய SSD கார்ட்களே இதுவரை உருவாக்கப்பட்டு வந்தது.

முதன் முறையாக Crucial MX300 எனும் 750GB சேமிப்பு கொள்ளவு உடைய SSD அதிகூடிய கொள்ளவினைக் கொண்ட கார்ட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இது தரவுகளை 530 MB/s எனும் வேகத்தில் வாசிக்கக்கூடியதாகவும், 510 MB/s வேகத்தில் பதியக்கூடியதாகவும் இருக்கின்றது. இதன் விலையானது 208 அமெரிக்க டொலர்கள் ஆகும். தரவுகளை நிரந்தரமாகவும், அதிகளவிலும் சேமிப்பதற்கு துணைச் சேமிப்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றிற்கிடையிலான ஒப்பீட்டில் வன்றட்டுக்களிலே (Hard Disk) அதிக தரவுகள் சேமிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது. வன்றட்டுக்களுக்கு பதிலாக SSD கார்ட்கள் பயன்படுத்தப்படுவது தற்போது அதிகரித்து வருகின்றது.

வன்றட்டுக்களுடன் ஒப்பிடுகையில் SSD கார்ட்கள் விரைவாக தரவுகளை கடத்தக்கூடியதாக இருப்பதுடன், லப்டொப் போன்ற கணினிகளில் மின்கலங்களின் நீண்ட நேரச் செயற்பாட்டிற்கு உத்தரவாதம் உடையதாக காணப்படுகின்றது. SSD கார்ட்கள் வன்றட்டுக்களுடன் ஒப்பிடுகையில் விலை அதிகமாகும்.

இதன் விலையானது 208 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

**உங்களுக்கு இது விடயங்கள் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com

ஜெ.யோகராஜ் (**email Address :** yogaraj35@gmail.com)





# பிள்ளைகளை அடித்து வளர்ப்பது ஆபத்து!



அடிக்கிற கைதான், அணைக்கும் என்பது உண்மையோ, பொய்யோ, ஆனால், அடி வாங்குகிற குழந்தை, பின்னாளில் பெற்றோரையும், சமூகத்தையும் எதிர்க்கும் குணம் கொண்டவர்களாக மாறுகின்றனர். கடந்த, 50 வருடங்களாக, 1,60,000 குழந்தைகளிடம் செய்யப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், உளவியல் வல்லுனர்கள் இந்த முடிவுக்குத்தான் வந்திருக்கிறார்கள். 'பெற்றோர் தங்கள் குழந்தைகள் சொல்படி கேட்கவேண்டும் அல்லது தவறான செயல்களில் ஈடுபடுவதை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அடித்தாலும், குழந்தைகளிடம் அதற்கு நேர்மாறான விளைவுகளையே அது ஏற்படுத்துகிறது என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் கிடைத்துள்ளன, என்கிறார் 'ஜர்னல் ஆப் பேமிலி சைக்காலஜி' இதழில் அந்த ஆய்வுக் கட்டுரையை எழுதிய எலிசபெத் ஜெர்ஷாப்.

சிறுவயதில் பலமுறை அடிவாங்கும் குழந்தைகள், பின்னாளில் மூர்க்கத்தனம், மனநல சிக்கல்கள், வெளி உலகை புரிந்து கொள்வதில் சிக்கல்கள் உள்ள குழந்தைகளாக ஆகின்றனர் என்கிறது அந்த ஆய்வு. அது மட்டுமல்ல, அப்படி அடிவாங்கி வளரும் குழந்தைகள், வன்முறையில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், தங்கள் குழந்தைகளையும் அடி உதைக்கு உள்ளாக்குபவர்களாகவும் ஆகிவிடுகின்றனர் என்கிறது அந்த ஆய்வு முடிவு.

# மகளுக்கு சொல்லிக் கொடுங்கள்



உங்கள் மகள் வாழ்க்கையில் உள்ள நல்லது கெட்டது, புதிய பல விஷயங்கள் போன்றவைகளை அறிந்து கொண்டு, அவள் வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயத்துடன் தானும் சேர்ந்தே வளர்கிறாள். இந்த பருவத்தில் தான் அவள் காதலிலும் விழுகின்றாள்.

அவள் உணர்ச்சிகளுக்கு போராட்டங்களை உண்டு பண்ணும், பல உணர்ச்சிகளை கொண்ட பல நபர்களின் அறிமுகமும் கிட்டும். அவளின் உணர்வுகளை புரிந்து கொண்டு, அவளை சரியான பாதையில் வழி நடத்திச் செல்ல நீங்கள் தான் சிறந்தவர். அதனால் காதல் பாடங்களைப் பற்றிய முக்கியத்துவத்தைப் பற்றி பார்க்கலாம்.

உங்கள் மகள் தன்னை தானே விரும்ப அவளுக்கு கற்றுக் கொடுங்கள். அவள் அவளை விரும்பினால் தான் மற்றவர்களாலும் அவள் விரும்பப்படுவாள். தன்னுடைய தேவைகளுக்கு மரியாதை கொடுத்து தன்னை தானே காதலிக்க கற்றுக் கொடுங்கள்.

"உன்னை நீ எந்த விதத்திலும் மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை." என்பதை தான் ஒரு தாய் தன் மகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அவளை மாற்ற யாராவது வலியுறுத்தினாலோ அல்லது காதலுக்கு அவள் லாயக்கில்லை என்று யாராவது வசை பாடினாலும், அவர் உங்கள் மகளுக்கு ஏற்றவர் அல்ல என்பதை அவளுக்கு புரிய வையுங்கள்.

ஒரு தாயாக பாலுணர்வை பற்றி பேச உங்களுக்கு விருப்பமிருக்காது. ஆனால் உங்கள் மகளின் உடலில் ஏற்படும் மாற்றங்கள், அவளுக்கு தேவையான சுகங்கள் மற்றும் பாலுணர்வை நேர்மறையான ஆசையாக யோசிக்க அவளுக்கு கற்றுக் கொடுத்தால், அவள் அவைகளை அனுபவிக்கும் தயார் நிலைக்கு வரும் போது பயனுள்ளதாக இருக்கும்.

ஏதோ குறை இருந்து கொண்டே இருக்கிறது என்று அவள் தொடர்ந்து குற்றஞ்சொல்ல தூண்டுகோலாக இருக்கும் சின்ன சின்ன விஷயங்களை புரிந்து கொள்ள வேண்டும். எந்த இடத்தில் தவறு உள்ளது என்பதை அறிந்து அதனை பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அவளுக்கு சொல்லிக் கொடுங்கள்.




**கீரைகளைச் சமைக்கும் போது தட்டு போட்டு மூடி சமைக்கலாமா? இதனால் சத்துக்கள் வீணாகுமா? முழுமையான சத்துக்கள் கிடைக்க வழி கூறுங்கள்.**

கீரைகள் வளரும் போது பல்வேறு இரசாயனப் பொருட்களை கிரகித்துக் கொள்கிறது.

கீரையை வேக வைக்கும் போது அந்த சூட்டில் நீராவியோடு தேவையற்றவை வெளியேறி விடும். எனவே கீரையைச் சமைக்கும் போது பாத்திரத்தைத் திறந்து வைத்து சமைப்பதுதான் நல்லது.

**குக்கரில் சாம்பார் வைக்கும்போது சில சமயங்களில் 'வெயிட் வால்வ்' வழியாகமசாலாபொங்கிவிடுகிறதே? இதை எப்படித் தவிர்க்கலாம்?**

சில சமயங்களில் அரிசி போன்ற திடப்பொருட்கள் வால்வின் வாயிலை அடைத்துக்கொள்ளும். இதனால் மசாலா வெளியே வந்திருக்கும்.

இதைத் தவிர்க்க தட்டை வைத்து மூடலாம். வெயிட் வால்வை அடைக்காமல் அவ்வப்போது சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

# கர்ப்பிணிப் பெண்கள் தேநீர் குடிக்கலாமா?



பெண்களுக்கு மிகவும் சந்தோஷமான அழகான பருவம் என்றால் அது தாய்மை அடையும் பருவம் தான்.

தாயானாள் மட்டுமே ஒரு பெண் முழுமை அடைகிறாள் என்று சொல்வதுண்டு, ஆனால் இக்கால கட்டங்களில் தனிக்குடித்தனம் பெருகி வருகிறது.

இதனால் இளம் பெண்களுக்கு கர்ப்பமாக இருக்கும் போது எதை செய்யலாம், எதை செய்யக்கூடாது என்று அறிவுரை கூறுவதற்கு கூட பெரியவர்கள் அருகில் இல்லாத நிலை தான்.

உணவுகளில் அதிகம் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும், ஏனெனில் எந்த உணவு உண்டாலும் அது குழந்தையை சென்றடையும்.

கர்ப்பிணிகள் அதிகளவு கல்சியம் சத்து மிகுந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும், பாலில் கல்சியம் நிறைந்துள்ளது, குறிப்பாக கொழுப்பு நீக்கப்பட்ட பாலை பருக வேண்டும்.

பருப்பு, பீன்ஸ், பயறு வகை உணவுகள், இரும்புசத்து மிக்க உணவுகளையும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கர்ப்பிணிகள், தண்ணீர் அதிகமாக பருக வேண்டியிருக்கும்.

கருவில் இருக்கும் குழந்தையுடன் தாய் பேச வேண்டும், அப்படி பேசுவதால் குழந்தை அமைதியுடன், தாயின் குரலைக் கேட்டுக் கொண்டு நிம்மதியாக இருக்கும். கர்ப்பமாக இருக்கும் பெண் பாட்டு கேட்டால் ஆரோக்கியமாக இருக்கும். மேலும் கருவில் இருக்கும் குழந்தைக்கு மென்மையான பாட்டுக்கள் என்றால் மிகவும் பிடிக்கும்.

கர்ப்பிணிகள் கிரீன் டீ, கோப்பி பருகுவதை தவிர்க்க வேண்டும். அதிலும் அதிகமாக கோப்பி குடித்து வந்தால் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. குழந்தை நிறை குறைவாகவும் பிறக்கக்கூடும். கோப்பியில் இருக்கும் காபின் அதற்கு காரணம். எனவே கோப்பி பருகுவதை முடிந்த அளவிற்கு தவிர்ப்பது நல்லது.

கர்ப்பிணி பெண்கள் கிரீன் டீ பருகுவதை அறவே தவிர்த்துவிட வேண்டும். அதில் காபின் அளவு அதிகம்.

# ஆன்மீகம்



# அள்ளித் தரும் அட்சய திரிதியை

அக்ஷயம் (அட்சயம்) என்றால் ஆக்ஷயம். க்ஷயம் என்றால் தேய்தல் அல்லது குறைதல் என்று பொருள். குறைவற்ற வாழ்வை அட்சயம் என்கிறார்கள். குறையில்லா மனது ஏது? இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழ்வதே அட்சயம். இந்த எண்ணம் பெருக அருள் செய்யும் நாள் அட்சயதிரிதியை. சித்திரை மாதம் வளர்பிறை திரிதியையில் வரும் புண்ணியத் திருநாள் இது.பிரளயம் முடிந்ததும் வெள்ளத்தில் மிதந்து வந்த கும்பத்தை சிவப் பரம்பொருள் உடைத்து, சிருஷ்டி மீண்டும் துவங்க அருள்செய்த திருநாள் இது. சூரியனிடமிருந்து பாண்டவர்கள் அட்சய பாத்திரம் பெற்றது இந்நாளில்தான்.

பாற்கடலைக் கடைந்தபோது ரத்தினங்கள், உச்சைஸ்ரவஸ், ஐராவதம், கல்பதரு, காம தேனு, சந்திரன், மகாலட்சுமி ஆகியோர் தோன்றினர். இப்படி அலைமகள் அவதரித்த தினம் அட்சயதிரிதியை. அவள் ஐஸ்வரிய லட்சுமியாகவும், தானிய லட்சுமியாகவும் தோன்றியதும், அவள் மாலவனின் மார்பில் இடம்பெற்றதும் அட்சய திரிதியை நன்னாளில்தான். பாற்கடலைக் கடையும்போது மேலே வந்தவள் திருமகள் திருமாலுக்குச் சொந்தமானாள். அதேபோல், தயிரைக் கடையும்போது மேலே எழும் வெண்ணெயும் கண்ணனுக்கு உரியதாகிவிட்டது! வெண்ணெயும், கல் உப்பும் மகா லட்சுமி உறையும் பொருட்கள். அட்சய திரிதியையில் இந்த இரண்டையும் வாங்குவது விசேஷம். குபேரன் லட்சுமியை பூஜித்து செல்வங்களைப் பெற்றார் என்கிறது லட்சுமி தந்திரம். எனவே, அட்சயதிரிதியையில் குபேர லட்சுமி பூஜை செய்வது சிறப்பு. அதேபோல் குபேரன் தவமிருந்து சிவனாரிடம் சங்க நிதி குபேர நிதி பெற்றதும் இந்த நாளில்தான்.பரசுராமன் அவதரித்ததும் அட்சய திரிதியையில்தான். இந்த நாளில் பரசுராமர் வழிபாடு நன்மை தரும்.வேதவியாசர் விஷ்ணுவின் அம்சம் (வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே! நமோவை ப்ரம்ம நிதயே வாஸிஷ்டாய நமோ நமஹ எனப் பிரார்த்திக்கிறது விஷ்ணு சகஸ்ரநாமம்). வருங் காலத்தில் வேதத்தை அனைவராலும் படிக்கவோ, அதன் வழி நடக்கவோ இயலாது என்பதால், வேதத்தின் சாரத்தை மகாபாரத வடிவில் கிரந்தமாக்க நினைத்தார் வியாசர்.

அதனாலேயே பாரதம் பஞ்சமோ வேதஹ – பாரதம் ஐந்தாவது வேதமாகப் போற்றப்படுகிறது. வேதவியாசர் பாரதம் எழுத விநாயகனைத் தொழுதார். அவரும்



ஒப்புக்கொண்டார். நிறுத்தாமல் எழுதும்படி சொல்லவேண்டும் என்பது கணபதியின் நிபந்தனை. அதேபோல் பொருள் புரியாமல் எழுதக்கூடாது என்பதும் வியாசரின் நிபந் தனை. இருவரும் ஒப்புக்கொள்ள, பாரதம் உருவானது. அப்படி ஒற்றை தந்தத்தையே எழுதுகோலாகக் கொண்டு, வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் பாரதம் எழுதியது, அட்சயதிரிதியையில்தான்.. பிரம்மனின் சிரசைக் கொய்த சிவனாரை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. பிரம்ம கபாலமும் அவர் கையிலேயே ஒட்டிக்கொண்டது. தீராத பசிப்பிணிக்கும் அவர் ஆளானார். கபாலம் நிறைந்தால்தான் விமோசனம் கிடைக்கும். எனினும் அது பிரம்ம கபாலம் இல்லையா? எவ்வளவு பிக்ஷை இட்டாலும் நிறையவில்லை. நிறைவில் அன்னபூரணி ஆண்டவனுக்குப் பிக்ஷையிட்டாள். கபாலமும் நிறைந்தது வயிறும் நிறைந்தது. கபாலமும் கையைவிட்டு அகன்றது. இப்படி, அன்னபூரணி பிக்ஷையிட்ட திருநாள் அட்சயதிரிதியை. எனவே, இந்த நாளில் அன்னதானம் செய்பவர்கள், வாழ்வில் அனைத்து நலன்களும் பெறுவார்கள். பொருட் களை வாங்கினால், நம் இல்லத்தில் அவள் நிரந்தரமாகத் தங்குவாள், வீட்டில் செல்வம் பெருகும் என்ற எண்ணத்தில், தங்கம் முதலான ஆபரணங்கள் வாங்குவது பிரதானமாகிவிட்டது. ஆபரணங்கள் வாங்க இயலாது எனினும், புண்ணியத் திருநாளான அட்சய திரிதியையில் லட்சுமிகரமாக ஏதேனும் வாங்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா? எனில், லட்சுமி குடியிருக்கும் பொருளான மஞ்சள், கைக் குத்தலில் வந்த முனை முறியாத பச்சரிசி, கல் உப்பு, வெண்ணெய், வெல்லம் ஆகியவற்றை வாங்கலாம்.



# சந்தர்ப்பவாதிகள்

## அத்தியாயம் 1

நித்திரை சரனுக்குச் சுலபமாக வருவதாயில்லை. புது இடம். தலையணை நன்றாக இல்லை. அவருக்கு எப்பொழுதுமே நல்ல தலையணை இல்லாவிட்டால் தூக்கம் வராது. இடமிருந்து வலம் வலமிருந்து இடம் என்று புரண்டு புரண்டு படுத்தார். நித்திராதேவி அவரைக் கண்டுகொள்ளவேயில்லை. 29 வருட சுவிஸ் வாழ்க்கையை முடித்துக் கொண்டு தன் பிள்ளைகள் இருக்கும் இலண்டன் மாநகருக்கு வந்து ஒரு மாதந்தான் ஆகின்றது.


அவருக்கு மூன்று பெண்பிள்ளைகள். மூவருமே குடும்பமாகி இலண்டனில்தான் வாழ்கின்றார்கள். சில நாட்கள் ஒரு மகள் வீடு.. இன்னும் சில நாட்கள் இன்னொருத்தி வீடு என்று தன் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார் அவர். புது இடம், தலையணை அவருக்கு ஏற்றதாக இல்லை. எனவேதான் சில சமயங்களில் நித்திரை வர மறுப்பதுண்டு. இந்த நித்திரை வர மறுக்கும் நேரங்கள் நினைவலைகள் பின்னோக்கி ஓடும்.40 வருடங்களுக்கு மேற்பட்ட வேலைசெய்த காலங்களில் அவர் அனுபவித்தவை எல்லாம் தாறுமாறாக மனத்திரையில் ஓடும்.

அப்படித்தான் அன்றும் நினைவுகள் தடம்புரண்டு பின்னோக்கி ஓடலாயின. கடந்தகால நிகழ்வுகள் ஒரு திரைப்படமாக மனதில் ஓடத் தொடங்கின..அவர் நினைவுகள் குவெத் நாட்டுப் பக்கம் தடம் புரண்டு கொண்டிருந்தன. நேற்று குவெத் பற்றிய செய்தியொன்றை வாசித்த காரணமாக இருக்கலாம். ஈராக்கியர்கள் குவைத் நாட்டை இரவோடு இரவாக முற்றுகையிட்ட சம்பவம் அவர் நினைவிற்கு வந்தது.....இலகுவில் மறக்கக்கூடிய சம்பவமா அது? நினைவுகள் கோர்வையாக வெளிவந்தன. அவருக்கு அபபொழுது 29 வயது. 35 வருடங்களுக்கு முன்னைய நிகழ்வுகள் நேற்று நடந்த சம்பவங்கள் போல மிகத் துல்லியமாக மனத் திரையில் விரிந்தன............தினசரி ஒழுங்காக பீபீசீ செய்திகளைக் கேட்கும் பழக்கம் உள்ள அவர் அன்றும் விடிகாலை ஆறு மணிக்கு கண்விழித்து அன்றைய செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

குவைத் ஈராக்கியர்களால் முற்றுகை என்று செய்தியொன்று கூறப்பட்டபோது அவர் அதிர்ந்து போனார். இங்கே எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கின்றார்கள். வெளியே போரா அவரால் அந்தச் செய்தியை உள்வாங்க முடியவில்லை. அதேசமயம் நம்பகரமான பீபீசீ செய்தியையும் கட்டுக்கதை என்று உதறித் தள்ள முடியவில்லை.பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த தன் கேரள நாட்டு நண்பனைத் தட்டி எழுப்ப முயன்றார் சரன் என்று சுருக்கமாகப் பலராலும் அழைக்கப்படும் சரவணன்.

சலீம்... சலீம்... அவன் தோளில் தட்டினார் சரன்.தூக்கம் கலைந்த எரிச்சலோடு க்ஷக்ஷஎன்ன" என்று கேட்டுவிட்டு மறுபக்கம் திரும்பிப் படுத்தான் சலீம்.

சரனுக்குக் கோபம் கோபமாக வந்தது.''அட எழும்படா'' என்று மலையாளத்தில் சற்றுக் கோபத்தோடு, சலீமை உலுப்பினார் . குவெத் நாட்டில்



அவர் புதிதாகப் பேசப் பழகிய மொழிகள் மூன்று. ஏற்கனவே தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்று மூன்று மொழிகளிலும் அவருக்குச் சரளமாகப் பேச முடியும். . கொழும்பில் 10 வருடங்கள் வேலைசெய்த போது சிங்களத்தைச் சரளமாகப் பேசக் கற்றுக் கொண்டார்.இப்பொழுது அவருடன் வேலைசெய்பவர்களில் அதிகமானவர்கள் கேரள , பம்பாய் பகுதியினர்கள், பாகிஸ்தானியர்கள், பங்களாதேஷ் நாட்டவர்கள் என்பதால் இந்தி, கேரள மொழிகளையும் அவரால் பேசக் கற்றுக் கொள்ள முடிந்தது. பொதுவாகவே இயற்கையாக அவருக்கு இறைவன் அளித்த கொடை வேகமாக மொழிகளைப் பேசக் கற்றுக் கொள்வதுதான்.ஆறு மாதங்களில் ஒரு புது மொழியை எளிதாகப் பேசக் கற்றுக் கொண்டுவிடுவார் சரன்.

பலர் இந்த மொழிகளைக் கற்றுக் கொள்ள ஏன் பின்னிற்கிறார்கள் என்று அவர் நினைப்பதுண்டு. அடுத்தவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள ஓர் அருமையான பாலந்தான் மொழி என்பது. மொழி தெரிந்தால் உலகம் விரிகின்றது. நட்புகள் தேடிவருகின்றன. புரிந்துணர்வு என்பது பலப்படுகின்றது.... அவனை எப்படியோ நித்திரையிலிருந்து எழுப்பி, செய்தியைச் சொல்ல, அவன் நம்ப மறுத்தது, பின்பு இந்தச் செய்தி உண்மைதான் என்று உறுதியாகி, அந்தப் பிராந்தியமே அல்லோகலப்பட்டதெல்லாம் அவர் நினைவில் வந்து போயின.குவைத் நாட்டின் எல்லைப்புற நாடுதான் ஈராக். ஒப்பந்த அடிப்படையில் சரன் அங்குள்ள எண்ணெய் அகழ்வுக் கம்பனியொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார். நகருக்கு வெளிப்புறம்,ஈராக் எல்லையை ஒட்டிய எண்ணெய் வயலொன்றில் முகாமிட்டு, அங்கு எண்ணெய் அகழ்வுப் பணி நடந்து கொண்டிருந்தது. இடைவிடாத 24 மணி நேர அகழ்வு. தொழிலாளிகள் அங்கு ஷிப்ட் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு 8 மணி நேரமும் ஒரு புதிய குழு வேலையை ஆரம்பிக்க வேண்டும். வெளியாட்கள் எவருமே அங்கு வர அனுமதியில்லை.

பணியாட்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. மூன்று நேரச் சாப்பாட்டு வசதி. படுக்கை வசதி. அழுக்கான உடைகளைக் கழுவி, அவற்றை அழகாக மின்அழுத்தி கொண்டு சீராக்கி, நினைத்த நேரம் எடுத்துக் கொள்ளும் வசதி அங்கிருந்தது. அவனுக்கு நல்ல ஞாபகம் இருந்தது. கடிதம் அனுப்புவதற்கான முத்திரைச் செலவை விட, வேறு எந்தச் செலவுக்கும் அந்த நிறுவனம் இடம் அளிக்கவில்லை. அப்படியொரு இராஜ வாழ்க்கை.முதலில் எங்கே எண்ணெய் ஊற்று இருக்கின்றது என்று கம்பனிக் குழுவொன்று ஆய்வை நடத்தும். ஊற்றைக் கண்டுபிடித்து விட்டால், அந்த இடத்தில் ஒரு குழாயைச் செருகி விட்டு, அந்தக் குழு நகர்ந்து அடுத்த ஆய்வுக்குத் தயாராகும். ஊற்றடியில் நட்ட குழாயைக் கிறிஸ்மஸ் மரம் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இதுதான் எண்ணெய்க் கிணறு!ஒரு காலத்தில் எண்ணெய்க் கிணறு என்றால் நமது ஊர்க் கிணறைப்போல ஒன்றாகத்தான் இருக்கும் என்று சரன் சிறுவயதில் கற்பனை செய்திருந்தார். இங்கு வேலைக்குச் சேர்ந்த பிறகுதான் அவருக்கு இந்த அரபு நாடுகளின் எண்ணெய்க் கிணறுகள் இப்படித்தான் என்பது தெரியவந்தது. எண்ணெய் வயல் என்றால் சேறும் சகதியுமாக இருக்கும் என்று நினைத்ததெல்லாம், நேரில் எல்லாவற்றையும் பார்த்த பின்பு தவிடுபொடியாகி விட்டது. எண்ணெய் என்பது எப்பொழுதும் நிலத்திற்கு அடியில் உள்ள ஒன்றுதான். நம் ஊரில் நல்ல நீர் ஊற்று. இந்த வறண்ட பாலைவனத்தில் எண்ணெய் ஊற்று. அவ்வளவுதான் வித்தியாசம். எண்ணெய் ஊற்றுள்ள அந்தப் பரந்த பாலைவனப் பிரதேசத்தையே எண்ணெய் வயல் என்று அழைக்கின்றார்கள்.

ஒன்றை அறியாத வரையில் அதற்கு நாம் ஏதொவொரு வடிவத்தைக் கொடுத்துவிடுகின்றோம். இது ஆளுக்கு ஆள் வேறுபடுவதுண்டு. அதிலும் அரைகுறையாக அறிந்தவரோ, உண்மைத் தோற்றத்தை அடியோடு நாசம் செய்து விடுவார். அதை நேரில் காணும்போதுதான் அட இதுவா என்று பிரமிப்பின் எல்லைக்கே போய்விடுகின்றோம்.

இப்படியொரு இடத்தில் சரன் பணியாற்றிக் கொண்டிருந்தபோதுதான், இந்த முற்றுகை இடம்பெற்றிருந்தது.

அவசரம் அவசரமாக உயர்அதிகாரிகள் அன்று பேச்சுவார்த்தை நடாத்தினார்கள். கம்பனிக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களில் அனைவரும் ஏறிக்கொண்டு தலைமையகம் செல்லும்படி பணிக்கப்பட்டது. முக்கியமானவற்றை எடுத்துக் கொண்டு எல்லோரும் வாகனங்களில் ஏறிக் கொண்டார்கள்.

என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை என்று நினைத்துக் கொண்டு சரனும் ஒரு வண்டியில் ஏறிக் கொண்டான். வேலையில் சேரும்போது அவரவர் கடவுச்சீட்டுகளை முதலாளிமார் கையில் ஒப்படைத்து விடுவது குவைத் சட்டம். அப்படித்தான் சரனின் கடவுச் சீட்டும் அவன் நிறுவனத்தின் தலைமையகத்தில்தான் இருந்தது. அங்கு

ஏ.ஜே.ஞானேந்திரன்

வந்திறங்கியதும், அவரவர் கடவுச்சீட்டுக்கள் கையொப்பத்துடன் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. கம்பனி தன் பங்குக்கு தன் பணியை முடித்துவிட்டது. போர் வெடிக்கு முன்பு நாட்டை விட்டு வெளியேறியாக வேண்டும்.இனி எங்களால் அவர்களுக்கு ஒரு பயனும் இல்லை. அவர்களாலும் எங்களுக்கு ஒரு பயனும் இல்லை. இதுதான் உலக நியதி. இவர்கள் மட்டும் என்ன விதிவிலக்கா? நமக்கு ஒன்றினால் இனி எந்தப் பயனுமே இல்லை என்று உறுதியாக அறிய வரும்போது அதை மெல்லக் கைகழுவி விடுகின்றோம். நித்திரை அசதி என்று வந்து விட்டால் நல்ல தலையண, சொகுசான கட்டில் என்று எந்தச் சௌகரியங்களுக்கும் உடல் காத்திருப்பதில்லை.

சங்கிலித் தொடராக இப்படிப் பல நிகழ்வுகள் அவருள் வந்து போயின. எந்த நிகழ்வு மனதுள் நின்றபோது தூக்கம் வந்தது என்று அறியாமல் அவர் தூங்கிவிட்டார்.

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டியின் கதை

குறுக்கெழுத்துப் போட்டி உலகில் அதிகமானவர்களைக் கவர்ந்த பிரபலமான விளையாட்டு. அதற்கு சிறிய வரலாறு உள்ளது. 19 ஆம் நூற்றாண்டில் முதலாவது குறுக்கெழுத்துப் போட்டி வெளியானது. சதுரங்களுக்குள் வர்த்தைக்குரிய எழுத்தில்லை.மேலும் கீழும் ஒரே மாதிரியான சதுரங்கள் இருக்கும். சிறுவர்களுக்கான வெவ்வேறு சஞ்சிகைகளில் புத்தகங்களில் சிறுவர் புதிர்கள் வெளியாகின.ஆனால், அமெரிக்காவில் தீவிரமாக பெரியவர்களின் பொழுதுபோக்காக வளர்ந்தது. குறுக்கெழுத்துப் போட்டியை முதன் முதலாக லிவர்பூல் ஆதர்வைன் என்பவர் கண்டுபிடித்தர். 1913 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியான நியூயோர்க் வேல்ட் எனும் பத்திரிகையில் முதன் முதலாக குறுக்கெழுத்துப்போட்டி வெளியானது அந்த வித்தியாசமான குறுக்கெழுத்துப்போட்டி டைமன் வடிவில் இருந்தது.கருப்பு சதுரங்கள் இருக்கவில்லை.1920 களின் ஆரம்பத்தில் குறுக்கெழுத்துப் போட்டியை சகல பத்திரிகைகளும் பிரசுரிக்க ஆரம்பித்தன. ஒரு சகாப்தத்தின் பின்னர் குறுக்கெழுத்துப் போட்டியின் முக்கிய அம்சங்கள் இன்றைய வழக்கில் உள்ளது போல் மாறத்தொடங்கியது. பத்து வருடங்களின் பின்னர் அட்லாண்டிக் கடலைத் தாண்டி ஐரோப்பாவில் குறுக்கெழுத்துப் போட்டி அறிமுகமானது. பிரிட்டனில் 1922 ஆம் ஆண்டு பெயசன்ஸ் சஞ்சிகையில் குறுக்கெழுத்துப்போட்டி பிரசுரமானது. பிரிட்டிஷில் குறுக்கெழுத்துப் போட்டியின் வடிவம் மாற்றப்பட்டது முதலாவது குறுக்கெழுத்துப்போட்டி ரைம் பேப்பரில் 1930ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி பிரசுரமானது. மாற்றியமைக்கப்பட்ட சுருக்கேழுத்துப் போட்டி அமெரிக்காவின் சுருக்கேழுத்துப் போட்டியை விட சிரம்மமாக இருந்தது.

குறுக்கெழுத்துப் போட்டி வாசகர்களிடம் மிகுந்த செல்வாக்கு பெற்றது. இரகசிய குறுக்கெழுத்துப் போட்டி ஒன்று அறிமுகமானது அதில் சொற்கள் எதுவும் இருக்கவில்லை. A.F.Richi,D.S.Mancnt ஆகிய இருவரும் குறுக்கெழுத்துப் போட்டியின் சட்ட திட்டங்களை உருவாக்கினார்கள்.

# தகவலறியும் சட்டமூலம் அரசியல் அமைப்பிற்கு முரணானது

(கொழும்பு)

தகவலறியும் சட்ட மூலத்தின் ஐந்து பிரிவுகள் அரசியல் அமைப்பிற்கு முரணானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவலறியும் சட்டமூலத்தின் ஐந்து பிரிவுகள் அரசியலமைப்பிற்கு பொருத்தமானது அல்ல என நாடாளுமன்ற சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த சட்ட மூலம் அரசியலமைப்பிற்கு பொருத்தமானதா? என கூற உச்ச நீதிமன்றத்தில் கையளித்திருந்திருந்தனர்.

இந்த சட்ட மூலத்தின் ஐந்து பகுதிகள் அரசில் அமைப்பிற்கு முரணானது எனவும் அவ்வாறே அந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று நிறைவேற்ற முடியும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

அதேநேரத்தில் பிரச்சினைக்குரிய பகுதிகளை நீக்கிவிட்டு வேண்டுமாயின் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்ற முடியும் என உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புப் படி சட்ட மூலத்தின் பகுதி 5(1)A அரசியல் அமைப்பின் பகுதிகளான 3,4,12(1) மற்றும் 14(A) ஆகிய அரசியல் அமைப்புப் பிரிவுகளுக்கு முரணானது ஆகும். அதுமாத்திரமல்லாது இந்த தகவலறியும் சட்ட மூலத்தின் பகுதிகளான 9(2)A மற்றும் 19, 43(A), 43(O) ஆகிய பகுதிகள் அரசியல் யாப்பின் 3, 4, 12(1), 44, 55 பிரிவுகளுக்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார்.



# விஜயகாந்துக்கு அவசரமாக தேவைப்படுவது அரசியலா?



(சென்னை)

உண்மையிலேயே தேமுதிக தலைவர் விஜயகாந்த்தின் உடல் நலனை நினைத்தால் கவலையாக இருக்கிறது. ஆனால் இந்தக் கவலை அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கு இல்லையோ என்ற சந்தேகமும் வருகிறது. அவருக்கு இப்போது முக்கிய தேவை அரசியலா அல்லது அமைதியான ஓய்வா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சில ஆண்டுகளாகவே விஜயகாந்த்துக்கு உடம்பு சரியில்லை. முன்பு போல அவர் இல்லை. குறிப்பாக சட்டசபையில் ஜெயலலிதாவுக்கு எதிராகவும், அதிமுக வினருக்கு எதிராகவும் தைரியமாக எழுந்து நின்று முழக்கமிட்ட விஜயகாந்த் இப்போது இல்லை.

இருப்பினும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒரு தலைவரின், முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள ஒரு தலைவரின், ஒரு முக்கியக் கூட்டணியின் தலைவரின் செயல்பாடுகள் நிச்சயம் விவாதத்துக்குட்பட்டவை என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

அந்த வகையில் விஜயகாந்த்தின் சமீபத்திய செயல்பாடுகள், அவர் நடந்து கொள்ளும் முறை, பேச்சு உள்ளிட்டவை மிகப் பெரிய கேலிக்கூத்தாக உள்ளன.

# பசிக்காக உணவைத் திருடுவது கிரிமினல் குற்றமல்ல

## - இத்தாலி நீதிமன்றம் -

(இத்தாலி)

பசிக் கொடுமையில் உணவைத் திருடுவது கிரிமினல் குற்றமாகாது என இத்தாலி நாட்டின் தலைமை நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 2011 இல் உக்ரைனைச் சேர்ந்த ரோமன் ஒஸ்ட்ரியாகோவ் என்ற நபர் இத்தாலியின் ஜெனோவா நகரில் ஒரு சூப்பர் மார்க்கெட்டில் இருந்து சீஸ் (பாலாடைக்கட்டி) மற்றும் சோஸை திருடினார். இக்குற்றத்துக்காக அவர் 6 மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் 100 யூரோ அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக இத்தாலி உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், குற்றஞ் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட சூழல் அவர் மிகுந்த பசியில் இருந்ததால் அவருக்கு உடனடியாக பசியைப் போக்க தேவைப்பட்ட அளவிலான உணவை மட்டுமே எடுத்துள்ளார். எனவே, வீடற்ற ஒருவர் பசிக்காக உணவைத் திருடுவது கிரிமினல் குற்றமல்ல' எனத் தெரிவித்துள்ளது.

# மேஜர் ஜெனரல் சுமித் மானவடுகே காலமானார்

(கொழும்பு)

ராஜகிரியவிலுள்ள அவரது வீட்டில் இருந்த போது தலையில் ஒரு கப்பு விழுந்து உயிரிழந்தார்.

தலையில் காயமடைந்து தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் சுமித் மானவடுகே உயிரிழந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் ஆட்லறி படைப்பிரிவு மற்றும் இராணுவத் தலைமையகத்தின் விளையாட்டுகளுக்கான பணிப்பாளராக இருந்த மேஜர் ஜெனரல் சுமித், தனது 55 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

தலையில் படுகாயமடைந்து தேசிய வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளார்.



சுமித் மானாவடுகே மலேஷியாவிலுள்ள உதவி ஸ்தானிகராக கடமை யாற்றினார். சென்ற ஜனவரியில் வந்த அரசாங்கம் அவரை திருப்பி அழைத்து இராணுவத்தில் எந்தப் பதவியும் கொடுக்காது வைத்திருந்தது. அதனையடுத்து அவருக்கு விளையாட்டுகளுக்கு பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பின்னர் பீரங்கிப் படையின் கேர்ணல் தளபதியாக நியமிக்கப்பட்டார். இராணுவத்தில் மூன்றாவது இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த இவருக்கு உரிய பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று விவசாயத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தார்.

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# வைகைப் புயல் வடிவேலு...

நகைச்சுவை வசனங்கள் மட்டுமின்றி அந்த வசனங்களின் உச்சரிப்பு மற்றும் அவரது உடல் மொழி போன்றவை அவரை மற்ற நகைச்சுவை நடிகர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டியது. இத்தகைய நடிப்புத் திறமையால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ரசிக்கும் நகைச்சுவை நாயகனாக வலம் வருகிறார். இவர் இதுவரை 250-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். அடுத்தவர்களை சந் தோசப்படுத்தி, சிரிக்க வைப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு ஈடு இணை எதுவுமில்லை எனக் கூறலாம். அத்தகைய அற்புதமான கலையை தமது உடல் அசைவுகளாலும், முகபாவனைகளாலும், நகைச்சுவை வசனங்களாலும், சிரிப்பு என்னும் மேடையில் அரங்கேற்றி, ஆறு வயது குழந்தைகள் முதல் அறுபது வயது பெரியவர்கள் வரை தன்னுடைய நகைச்சுவை நடிப் பால் கட்டிப்போட்ட வைத்தவர் வைகைப்புயல் வடிவேலு. என்.எஸ் கிருஷ்ணன், சந்திரபாபு, சுருளிராஜன், டி.எஸ் பாலையா, வி. கே. ராமசாமி, நாகேஷ் எனத் தொடங்கி கவுண்டமணி, செந்தில், விவேக், சந்தானம் எனப்பல நகைச்சுவை நடிகர்களைத் தமிழ் திரைப்படக் களம் சந்தித்துள்ளது. ஒவ்வொருவரும், ஒவ்வொரு காலகட்டத்தில் சிறப்பு பெற்ற நகைச்சுவையாளர்கள், ஆனால் சமகாலத்தில் அனைவரையும் கவர்ந்த நகைச்சுவை நடிகர் வடிவேலு என்றால் யாராலும் மறுக்க இயலாது. 1991 ஆம் ஆண்டு தொடங்கி 2005 வரை பல படங்களில் நகைச்சுவை நடிகராக நடித்துவந்த இவர், 2006 ஆம் ஆண்டு இயக்குனர் சங்கரின் தயாரிப்பில் சிம்புதேவனின் இயக்கத்தில் வெளிவந்த இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி என்ற திரைப்படத்தில் முதன் முதலாக இரட்டை வேடங்களில் கதாநாயகனாக நடித்தார். இதில் இவர் ஏற்று நடித்த இரண்டு கதாபாத்திரங்களும் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. வரலாற்றுப் பின்னணியை கதையாகக் கொண்டு முழுநீள நகைச்சுவை திரைப்படமாக உருவாக்கப்பட்ட இத் திரைப்படம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுத் தந்தது. அதன் பிறகு, 2008 ஆம் ஆண்டு தம்பி ராமையா இயக்கத்தில் இந்திரலோகத்தில் நா அழகப்பன் என்ற திரைப்படத்தில் மீண்டும் கதாநாயகனாக நடித்து மேலும் சிறப்பு பெற்றார். வடிவேலு திரையுலகை விட்டு இரண்டு ஆண்டு காலம் விலகி இருந்தார். தெனாலிராமன் என்ற திரைப்படத்தின் மூலமாக மீண்டும் நடிக்கத் தொடங்கினார்.

தினச்செய்தி
வாரமலர்

தினச்செய்தி சிறுகதைப் போட்டியின் வெற்றியாளர்களை வாசகர்களே தெரிவு செய்வார்கள். தினச்செய்தி போட்டி அறிவிக்கப்பட்டதையடுத்து பலர் இப் போட்டியில் பங்குபற்றுவதற்கு முன்வந்தார்கள். அதனையடுத்து வைக்கப்பட்டிருந்தால், அவர்களின் சிறுதைக-ளுடன் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும்.

ஆரம்பத்தில் இந்த சிறுகதைகளை மதிப்பீடு செய்வதற்கு சில எழுத்தாளர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து பரிசீலித்து வெற்றி,

# தினச்செய்தியின் சிறுகதைப் போட்டி வெற்றியாளர்களை வாசகர்களே தெரிவு செய்வார்கள்

மொத்தமாக 23 சிறுகதைகளை நாம் சேர்த்துக் கொண்டுள்ளோம்.

அந்த சிறுகதைகளின் விபரம் மற்றும் எழுதியவர்களின் பெயர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் தொடக்கம் இந்த சிறுகதைகள் கீழே தரப்பட்டுள்ள இலக்க வரிசைப்படி வாராவாரம் பிரசுரிக்கப்படும். அனுப்பி வைக்கப்பட்ட சிறுகதைகளை எழுதியவர்கள் தங்கள் தங்கள் புகைப்படங்களை அனுப்பி

தோல்விகளை அறிவிப்பது என்று தினச்செய்தி ஆசிரியர் குழு தீர்மானித்தது.

ஆனால் எமது இந்த முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனையடுத்து சிறுகதைப் போட்டியின் வெற்றி, தோல்விகளை நிர்ணயிப்பதற்கு வாசகர்களே சரியான நீதிபதிகள் என முடிவுசெய்து வாசகர்களிடமே விட்டுவிட்டோம்.

அதனையடுத்து வாசகர்கள் தெரிவு செய்வதற்கு இங்கே ஓர் கூப்பன் பிரசுரித்துள்ளோம்.

இந்த கூப்பனில் வாசகர்கள் தாங்கள் கருதும் முதல் பரிசுபெறும் சிறுகதையின் இலக்கம், தலைப்பு, எழுதியவர் பெயர் ஆகியவற்றுடன் வாசகர்கள் தங்கள் பெயர், முகவரியுடன் தொலைபேசி இலக்கத்தையும் சேர்த்து அனுப்பி வைக்கவேண்டும்.

அதிகப்படியான வாக்குகள் யாருக்குக் கிடைக்கின்றதோ அந்த சிறுகதையையும், எழுத்தாளரையும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். அதேபோல் அதற்கடுத்தபடியான வாக்குகளைப் பெறும் போட்டியாளர்கள் 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெற்றவர்களாக அறிவிக்கப்படும்.

எழுத்தாளர்கள் பெற்ற வாக்கு விபரம் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படும் பொழுது அறிவிக்கப்படும்.

ஏற்கனவே அறிவித்தது போல் வெற்றி பெறும் சிறுகதைகளுக்கு முதலாம் பரிசு - 10,000, இரண்டாம் பரிசு - 5,000, மூன்றாம் பரிசு - 2,500 வழங்கப்படும்.

அதுமாத்திரமல்லாது முதல் பத்து சிறுகதைகளும் தினச்செய்தி சிறுகதைத் தொகுப்பில் புத்தக வடிவில் வெளியிடப்படும்.

மேலும் புத்தக வெளியீட்டு அறிமுக விழாவின் போது சிறுகதைத் தொகுப்பில் பிரசுரமான பத்து எழுத்தாளர்களும் மேடையில் வைத்து கௌரவிக்கப்படுவார்கள்.

## போட்டிக்கு கிடைத்த சிறுகதைகளின் விபரம்



1) பெயர் : சர்மிளா அற்புதராசா
முகவரி : இல. 63 கல்விளான், துணுக்காய்.
சிறுகதை : அக்கினியில் வெந்த பூ



2) பெயர் : பராசக்தி வைரமுத்து (ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)
முகவரி : புளியம் பொக்கனை, பரந்தன்.
சிறுகதை : வாழ்வு வாழ்வதற்கே



3) பெயர் : ஶ்ரீதாஸ் ரேணுகா
முகவரி : வட்டுவனை, புலோலி தென்மேற்கு, புலோலி.
சிறுகதை : சமத்துவத்தின் சாரதிகள்



4) பெயர் : திருமதி ஜமுனாராணி செந்தில்பாலன்
முகவரி : "வீரகேசரி" நாவற்காடு, அச்சுவேலி.
சிறுகதை : ஏழைகள் அழுவதில்லை



5) பெயர் : ஶ்ரீஸ்கந்தராசன் விஸ்ணுகரன்
முகவரி : இல. 77 சந்தை வீதி, சுன்னாகம்.
சிறுகதை : கறுப்பூ அன்பூ



6) பெயர் : அகலியா சற்குணம்
முகவரி : ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
சிறுகதை : திருப்பம்



7) பெயர் : நடராசா இராமநாதன்
முகவரி : கோகுலம், உடையார் கட்டு வடக்கு, உடையார்கட்டு.
சிறுகதை : கொட்டப்பெட்டி பெத்தாச்சி



8) பெயர் : சற்குணசிங்கம் நளாஜினி
முகவரி : இல.81,மயிலணி, சுன்னாகம், யாழ்ப்பாணம்.
சிறுகதை : 'அன்பிற்காக..!', 'குடி குடியைக் கெடுக்கும்'



9) பெயர் : கந்தசாமி கௌசிகன்
முகவரி : பாடசாலை வீதி, தேத்தாத்தீவு -10, களுவாஞ்சிக்குடி, மட்.
சிறுகதை: திறமைக்கே முதலிடம்.!



10) பெயர் : ஏ.ஜே. ஞானேந்திரன்
முகவரி : அருளகம் ஆர்க் லேன், உடுவில் கிழ., சுன்னாகம்.
சிறுகதை: கொக்கரக்கோ



11) பெயர் : தம்பிராசா பரமலிங்கம்
முகவரி : 17/22A நாவலடி ஒழுங்கை, வண்-வடமேற்கு, யாழ்ப்பாணம்.
சிறுகதை: 'விடுவிப்பு'



12) பெயர் : பாலசுப்ரமணிய ஐயர் பாலச்சந்திரன் (கலைஞர் சாமஶ்ரீ தேசமான்ஜ)
முகவரி : இல.08, ஷண்முகபவனம், சுன்னாகம்.
சிறுகதை: ஐயோ கடவுளே



13) பெயர் : லோகராசா தனுசியா
முகவரி : சிங்கை நகர், புலோலி தெற்கு, புலோலி.
சிறுகதை: கோபுரங்கள் சரிகின்றன

14) பெயர் : பா. தங்கன்
முகவரி : c/o S. பாலசிங்கம், வீரபத்திரர் கோவிலடி, கோப்பாய்.
சிறுகதை : குற்றவாளிகள் யார்?

15) பெயர் : திருமதி உமாராணி பிறேமச்சந்திரன்
முகவரி : நாவலம்பதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
சிறுகதை : கோபாலு என்கின்ற கோபால கிருஸ்ணன்

16) பெயர் : கோகிலராணி இராஜ்குமார்.
முகவரி : இல.15 அம்பனை, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
சிறுகதை : திசைமாறிய பயணம்

17) பெயர் : மதனவேந்தன் வனஜா
முகவரி : கண்ணகி குடியிருப்பு, சுன்னாகம் தெற்கு.

18) பெயர் : குணலிங்கம் நிறோஜினி
முகவரி : சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
சிறுகதை: உண்மை நட்பு

19) பெயர் : தங்கலிங்கம் தமிழ்ச்செல்வி
முகவரி : சபாபதிப்பிள்ளை வீதி, றொட்டியாலடி, கண்ணகி நலன்புரி நிலையம், சுன்னாகம்.
சிறுகதை: ஒற்றுமையே பலம்

20) பெயர் : டெனிக்கா மகேந்திரன்
முகவரி : சுதுமலை மத்தி, மானிப்பாய், சிந்மயபாரதி ஒழுங்கை.
சிறுகதை: பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு

21) பெயர் : பா.பாலச்சந்திரன்
முகவரி : மயிலணி, சுன்னாகம்.
சிறுகதை: நீதி தாமதித்தாலும் ஒரு நாள் வெல்லும்

22) பெயர் : நா.யோகேந்திரநாதன்
முகவரி : வில்லு மதவடி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
சிறுகதை: நெற்றிப் பொட்டு

23) பெயர் : ப. சதீஸ்வரன்
முகவரி : வைரவர் கோவில் வீதி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.
சிறுகதை: காவல் தெய்வம்

### சிறுகதைப் போட்டிக்கான கூப்பன்

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..........................................
..........................................
சிறுகதையின் இலக்கம் : ..........................................
எழுதியவர் பெயர் : ..........................................
சிபார்சு செய்பவர் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தொலைபேசி இலக்கம் : ..........................................
.......................................... ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மே. 07, 2016 அன்று வெளியிடப்பட்டது.